
KALKI 22.11.92 ரூ. 3.00

கல்கி



நீடித்து நிலைக்குமா படிக்கும் பழக்கம்...?

எழில் கேசத்தின் ரகசியம்!




அஸ்வினி

ஹோமியோ ஹேர் ஆயில்

புதிய நற்குணங்களுடன் கூடிய சுத்த மான தேங்காய் எண்ணெய் கலந்தது.

- நரைமுடி, மற்றும் முடி உதிர்வதைத் தடுக்கிறது.
- வளமான ஆரோக்கியமான முடி வளரத்தூண்டுகிறது.
- மனதுக்கிதமான நறுமணம் கொண்டது, பிசுபிசுப்பற்றது.

இதற்கு மேலும் கூறிட வேண்டுமா...
இன்றே உபயோகித்துப் பாருங்கள்.



தயாரிப்பாளர் :
அஸ்வினி ஹோமியோ பார்மஸி
5-283 A, HP ரோடு
மூஸாபேட், ஹைதராபாத் 500 018.

கிளை அலுவலகம் :
12, 5வது தெரு, ரட்லண்ட் கேட்,
நுங்கம்பாக்கம், சென்னை - 600 006.

அனைத்து பிரபல கடைகளிலும் கிடைக்கும்.

அஸ்வினிக்கு நன்றி!

என்னுடைய வயது முப்பத்தி ஏழு. எனது நீளமுடி கொட்டி, நரையும் ஏற்படத் துவங்கியது. மிகவும் கவலையாகி விட்டது. பின்னர் ஈரோடு கண்ணன் டிபார்ட்மெண்ட்டல் ஸ்டோர்ஸ் மூலம் 'அஸ்வினி ஹேர் ஆயில்' அறிமுகம் கிடைத்தது. கடந்த மூன்று மாதமாக உபயோகித்து வருகிறேன். அஸ்வினி ஹேர் ஆயில் இவ்வளவு விரைவில் மாற்றத்தை ஏற்படுத்தும் என்று கனவிலும் எண்ணவில்லை. தற்போது என் குடும்பத்தினர் அனைவருமே உபயோகிக்கத் துவங்கி விட்டோம். எங்கள் வாழ்நாளில் மறக்க முடியாத பொருளாகி விட்டது "அஸ்வினி ஹேர் ஆயில்".

என். பூபதி ராஜா,
பத்திரிகையாளர் மக்கள் தொடர்பாளர்
ராஜ் & ராஜ் என்டர்பிரைசஸ்,
493, அக்ரஹார வீதி,
ஈரோடு - 638 001.

வானொலியில் உங்களது விளம்பரங்களைக் கேட்ட போது இதுவும் ஒரு விளம்பர யுக்தி என்றுதான் நினைத்தேன். ஆயினும் முடி நரைக்கத் தொடங்கிய எனது இந்த 43 வயதில் அஸ்வினியை உபயோகித்துப் பார்க்கலாமே என்று தொடங்கினேன். என்ன ஆச்சர்யம்! நரைமுடி உதிர்வது அறவே நின்றதோடல்லாமல் நரை மறையத் தொடங்கியது. அதோடு மட்டுமல்ல... எனது நெடுநாளைய தலைவலித் தொல்லையும் முழுவதுமாக நீங்கி விட்டது. இப்பொழுது எனது குடும்பத்திலுள்ள அனைவரும், அஸ்வினியின் குளிர்ச்சித் தன்மையை அனுபவிக்க வேண்டுமென்ற எண்ணத்தினால் அதையே உபயோகிக்க வேண்டுமென்று வற்புறுத்துகிறேன்.

துர்கா ராவ்
சோம்பேட்டா, ஸ்ரீகாகுளம் மாவட்டம்.

இப்பொழுது எத்தனையோ ஹேர் ஆயில்கள் கடைகளில் கிடைக்கின்றன. அவைகளில் பலவற்றை உபயோகித்துப் பார்த்த பின்பும் எதிலும் திருப்தியில்லை. சமீபத்தில் அஸ்வினியை உபயோகிக்கத் தொடங்கினேன். எனது தலைமுடி மென்மையும் வளமையும் கொண்டு தீராக் கருமையாகத் தொடங்கியுள்ளது. அஸ்வினி ஆயில் மிக்க மாறுபட்ட ஹேர் ஆயில் என்பதையும் அஸ்வினி குளிர்ச்சித் தன்மை வாய்ந்தது என்பதையும் அனுபவித்தறிந்து கொண்ட பின் முழு மனதோடு ஒப்புக் கொள்கிறேன்.

தி. துர்கா ராவ்
காந்தி நகர், ஏலூரு.

விரைவில் எல்லோர் நினைவிலும் நிலைத்து நிற்கும் ஹேர் ஆயில் — அஸ்வினி.

MAC/1442 A

ஆளாளுக்கு ஏரோப்ளேன்!

"மந்திரிகள் மட்டும்தான் தனி விமானங்களில் பறப்பதா. நாங்கள் எந்த விதத்தில் குறைந்தோம்?'' என்று குறைப் பட்டுக் கொண்ட உயர் அதிகாரிகள் 'சென்டிரல் போலீஸ் அமைப்பைச் சேர்ந்த விமானத்தையும், 'ஏவியேஷன் ரிசர்ச் சென்டரைச் சேர்ந்த விமானத்தையும் கல்யாணங்களில் பங்கு கொள்ளவும், குடும்ப விழாக்களில் கலந்து கொள்ளவும் பயன்படுத்த ஆரம்பித்தனர்! இது தெரிய வந்து பெரிதும் கோபமடைந்த பிரதமர், ''காபினெட் செக்ரடரியின் அனுமதியின்றி எந்த அரசு விமானத்தையும் எடுக்கக் கூடாது'' என்று பணித்திருக்கிறார்! இந்த உத்தரவை மந்திரிகளுக்கும் சேர்த்துக் கொடுத்தால் உத்தமம்! என்கிறார்கள் விஷயமறிந்த பொதுஜனங்கள்!

ஐ.ஏ.எஸ் மருத்துவர்களும் ஐ.பி.எஸ் இஞ்சீனியர்களும்!

இந்த ஆண்டு ஐ.ஏ.எஸ், ஐ.பி.எஸ் மற்றும் சென்டிரல் சர்வீஸஸ்களுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களில் 80 சதவிகிதத்தினர் மருத்துவர்களும், இஞ்சினியர்களும்! ''அரசாங்கம் இவர்களுக்குப் பல லட்சங்கள் செலவு செய்து தொழில் நுட்பக் கல்வியைக் கொடுத்திருப்பது, இவர்கள் இப்படி நிர்வாகத்தில் நுழைவதற்கா?' என்று விவாதிக்கப்படுகிறது. ''வெளிநாட்டுப் பல்கலைக் கழகங்களுக்குப் போய்ப் படித்து, அங்கே குடியேறி 'Brain Drain' உண்டாக்குவதை விட இது எவ்வளவோ ேமல் என்பது மற்றொரு வாதம். மருத்துவ, தொழில் நுட்பக் கல்வியை வேலை வாய்ப்பு அடிப்படையில் எப்படி கவர்ச்சிகரமானதாக ஆக்குவது என்பதைப் பற்றி அரசாங்கம் தீவிரமாக யோசித்து வருகிறது!''



குறைந்து வரும் புலிகள் :

புலிகள் வளர்ப்புக்காகப் பல திட்டங்கள் இருந்தும், புலிகளின் எண்ணிக்கை படிப்படியாகக் குறைந்து வருவதாகத் தெரிகிறது. இதற்கு ஒரு காரணம் புலிகளின் தேவைக்கேற்ப இரை கிடைக்காததுதான்! ஒரு புலிக்கு ஆண்டொன்றுக்கு 3000 கிலோ இறைச்சி தேவைப்படுகிறது. இந்த அளவுக்கு இரையாகக் கிடைக்க, மான் போன்ற மற்ற மிருகங்களையும் பெருக்க வேண்டும். புலிகளின் கணக்கெடுப்பு இப்போது ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை நடக்கிறது. இதை இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை ஆக்கி, புலிகளின் கால் சுவடுகளைக் கம்ப்யூட்டர் மூலம் ஆராய்ந்து, துல்லியமான கணக்கெடுப்புக்கு வழிகோலியிருக்கிறார்கள்.

- ராஜீவி நரசிம்மன்

நஷ்டத்தை லாபமாகக் காட்டும் ஜாலவித்தை!

அரசுத்துறையில் உள்ள வங்கிகள் (ஸ்டேட் பாங்க் உள்பட) சென்ற ஆண்டு ரூ. 5541 கோடி லாபம் சம்பாதித்திருப்பதாகச் செய்தி வெளியாகியுள்ளது. இது ஒரு மாயையே! ஏனெனில், திரும்பப் பெற முடியாத கடன்கள், அவற்றுக்கான செலுத்தப்படாத வட்டி இவற்றைக் கணக்கில் எடுத்துக் கொண்டால், அரசுடைமையான இருபது வங்கிகளும் ஸ்டேட் பாங்கும் அதன் துணை வங்கிகளுமாகச் சேர்ந்து மொத்தத்தில் அடைந்துள்ள லாபம் ரூ. 1318 கோடி மட்டுமே! துண்டி துருவி ஆராய்ந்தால் அரசுடைமையான பல வங்கிகள் நஷ்டத்தில் நடப்பது கூடத் தெரியவரும். சற்று விவரமாகப் பார்ப்போம் :

எல்லோருக்கும் தெரியும், வங்கிகள் பொது மக்களிடமிருந்து குறைந்த வட்டிக்கு டெபாஸிட்டுகளைப் பெற்று, கூடுதல் வட்டிக்குத் தொழில் துறைக்கும் வியாபாரத்துக்கும் கடன் தருகின்றன. இதில் அடையும் கணிசமான வருவாய் தவிர, மக்களுக்கு அளிக்கும் பல்வேறு வசதிகளுக்காகக் கமிஷன் பெறுகின்றன. ஒரு டிராஃப்ட் வழங்க கமிஷன், அசலூர் காசோலை எனில் கமிஷன், ஒரு உத்தரவாதம் (கியாரண்டி) அளிக்கக் கமிஷன் என்று பல்வேறு வகைகளில் பணம் பெறுகின்றன. மூன்றாவதாக அன்னியச் செலாவணியில் டாலர்களை ரூபாயாக மாற்றும் போதும் ரூபாயை டாலர்களாக மாற்றும் போதும் கமிஷன் பெறுகின்றன. ஆக இந்த மூன்று வித வருவாயில் பல்வேறு செலவுகள் போக மிஞ்சுவதே வங்கியின் லாபம் என்று கொள்ளலாம்.

வங்கிகள் கடன் தரும் போது சில சமயம் தொழில் அல்லது வியாபாரம் சரியாக நடக்காது போக, கடன் திரும்பி வருவதில்லை. கடன் தவணைகள் சரியாகக் கட்டப்படாததால் அத்துடன் சேர்ந்து வட்டியும் இழப்பாகிறது. இத்தகைய மோசமான கடன்களை வங்கிகள் தள்ளுபடி செய்ய நேரும். இவ்வாறு மோசமான கடன்கள் ஆண்டொன்றுக்கு அதிகபட்சமாக ஒரு சதவீதம் அனுமதிக்கப்படுகிறது. இது சர்வதேசங்களிலும் ஒப்புக் கொள்ளப்பட்ட அளவு. ஒரு வங்கி, ஒரு சதவீதத்துக்கும் அதிகமாக மோசமான (திரும்பப் பெற முடியாத) கடன்களைக் கொடுத்திருந்தால் அந்த வங்கி புத்திசாலித்தனமாக நடந்து கொள்ளவில்லை; மக்களின் பணத்தைக் கையாள்வதில் ஜாக்கிரதையாகச் செயல்படவில்லை என்று கருதப்படும்.

நம் நாட்டில் என்ன நடந்தது என்றால் அரசியல் காரணங்களுக்காக லோன் மேளா அது இது என்று வங்கிகளின் பணம் வாரி விடப்பட்டது. தவிர, அரசுடைமையான வங்கிகளின் நிர்வாகமும் கடன் தருவதில் போதிய அளவு முன் ஜாக்கிரதையாகச் செயல்படவில்லை. இதில் அரசியல்வாதிகளின் தலையீடுகள் தவிர, லஞ்ச ஊழலும் விளையாடியது உண்டு. ஆக, எல்லாமாகச் சேர்ந்து வங்கிகளின் திரும்பப் பெற முடியாத கடன்களின் அளவு கூடிக் கொண்டே போயிற்று.

ஆனால் வங்கிகள் தங்கள் வருடாந்திரக் கணக்குகளில் (பாலன்ஸ் ஷீட்) இந்தக் கடன்களைத் தள்ளுபடி செய்யாதது மட்டுமல்ல, அவற்றிலிருந்து பெறப்படாத வட்டியையும் - எப்படியும் வந்து விடும் என்ற நோக்கில் - வருமானமாகக் காட்டி வந்துள்ளன. 1992 மார்ச் 31 முடிய இப்படித்தான் வருடாந்திரக் கணக்குகள் தயாரிக்கப்பட்டிருக்கின்றன. இதனால் வங்கிகள் கொழுத்த லாபம் சம்பாதித்தது போலக் காட்டிக் கொள்ள முடிந்திருக்கிறது.

இப்போது நிதி அமைச்சரின் கண்டிப்பு காரணமாக, ரிஸர்வ் வங்கி, வருடாந்திரக் கணக்குகள் தயாரிப்பில் புதிய நடைமுறையைப் பின்பற்ற வேண்டும் என்று எல்லா வங்கிகளையும் வற்புறுத்தியுள்ளது. இதன்படி, இனி திரும்பப் பெற முடியாது என்று கருதப்படும் கடன்களுக்கு வசூலாகாத வட்டியை வருவாயாகக் காட்டக் கூடாது. அப்படி பார்க்கப் போனால் திரும்பப் பெற முடியாது என்று கருதப்படும் கடன்களைத் தள்ளுபடி செய்யவும் வங்கிகள் தயாராக வேண்டும். அதற்கும் தொகை ஒதுக்க வேண்டும். இவையெல்லாம் லாபத்தைக் கபளீகரம் செய்து விட, ஒரு சில தவிர மற்ற எல்லா அரசுடைமையான வங்கிகளும் நஷ்டக் கணக்குத்தான் காட்ட நேரிடும் என்ற அச்சம் இப்போது ஏற்பட்டிருக்கிறது. 'வங்கிகள் நஷ்டத்தில் இயங்கினால் மக்களுக்கு அவற்றிடம் நம்பிக்கை போய்விடுமே' என்ற கவலையும் ஆட்கொண்டிருக்கிறது.

இவை எல்லாமாகச் சேர்ந்து மக்களின் டெபாசிட் பணத்தைக் கையாள்வதில் ஜாக்கிரதையாக இயங்கும் ஓர் ஆரோக்கியமான திருப்பத்தை வங்கிகளிடம் ஏற்படுத்தினால் மகிழலாம்.

- வி. கோபாலன்

நாட்டு நடப்பு தெரிய வேண்டாமா?

"புஷ் போய்விட்டார், க்ளின்டன் வந்து விட்டார். பங்காரப்பாவை 'புஷ்' பண்ணிவிட்டார்கள். நாட்டில் என்ன நடக்கிறது என்றே உங்களுக்கு ஒன்றும் தெரியவில்லை...." என்றாள் மனைவி, நியூஸ் பேப்பரும் கையுமாய்.

"என்ன தெரிந்து என்ன ஆகணும் இப்போ?"

"அப்பா வரப்போகிறார் நாளைக்கு!" என்றாள் மனைவி. "அரசியல் பேசாமல் அவரால் ஒரு நிமிஷம்கூட இருக்க முடியாது. உங்களுக்கோ ஒரு மண்ணும் தெரியாது. குறைந்தபட்சம் தமிழ்நாட்டு அரசியலாவது கொஞ்சம் தெரிய வேண்டாம்? கிளம்புங்கள்; இரண்டு மூணு கட்சித் தலைவர்களைப் பார்த்துப் பேசிவிட்டு வாருங்கள்" என்றாள் கோபமாக.

பழைய பேப்பரை எல்லாம் புரட்டி அரசியல் நிலவரம் படித்துத் தெரிந்து கொண்டதில் தூசியில் தும்ம, நாசி விம்ம, உறுப்பினர் சேர்க்கை, இடைத் தேர்தல் கூட்டு எல்லாம் பற்றி விசாரிக்க, ராமமூர்த்தியை முதலில் பார்த்துவிடலாம் என்று புறப்பட்டுப் போனேன்.

நான் : அ.தி.மு.க. காரர்களே உங்கள் மெம்பர்கள் பட்டியலில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள் என்று சொல்லுகிறார்களே?

ராம : அதிமுக, திமுக, திக, கம்யூனிஸ்ட் இடது - வலது - நடு, ஃபார்வர்டு பிளாக், பேக்வேர்டு பிளாக் யார் வந்தாலும் சேர்த்துக் கொள்ளுவோம். எங்களுக்கு மெம்பர்ஷிப் எண்ணிக்கைதான் முக்கியம்.

நான் : இப்படி கன்னா பின்னா என்று வர்ஜா வர்ஜம் இல்லாமல் சேர்த்துக் கொண்டால் கொள்கை அளவில் குழப்பம் வராதா?

ராம : கொள்கையாவது, குதிரைக் கொள்ளாவது! கூட்டம் சேர்க்கணும் என்றால், இதெல்லாம் பார்த்தால் நடக்காது.

நான் : திருப்பதி மாநாடு போனீர்களா? அங்கே என்ன செய்தீர்கள்?

ராம : திருப்பதியில் நான் வேண்டிக் கொண்டேன் - கடவுளே, இனிமேலும் லட்டு சைஸைக் குறைத்துவிடாமல் பார்த்துக்கொள் என்று. ஏன் என்றால் லட்டு சைஸ் குறைந்தால், பக்தி சைஸும் குறைந்துவிடும்!

நான் : முதல்வர் 'ஜெ'யை நீங்கள் அடிக்கடி சந்தித்துப் பேசுகிறீர்களாமே?

ராம : அட, நான் எங்கே சந்தித்துப் பேசுகிறேன்? எஸ்.வி. சேகர்தான் சமீபத்தில் கூடச் சந்தித்தார்.

நான் : அதில்லை.... வந்து... மூப்பனார் உங்களை மாதிரி அடிக்கடி 'ஜெ'யைச் சந்தித்துப் பேசவில்லை என்று சொல்லுகிறார்களே?

ராம : மூப்பனாரே எந்த விழாவுக்கும் தலைமை தாங்கக் கூடியவர். அவர் எதற்கு



முதல்வரைக் கூப்பிடணும்? அதனால் இருக்கும்.

நான் : இடைத் தேர்தலில் இரட்டை இலை கூட்டு உண்டா?

ராம : ஒரே இலையாய் இருந்தாலும் கூட்டு, கறி எல்லாம் எனக்குப் பிடிக்கும். எனக்குப் பிடிக்காததே கிடையாது.

நான் : பெங்களூர் போன குழுவில் ஒருத்தர் - நவல் கிஷோர் சர்மா - மட்டும் ஆரம்பத்திலிருந்தே வாயையே திறக்காமல் ஏதோ மென்று கொண்டே இருந்தாரே?

ராம : அவர் மென்றது பான் பராக்கை. பங்காரப்பாவை அல்ல.

நான் : ஐயோ, உங்கள் கட்சியில் என்ன நடக்கிறது என்றே தெரியவில்லையே உங்களுக்கு?

ராம : கட்சியா! நான் இருக்கிற ஒரே கட்சி நடிப்புக் கட்சி.

நான் : எல்லாருமே இப்படித்தான் நடிக்கிறீர்கள். அப்புறம் ஆட்சிக்கு வந்து விடுகிறீர்கள்.... சரி, மூப்பனாரை நீங்க ஏன் எப்போதும் எதிர்த்துக் கொண்டே இருக்கணும்? கொஞ்சம் அட்ஜஸ்ட் செய்து கொண்டு போகக் கூடாதா?

ராம : சர்த்தான் போய்யா, அவர் என்ன பெரிய சூப்பர் ஸ்டாரா நான் அட்ஜஸ்ட் பண்ணிக் கொண்டு போக?

இதற்கு மேல் கேள்விகள் கைவசம் இல்லாததால் புறப்பட்டு வீடு வந்து மனைவியிடம் நான் கேட்ட கேள்விகளையும், ராமமூர்த்தி சொன்ன பதில்களையும் அப்படியே கொட்டினேன். தேள் கொட்டியது மாதிரி ஒரு துள்ளுத் துள்ளினாள் மனைவி.

''காங்கிரஸ் கட்சித் தலைவர் காத்தாடி ராமமூர்த்தி என்று யார் சொன்னது உங்களிடம்? வாழப்பாடி ராமமூர்த்தியைப் பார்த்துப் பேசிவிட்டு வாருங்கள் என்றால் நீங்கள்......''

''அடடா! ஸோ ஸாரி. போகட்டும் அடுத்த தலைவர் யாரைச் சந்திக்கலாம் சொல்லு!''


''வேண்டாம்! வேண்டாம்! சுப்பிரமணிய சுவாமியைச் சந்திக்கச் சொன்னால் பழனிக்குப் போய் மொட்டை போட்டுக் கொண்டு திரும்புவீர்கள்!''

''அப்ப உன் அப்பா....?''

''உங்களோடு அரசியல் பேசினால் அவருக்கு மூளையே குழம்பிவிடும். 'வர வேண்டாம்' என்று தந்தி கொடுத்து விடுகிறேன்.''

''அப்பாடா!'' என்று மனதுக்குள் கூறி, புன்னகையை ஒளித்துக் கொண்டேன்.

– சித்தார்த்



பார்க் டவுன் பெனிபிட் பண்ட் லிமிடெட்

PTBF

மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட நிதி நிறுவனம் துவக்கம் 1985

223, தெற்கு தங்கசாலை வீதி (முதல் மாடி), சென்னை-600 003. ☎ : 582676

பிக்சட் டிபாசிட் திட்டம்

46 நாள்	90 நாள்	6 மாதம்	1 ஆண்டு	2 ஆண்டு	3 ஆண்டு	4 ஆண்டு	5 ஆண்டு
13%	14%	15%	17%	18%	18.5	19%	20%

தனயோகம் டிபாசிட் திட்டம் - வட்டி வீதம் 20%

குறைந்த அளவு டிபாசிட் ரூ.20,000/- காலம் 5 ஆண்டுகள். மாத வட்டிக்கான செக்குகள் முன் கூட்டியே கொடுக்கப்படும்

சேவிங்ஸ் கணக்குகள் மீது 9.5% வரை வட்டி

உங்கள் டிபாசிட்டுகள் 45 மாதங்களில் 2 மடங்காகிறது 90 மாதங்களில் 4 மடங்காகிறது

காமதேனு மாபெரும் திரும்பப் பெறும் திட்டம்

பிரதி மாதம் ரூ.100/- வீதம் தொடர்ந்து 15 வருடம் செலுத்துவீர்

5-ம் ஆண்டு முடிவில் ரூ.6000/-ஐத் திரும்பப் பெறுவீர்

10-ம் ஆண்டு முடிவில் மீண்டும் ரூ.6000/- ஐத் திரும்பப் பெறுவீர்

15-ம் ஆண்டு முடிவில் மிகப் பெருந்தொகையாக ரூ.50,000/- பெறுவீர்

பென்ஷனர் நலத்திட்டம்

முதியோருக்கென்றே அளிக்கப்படும் திட்டம்

சேமிப்பு ரூ.13,000/- வட்டி வீதம் - 19% கால வரம்பு 12 மாதங்கள் மட்டுமே

முன்னதாகவே பெறும் காசோலைகள், விதவைகளும், உடல் ஊனமுற்றோர்களும் மற்றும் கல்வி, சமய அறக்கட்டளைகளும் சேர்ந்து பயன் பெறலாம்.

ரெக்கரிங் டிபாசிட் திட்டம்

பிரதி மாத டிபாசிட்	ரூ. 25/-ம் அதன் பெருக்கமும் பெற்றுக் கொள்ளப்படும் மாதங்கள் முடிவில் கிடைக்கும் தொகை						
	12	24	36	48	60	72	84
ரூ.25	330	715	1,180	1,800	2,510	3,350	4,370
ரூ.100	1,320	2,860	4,720	7,200	10,050	13,400	17,500

செல்வக்களஞ்சியம் டிபாசிட் திட்டம்

உங்கள் குழந்தையைக் குபேரனாகக் காண ஆசையா! இதோ

ரூ.7500/-ஐச் செலுத்தி 15 வருட முடிவில் ரூ.1,20,000/- பெறலாம்

ரூ.9000/-ஐச் செலுத்தி 15 வருட முடிவில் ரூ.1,44,000/- பெறலாம்

கடன் வேண்டுமா? எங்களை அணுகுங்கள், நகைக்கடன் சவரனுக்கு ரூ.2400/- வட்டி விகிதம் ரூ.1.85 கடனுக்கு உச்சவரம்பு இல்லை. தருவதில் தாமதமில்லை. R.D கட்ட வேண்டியதில்லை...

(Fridav Weeklv Holiday.)

கௌரவ ஆலோசகர்:
P. பாலசுப்ரமணியம், B.Sc
முதன்மை அறங்காவலர்,
கந்த கோட்டம், சென்னை-3

இயக்குநர் குழுத் தலைவர்
R. விவேகானந்தன், B.Com.

பங்குதாரர்களுக்கு மட்டும்: Business Hours: Week Days 8.30 a.m. to 12.30 p.m. & 2.00 p.m. to 6.00 p.m. Sunday 8.30 a.m. to 12 noon.

— சேமிப்பே செழிப்புக்கு வழிகாட்டி —

SURESH



ஆங்... நான் என்ன செய்வேன்... அரிசி, கேஸ், பெட்ரோல் விலை ஏத்திட்டாங்களே... ஐயோ, நிஜங்களை இணைக்க மாட்டேன்றீங்களே... அய்யய்யோ, சிறு சேமிப்புக்கு உலைக்க- மில்லாமே பண்ணிட்- டாங்களே... என்னைப் பெத்த ஆத்தா, சுருக்கு வாசிச்சிட்டம் என்ன ஆச்சோ, தெரியலையே.... சர்க்காரியா பாலிஸ் ஆரைகளை அம்போன்னு விட்டுட்டாங்களே... என் சொந்தப் பணத்த, போலீசை நம்பிப்பதிந்து தூபம் மந்தரமையே... பட்டுவே... ஆங்...
தென் மாநில முதல்வர்கள் மாநாடு 10-11-1992
முதல்வர்
தலைமைச் செயலர்
சபாநாயகர்
ஆஹா... அம்மா ஜெப்பானி வைக்கிறதிலேயும் அரசிதான்!
இதுவும் ஒரு மாதிரி மியூசிக்கல் சேர்! யோசித்தோ பேசாம் சொல்லுவார்... அவரு உக்கார சீட்டுல உக்காந்துட- ணும்!
முதல்வர் பதவி
சும்மா பேசறத்தான் சொல்வாரு!
என்ன பிரதர்! நீங்க மந்திரியா உட்கார முடிஞ்சுதாமா...?
பாக்யராஜ்
கண்டிப்பா நான்தான்...
என்னை விட்டா வேற யாரு?
முதல்வர்
சுகர்ந்தா, தீமுனா, அம்ஜேஸ் பண்ணி, எனக்குத் தொப்பு வராதபடிக்கு நீயுங் போகிங்க. ஆமாம்! இல்லே, புதிசாண்டு பழகிச்சிட்டுக் போயிடும், சொல்லிப்புட்டேன்!...
தலைமைச் செயலர்
பத்திரிகையாளர்



கல்கி



1992
நவம்பர் 22
மலர் : 51
இதழ் : 17
ஆங்கீரச
கார்த்திகை 7

தமிழ்த்திரு
நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி
பாப்பா. - பாரதியார்.

சந்திரலேகா விவகாரம்

திராவகம் வீசப்பட்டதில் சந்திரலேகாவின் முகம் விகாரப்பட்டுப் போனதை விட அதிகமாக, இந்த விவகாரத்தில் இப்போது தமிழக அரசின் முகம் விகாரமடைந்துள்ளது. சந்திரலேகா மீது திராவகம் வீசிய கொடியவர்களை இனம் கண்டு கைது செய்ய, இத்தனை காலமாகியும் தமிழக அரசால் முடியவில்லை என்பதே விகாரம்தான். அதைவிட விகாரம், பத்திரிகைகளை இந்த அரசு அடிக்கடி மிரட்டிக் கொண்டே இருப்பது.

ஜெயலலிதாவைப் பதவியிலிருந்து இறக்க சு. சுவாமியும் தி.மு.க.வும் தனித்தனியே மேற்கொண்டுள்ள முயற்சிகளை நாம் ஆதரிக்கவில்லை. முன்னர் தி.மு.க. ஆட்சி முறைகேடான விதத்தில் கலைக்கப்பட்டதால் அதே அளவுகோல்படி 'எப்படியாவது, என்ன செய்தாவது இந்த ஆட்சியையும் கவிழ்த்து விடலாம்; முயன்றால் முடியாதது இல்லை' என்ற எண்ணம் பரவலாக இருக்கிறது. ஒரு தவறான காரியம் இன்னொரு தவறுக்கு வழிவகுக்கக் கூடாது. தப்போ சரியோ, ஜெயலலிதாவுக்கும் அவரது கட்சிக்கும் தமிழக மக்கள் அமோக ஆதரவு அளித்தார்கள். அவர்கள் வோட்டு அளித்தது 'ஜெ'க்குத்தானேயொழிய இதர பல அ.தி.மு.க தலைவர்களுக்காக அல்ல. இது யாவரும் அறிந்த உண்மை. அவ்வாறிருக்க, 'ஜெ பதவி விலகட்டும்; ஆனால் அ.தி.மு.க. ஆட்சி நீடிக்கலாம்' என்பது போகாத ஊருக்கு வழி. வேறு கோணத்தில் பார்த்தால் ஜெ அரசை டிஸ்மிஸ் செய்யக்கூடிய நிலையில் மத்திய அரசும் இன்று இல்லை.

ஜெயலலிதா தவறுகள் பல செய்திருக்கலாம், குற்றங்கள் புரிந்திருக்கலாம். அவற்றையெல்லாம் தக்க ஆதாரங்களுடன் மக்கள் மன்றத்தில் வைத்து, அடுத்த தேர்தலுக்கு முன் வாக்காளரிடம் ஒரு மன மாற்றத்தை ஏற்படுத்துவது ஒன்றுதான் வழி.

இதற்கிடையில் ஜெ மீது பல குற்றங்களைச் சுமத்தும் போது, வாதப் பிரதிவாதங்கள் நிகழ்வதும் வார்த்தைகள் தடிப்பதும் இயற்கை. ஒன்றன் பின் ஒன்றாகப் பல குற்றச்சாட்டுக்களைச் சுமத்திய சுப்பிரமணிய சுவாமி, கடைசியாக சந்திரலேகாவைத் தமது கட்சிக்கு இழுத்திருக்கிறார். அவரது திராவகம் வீசப்பட்ட முகத்தைக் காட்டி, அதற்கும் 'ஜெ' தான் காரணம் என்பது போல் மறைமுகமாக ஒரு கருத்தைப் பரப்ப எண்ணுகிறார். இதற்கு வலுவான சாட்சியம் எதுவும் இன்று வரை காட்டப்படவில்லை. ஆனால் 'சந்திரலேகா மீண்டும் பத்திரிகை நிருபர்களைச் சந்திப்பார்' என்று கூறப்பட்டுள்ளது.

சுப்பிரமணிய சுவாமி சுமத்தும் குற்றச்சாட்டுக்களில் உண்மை இல்லை எனில்,அவர் மீது ஜெயலலிதா அவதூறு வழக்குத் தொடரலாம், தாராளமாக. ஆனால் 'அவர் கூறுவதைப் பிரசுரிக்கும் பத்திரிகைகள் எல்லாம் அவதூறு வழக்குக்குத் தயாராக வேண்டும்' என்று அத்தகைய செய்திகள் ஏதும் பிரசுரமாகு முன்பே பத்திரிகைகளை மிரட்டுவது முற்றிலும் ஜனநாயக விரோதமானது. இந்த மிரட்டலைத் தலைமைச் செயலர் மூலம் ஜெயலலிதா விடுத்துள்ளதானது பலத்த கண்டனத்துக்கு உரியது.

சுப்பிரமணிய சுவாமி மட்டும்தான் அவதூறாகப் பேசியுள்ளார் என்று கூற முடியாது; ஜெயும் கூடத்தான் அவரைக் 'கோமாளி' என்றும் அதை விடவும் கடுமையாகவும் விமர்சித்துப் பேசியிருக்கிறார். அதையெல்லாம் பத்திரிகைகள் வெளியிடும் போது ஜெ கோபப்படுவதில்லையே!

தொடக்கத்தில், 'சட்டசபையில் எதிர்க்கட்சி பலமாக இல்லையே?'' என்ற போது, ''பத்திரிகைகள் இருக்கின்றனவே'' என்று பதிலளித்த ஜெயலலிதா, பிறகு 'கூண்டு' என்றும் 'மிரட்டல்' என்றும் படிப்படியாக எப்படி மாறிப் போனார் என்பதைக் காண வியப்புடன் வருத்தமும் மேலிடுகிறது. மிரட்டலில் அவர் வெற்றி பெற முடியாது. சகிப்புத் தன்மை தேவை.

இங்கு தனிநபர் செல்வாக்கு அரசியல் நடக்காமல், கொள்கை ரீதியான கட்சி அரசியல் நடந்தால்தான் நிலைமையில் முன்னேற்றம் ஏற்படும். இதற்கு வாக்காளர்களும் விழிப்புணர்ச்சி பெற வேண்டும்.

சந்திரலேகா மீது திராவகம் வீசியவர்கள், அவர்களைத் தூண்டியவர்கள், ஆகியோரைச் சீக்கிரமாகக் கண்டுபிடித்து. நீதிமன்றத்தில் நிறுத்தினாலொழிய வதந்திகளைக் கட்டுப்படுத்த இயலாது. இதைச் செய்யாமல், 'அவதூறு வழக்குப் போடுவேன்' என்று மிரட்டுவதில் பயனில்லை. சந்திரலேகா முகத்துக்கு பிளாஸ்டிக் சர்ஜரி உண்டு. திறமையின்மையால் விகாரப்பட்டுப் போன அரசின் முகத்துக்கு பிளாஸ்டிக் சர்ஜரி செய்ய முடியாது!



* அல்லயன்ஸ் சீனிவாசன் : "தேடி வருகிறார்கள்..."

ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும்; படிக்கும் பழக்கம் குறைந்துதான் இருக்கிறது.

வேகமான பரபரப்பான வாழ்க்கை; தூர்தர்ஷன், ஸ்டார், பி.பி.ஸி., ஏ.டி.என்., கேபிள் என்று பலதரப்பட்ட டீவி; போதாக்குறைக்கு வீடியோ, சினிமா எல்லாம் போட்டி போட்டுக் கொண்டு படிக்கும் பழக்கத்தை அழித்து வருகின்றன.

படிப்பதை விட, டீவி திரையில் பார்ப்பதும் கேட்பதும் எளிதாக இருக்கலாம். ஆனால் டீ.வி. திரை சிந்தனையை அழிக்கிறது (கெட்டுப் பட்ட மூளைச் சலவை என்றே

நீடித்து நிலைக்குமா

சொல்ல வேண்டும்) என்பதும், நூல்கள் சிந்தனையைத் தூண்டுகின்றன என்பதும் கவனிக்கப்பட வேண்டும். மறக்கக் கூடாத இன்னொரு விஷயம் டீ.வி. ரொம்ப நேரம் பார்ப்பது கண்களுக்குக் கெடுதல்; நூல்கள் படிப்பதோ கண்களுக்குப் பயிற்சி அளித்து, ஆரோக்கியமாய் இருக்கச் செய்யும்.

ஆக, படிக்கும் பழக்கம் மடிந்து போகாமல் செழித்து வளர அரசும் புத்தகப் பதிப்பாளர்களும் முயற்சி எடுக்க வேண்டியது அவசியமாகிறது. இவ் விஷயத்தில் என்ன நடக்கிறது என்று பார்த்தால் ஏமாற்றமே ஏற்படுகிறது.

விமர்சனமும் விளம்பரமும்

''நீங்கள் நேஷனல் புக் டிரஸ்ட்டின் டிரஸ்டியாக இருக்கிறீர்கள். சாகித்ய அகாதமி ஆட்சிக் குழுவில் இருந்திருக்கிறீர்கள். இந்த இரண்டு அமைப்புக்களும் படிக்கும் பழக்கத்தை ஊக்குவிக்க உதவியுள்ளனவா?''

இதற்குப் பதில் சொன்னார் இந்திரா பார்த்தசாரதி :

''இந்த அமைப்புக்கள் புத்தகங்களை வெளியிடுகின்றனவேயொழிய, விற்பனை பற்றி இவர்கள் கவலைப்படவில்லை. அரசாங்க அமைப்பு என்றால் இதுதான்



* சக்தி வைத்தீஸ்வரன் : "தமிழ் நூல்களையும் கேட்கிறார்கள்..."

பிரச்னை! இங்கே சென்னையில் சாகித்ய அகாதமி நூல்கள் எங்கே கிடைக்கும் என்று உங்களுக்குத் தெரியுமா? இந்த இடத்தில் இந்தப் புத்தகம் கிடைக்கும் என்று வாசகப் பொது மக்களுக்குத் தெரிய வேண்டாமா?'' என்று கேட்கும் இ. பா., ''புத்தக விமர்சனங்கள் எத்தனை வார அல்லது மாதப் பத்திரிகைகளில் வெளியிடுகிறார்கள்?'' என்றும் அங்கலாய்ப்புடன் கேட்கிறார். ''எல்லாப் புத்தகங்கள் பற்றியும் சகட்டு மேனிக்கு விமர்சனம் எழுத வேண்டாம். குறைந்த பட்சம் நல்ல புத்தகம் ஏதாவது சமீபத்தில் வெளியிடப்பட்டிருந்தால், அதைப் பற்றி ஒரு பக்கம் விமர்சனம் வெளியிடலாமே?''

விளம்பரமும் செய்யலாம்தான். என்னென்ன புத்தகங்கள் படிப்பதற்கு இருக்கின்றன என்று மக்களுக்குத் தெரியவரும். ஆனால் பதிப்பகத்தினர் சிலர்தான் விளம்பரம் செய்கிறார்கள். அதுவும் மிகக் குறை

வாக. ''ஏன் போதிய அளவுக்குச் செய்வ தில்லை?'' என்று அல்லயன்ஸ் சீனிவாச னிடம் கேட்டோம்.

''முக்கிய காரணம் மிகக் குறைந்த லாபம். அவ்வப்போது விளம்பரம் செய் கிறோம். விவரமான விலைப் பட்டியல் தயாரித்து விரும்பிக் கேட்போருக்குத் தபா லில் அனுப்புகிறோம்'' என்றார்.

செய்யப்படும் விளம்பரங்களும் வேண்டும். டவியும் கேபிள் டவியும் மலிவாக இருப்பதுதானே அவற்றுக்குக் கூடுதல் கவர்ச்சி! ''இங்கே புத்தகங்களை முப்பதும் நாற்பதும் கொடுத்து வாங்கும் சக்தி படைத்தவர்கள் இருக்கிறார்கள். ஆனால் அந்தப் பொருளாதார மட்டத்தில்

படிக்கும் பழக்கம்..?





● இந்திரா பார்த்தசாரதி : ''வெளியிட்டால் போதுமா? விற்க வேண்டாமா?''

கவர்ச்சிகரமாக இல்லை என்பது ஒரு குறை தான். அரைப் பக்கமோ முழு பக்கமோ, விளம்பரமும் ஒரு விலைப் பட்டியல் போலிருக்கிறதேயன்றி, வாசகர்களை வாங்கத் தூண்டும் விதத்தில் அமைய வில்லை. இதில் பதிப்பகத்தினர் கவனம் செலுத்துவது அவசியம். காலம் மாறிக் கொண்டு வருகிறதே!

வாங்கும் சக்தி ஏது?

புத்தகங்கள் தயாராகி விட்டால் போதாது; மக்களுக்கு வாங்கும் சக்தி



● சங்கரய்யா: ''பெரும் பாலும் டெக்னிகல் நூல்களே...''

வாழ்பவர்கள் பெரும்பாலும் ஆங்கிலத்தில் தேர்ச்சி பெற்றவர்களாக விளங்கி, ஆங்கில நூல்களையே வாங்குகிறார்கள். தமிழ் நூல் களை வாங்குவது மிகவும் குறைவுதான், இல்லையா?''

இதை உடனே மறுக்கிறார் அல்லயன்ஸ் சீனிவாசன். ''நாங்கள் முக்கியமாக நம்பி இருப்பதே தனிப்பட்ட வாடிக்கையாளர் களைத்தான். எங்கள் கடை தேடி வந்து புத்த கங்களைப் புரட்டிப் பார்த்துத் தேர்ந் தெடுத்துக் கொண்டு போகிறவர்கள்



● மாவட்ட மத்திய நூலகம்.

நிறையப் பேர் இருக்கிறார்கள். இப்படி ஒவ்வொரு பதிப்பகத்தாருக்கும் உண்டு.''

அலையன்ஸ் ஸ்ரீனிவாசன் அழுத்தம் திருத்தமாகச் சொன்னாலும் நமது பதிப்பகத்தினர் பலர், 'ஆட்சியில் இருப்பது யார், எந்தக் கட்சி? யார் எழுதிய, எந்த மாதிரியான நூல்களைப் பிரசுரித்தால் நூலக ஆர்டர் பிடிக்கலாம்?' என்று யோசித்துச் செயல்படுகிறார்கள் என்பதும் உண்மையே.

''நம் தமிழ்ப் பதிப்பாளர்கள், புத்தகத்தைப் பணம் கொடுத்து வாங்கும் வாசகரை மனத்தில் கொண்டு நூல்கள் வெளியிடுவதில்லை. நூலக ஆர்டர்களை மட்டுமே பிரதானமாக நம்பித் தொழில் செய்கின்றனர். கேரளத்திலும், மேற்கு வங்கத்திலும் தனிப்பட்டவர்கள் காசு கொடுத்துப் புத்தகம் வாங்குகிறார்கள். அதனால் அங்கே எல்லாம் ஓர் எழுத்தாளர் எழுத்தையே முழு நேரத் தொழிலாகக் கொள்ள முடிகிறது. தமிழில் அப்படி யாராவது இருக்கிறார்களா என்று எனக்குத் தெரியவில்லை!'' என்கிறார் இ.பா.

படிக்கும் பசி தீர...

பொதுவாக நோக்குமிடத்து, பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள நமது மக்களின் படிக்கும் பசியைத் தணிக்க வேண்டிய நிலையில் உள்ளவை நூலகங்களே என்பது தெளிவு. ''ஒரு புத்தகம் குறைந்தபட்சம் 50 முதல் 75 பேரால் படிக்கப்படுகிறது'' என்கிறார் வருடச் சந்தா மூன்றே ரூபாய் வாங்கும் சென்னை மத்திய தேவநேயப் பாவாணர் நூலகர் ஜெகநீசன். (உறுப்பினர் கட்டணம் என ஒரு புத்தகத்துக்கு டெபாசிட் ரூ 10 தனி.)

''இந்த நூலகத்தில் இரண்டாவது மாடியில் தனியே ரெஃபரன்ஸ் செக்ஷன் செயல்படுகிறது. இதனைப் பயன்படுத்துவோர் எண்ணிக்கையும் அதிகரித்து வருகிறது'' என்று கூறும் ஜெகநீசன், ''வீடியோவில் யு.ஜி.ஸி. புரோகிராம்களைப் பார்க்க வசதியும் பார்வை இழந்தோர் கேட்டுப் பயன் பெற 250 கல்வி சார்ந்த காஸெட்டுகளும் பிரெய்ல் நூல்களும் உள்ளன'' என்றும் கூறுகிறார்.

ஒரு புள்ளி விவரப்படி சென்ற ஆண்டு 1,29,613 உறுப்பினர்கள்; இந்த ஆண்டு 1,38,834. நூலகத்துக்கு வருபவர்கள் எண்ணிக்கையும், புத்தகம் எடுத்துப் படிப்போர் எண்ணிக்கையும் அதிகரித்துக் கொண்டே வந்திருக்கிறது. எனினும், ஜனத் தொகைப் பெருக்கத்தையும் எழுத்தறிவுப் பெருக்கத்தையும் நோக்க, படிக்கும் பழக்கம் பெருகவில்லை என்பதில் சந்தேகமே இல்லை.

எப்படி கவர்வது?

எனவே அரசு நடத்தும் நூலகங்கள் அழுது வடியாமல் மேலும் மேலும் உறுப்பினர்களை ஈர்க்கும்விதமாகக் கவர்ச்சிகரமாக அமைய வேண்டியதும், அங்கே புதிய புதிய நூல்கள் வந்து கொண்டே இருக்க வேண்டியதும் அத்தியாவசியம். இதைத் தவிர வேறு எந்த விதங்களில் மக்களைக் கவர்வது?

சமீபத்தில் நூலகத் துறை இயக்குனராகப் பொறுப்பு ஏற்றுள்ள ரங்கநாதன் சொல்கிறார் :

''உணவு அமைச்சராக இருக்கும் ஜி. விசுவநாதன், வேலூரில் முன்பு வாசகர் வட்டம் என்ற அமைப்பு நடத்தி வந்தார். நூல்களை அறிமுகப்படுத்தி, விமர்சனமும் செய்யும் அந்தக் கூட்டத்தில் நூல் ஆசிரியரும் கலந்து கொள்ளுவார். இந்த வழக்கத்தை மறுபடி தொடங்கும்படி கேட்டுக் கொண்டிருக்கிறேன். எல்லா மாவட்டங்களிலும் இதைச் செய்தால் நல்லது!'' காமராஜர் மாவட்டம் முத்துராமலிங்கபுரத்தில் பொது மக்களிடமே ஏற்பட்ட விழிப்புணர்ச்சி காரணமாக, அவர்களே நூலகத்துக்கு இடம் கொடுத்திருக்கிறார்களாம். வத்திராயிருப்பில் தியாகிகளே நூலகக் கட்டடம் கட்டுவதை மேற்பார்வை இடுகிறார்களாம். 'குடியும் கொடியும் இல்லாத ஒரு கிராமத்தை நூலகம் உருவாக்குகிறது' என்பது இவர்கள் கருத்து.

''நூலகத்தினால் நன்மை'' என்று ஏற்பட்டு விட்ட பிறகு நூலகங்கள் மக்களை மேலும் மேலும் கவர்ந்து இழுக்குமாறு அமைவதும் இயங்குவதும் அவசியம் தானே. இவ் விஷயத்தில் மாவட்ட மத்திய நூலகத்துக்குப் பின்னாலேயே இருக்கும் பிரிட்டிஷ் கௌன்சில் லைப்ரரியிடமிருந்து நாம் கற்றுக் கொள்ளக்கூடியது எவ்வளவோ இருக்கிறது.

பிரிட்டிஷ் கௌன்சில் லைப்ரரி பிரம்மாண்டமானது. அரசு நூலகத்தை ஒப்பிடும் போது, அழகும் சோபிதமும் கொண்டது.

''இங்கே வருகிறவர்கள் டாக்டர்கள், வழக்கறிஞர்கள், கட்டடக் கலைஞர்கள், இஞ்சினீயர்கள், பேராசிரியர்கள், கல்லூரி மாணவர்கள்!'' என்கிறார் பிரதம நூலகர் சங்கரய்யா.

''அதனால் பெரும்பாலும் டெக்னிகல் நூல்களே இங்கு அதிகம். ஆனால் பிற சப்ஜெக்ட்டுகளிலும் எங்களிடம் நூல்கள் உண்டு!'' என்கிறார் இவர். பன்னிரண்டாயிரம் உறுப்பினர்கள் கொண்ட இந்த நூலகத்தில் ஒரு நாளைக்கு 1500க்கு மேற்பட்ட புத்தகங்களை எடுத்துச் செல்லுகிறார்கள்.

காலத்தின் மதிப்பு

உழைக்க நேரத்தை எடுத்துக் கொள்;
அது வெற்றியின் விலை.
சிந்திக்க நேரத்தை எடுத்துக் கொள்;
அது வலிமையின் ஊற்று.
விளையாட நேரத்தை எடுத்துக்

வீடியோவில் கல்வி சம்பந்தமான காட்சிகள் போட்டுப் பார்க்கும் பகுதியும் உண்டு.

''உங்கள் நூலகத்தைத் தெரிந்து கொள் ளுங்கள்'' என்ற தலைப்பில் பிரதி மாதமும் இரண்டாம் சனிக்கிழமை வகுப்புகள் நடத்தி, வசதிகளையும் நூல்கள் இருக்கு மிடத்தையும் விளக்குகிறார்கள்.

பணம் எங்கே?

''நூலகங்கள் நேர்த்தியாக இயங்க வேண்டும் என்று சுலபமாகச் சொல்லி விட லாம்; ஆனால் பணத்துக்கு எங்கே போவது? 'நூலக செஸ்' என்று வசூலிக்கப்படும் தொகை கூட நகராட்சிகளின் வேறு செலவு களுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு வரு கின்றன. அப்படியே மாநில அரசு நூல கங்களுக்கு என்று ஒதுக்கும் தொகையும் பெரும்பாலும் கட்டடங்களுக்கும் சம்பளப் பட்டுவாடாவுக்கும் போய் விடுகின்றன. நூல்கள் வாங்க மிஞ்சுவது மிகவும் குறைவு அல்லவா?''

இதற்குப் பதில் சொல்கிறார் நூலகத் துறை இயக்குனர் ரங்கநாதன் :

''அதிர்ஷ்டவசமாக, லைப்ரரி செஸ்ஸி லிருந்து இந்த முறை ஒரு கோடி ரூபாயை, ஒரே செக்காக வசூலித்துக் கொண்டு வந்து ஒரு சாதனையே செய்திருக்கிறார் மாநில நூலக அதிகாரி மிஸஸ் ஷெரீன் அகமது. இப்படி இதுவரை வாங்கியதாகச் சரித் திரமே கிடையாது. அவரை இதற்காகப் பாராட்டுகிறேன்! இதைத் தவிர, ஆயிரம் ரூபாய் நன்கொடை வழங்கும் அன்பர் களுக்குப் புரவலர் பட்டம் சூட்டி, அமைச் சர் கையெழுத்திட்ட பட்டயமும் கொடுத்து, அவர்களது பெயரையும் நூலகத்தில் பொறித்து வைக்கிறார்கள். சேலம் இதில் முதல் இடத்தைப் பிடித்திருக்கிறது - 600 புரவலர்களுடன்!''

ஓராசிரியர் பள்ளிகள் மறைந்தாலும், ஒரு நூலகர் நூலகங்கள் இருப்பதில் ஒரு குறை: படிக்க வேண்டும் என்ற ஆர்வத்தைத் தூண்டி விட்ட பிறகு, ஒரு நூலகர் மட்டும் இருக்கும் நூலகத்தில், நூலகர் அவசர விடுப்பில் 15 நாள் 20 நாள் சென்று விட்டால் பூட்டித்தான் கிடக்குமாம்! வாசகர் வந்து வந்து பார்த்து விட்டுத் திரும்பிப் போகும் போது வெறுப்புத்தானே வரும்? ஓர் உதவி யாளரை நியமித்தால் இதைத் தவிர்க்க லாமே?

எத்தகைய நூல்கள்?

சரி, இந்த நூலகங்களிலெல்லாம் மக்கள் எத்தகைய நூல்களை அதிகமாக விரும்பிப் படிக்கிறார்கள்?

தாராபுரத்தில் ஒரு வாசகர், ஜே. கிருஷ்ணமூர்த்தியின் தமிழ் மொழிபெயர்ப் புப் புத்தகம் வேண்டும் என்று கேட்டாராம். ''அவருக்காகவாவது நான் ஜே.கே.யின் புத்தகத்தை அங்கே அனுப்பி வைக்க வேண் டும்!'' என்கிறார் இயக்குனர் ரங்கநாதன்.

''ஜே. கிருஷ்ணமூர்த்தியா? அடே யப்பா!'' என்று வியந்து போகிறோம். ஆனால் அந்த வாசகர் ஒரு விதிவிலக்குதான்.

ஐந்து மாவட்டங்களில் சுற்றுப்பயணம் செய்து திரும்பியிருக்கும் ரங்கநாதன், ''இந்த ஐந்து மாவட்டங்களிலுமே அதிகம் விரும்பிப் படிக்கப்படுபவை நாவல்கள் தான்'' என்கிறார்.


இந்திரா பார்த்தசாரதியின் கருத்து : ''நம்மிடத்தில் எது சீரியஸ், எது சீரியஸ் அல்லாதது என்ற உண்மையான பாகுபாடே இல்லாதது ஒரு பெரிய குறை. இந்த மனோ பாவம் எல்லா நிலைகளிலும் பிரதிபலிக் கிறது. துப்பறியும் கதைகள் முதலாவதாக வும், ஆன்மீக நூல்கள் அடுத்தபடியாகவும், சுயமுன்னேற்றப் புத்தகங்கள் அதற்கடுத்த படியாகவும் விற்பனை ஆவதாகச் சொல் லுகிறார்கள். தமிழ் வாசகர்களின் ரசனை யைச் சரியாகப் புரிந்து கொள்ள முடிய வில்லை. இந்த விஷயத்தில் யாராவது தீஸிஸ் எழுதி பி.எச்.டி. கூட வாங்கலாம்!''

மக்கள் விரும்புவது படிக்க வேண்டி யது ஆகிய இரண்டையும் நூலகங்கள் கொடுக்கத் தயாராகத்தான் இருக்க வேண் டும். இன்று நாவல் வாங்கிப் போகிறவர் நாளை ஒரு தேவைக்கு விஞ்ஞான நூலை யும் தேடி எடுப்பார்.

லெண்டிங் லைப்ரரி

அயல்நாட்டு நூலகம், உள்ளூர் நூலகம் இரண்டுமே இருந்தும், தனியார் நடத்தும் 'லெண்டிங் லைப்ரரி'களுக்கும் சென்னை யில் நல்ல வரவேற்பு இருக்கிறது.

பதினெட்டு வருடங்களுக்கு முன் ஐந்தே உறுப்பினர்களுடனும் 800 புத்தகங்க ளுடனும் ஆரம்பித்த 'அனுக்ரஹா' நூல கத்தில் இன்றைக்கு உறுப்பினர் எண் ணிக்கை 3084. புத்தகங்களும் ஆயிரக்



கொள்; அது இள மையின் ரகசியம்.

படிக்க நேரத் தை எடுத்துக் கொள்; அது அறி வின் வாயில்.

கனவு காண நேரத்தை எடுத்துக் கொள்; அது சாதனைக்கு வழி.

நல்லவை புரிய நேரத்தை எடுத்துக் கொள். அது இன்பத்தின் பாதை.

அன்பு காட்ட நேரத்தை எடுத்துக் கொள்; அது இறைவனின் கொடை.

சேவை புரிய நேரத்தை எடுத்துக்

கணக்கில். ஆனால் பெரும்பாலும் ஆங்கில நூல்கள்தாம்.

''இப்போது ஃப்ளாட்டுகள் நிறைய வந்து விட்ட பிறகு, தமிழ் நூல்களும் கேட்க ஆரம்பித்திருக்கிறார்கள். அதனால் தேடித் தேடிச் சில தமிழ் நூல்களும் வாங்கி வைத்திருக்கிறேன்!'' என்கிறார் கஸ்தூரி மைத்ரேயன். மற்ற நூலகங்களைப் போலவே, திருப்பித் தரத் தாமதம் ஆனால் அபராதத் தொகை கட்ட வேண்டும்!

லெண்டிங் லைப்ரரிகளில் வாசகர்கள் பெரும்பாலும் நாடுவது 'மில்ஸ் அண்ட் பூன்' முக்கோணக் காதல் கதைகள். (இவை இப்போது கிட்டத்தட்ட மஞ்சள் நூல்கள்) அல்லது ஆங்கில best seller கள். இலக்கியத் தரமான புத்தகங்களும் சிந்தனையைத் தூண்டும் எழுத்துக்களும் புதுக் கருக்கு மாறாமல் இருப்பதைப் பல நூலகங்களில் பார்க்கலாம்.

புத்தகப் பித்தர்கள்

கோட்டூர்புரத்தில் வசிக்கும் கீதா சந்துருவின் குடும்பமே புத்தகப் பித்தர்கள் என அறியும் போது மகிழ்ச்சியும் அவர்கள் எத்தகைய புத்தகங்கள் படிக்கிறார்கள் என அறியும் போது ஆறுதலும் உண்டாகிறது.

''பையன் அர்ஜுனைப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பி வைத்து விட்டால் நிம்மதியாகப் படிப்பேன்!'' என்கிறார் கீதா. பையன் இருந்தால், ''நீ மட்டும் படிக்கிறாயே, எனக்கும் சொல்!'' என்று துளைப்பானாம்.

''தாமஸ் ஹார்டி போன்ற சீரியஸ் நாவல் ஆசிரியர்களையும் படிப்பேன், வின்ஸ்டன் கிரகாம், ஜெரால்ட் டர்ரல், விக்டோரியா ஹோல்ட் போன்றவர்களையும் படிப்பேன்'' என்கிறார் கீதா.

கணவர் சந்துரு சிறு தொழில் அதிபர். ஆர்தர் ஹெய்லி, அலிஸ்டேர் மக்ளீன் தவிர, லாரன்ஸ் சாண்டர்ஸ், அய்சக் அசிமாவும் படிக்கிறார். படிக்கும் நேரம்?

''அதிகாலை. மூன்றரை, நாலு மணிக்கு எழுந்து விட்டால் முதலில் படிப்பதற்குத் தான் நேரம் ஒதுக்குவேன்!''

''டீவி பாதிப்பு இல்லையா?''

''டீவியில் ஒரு மணி நேரத்துக்கு மேல் எதுவும் பார்ப்பதில்லை. ஸோ, படிப்பை அது பாதிப்பதே இல்லை!''

கீதாவின் மாமியாரும் படிக்கிறார். பி.ஜி. வோட்ஹவுஸ்தான் பிடித்த நூலாசிரியர்!

கீதா சந்துருவினுடைய குடும்பம் போன்றவை இருக்கும் வரை படிக்கும் பழக்கம் நீடித்திருக்கும் என்கிற நம்பிக்கை பிறக்கிறது. படிக்கும் பழக்கத்தை இளைய தலைமுறைக்குப் பரிச்சயப்படுத்தும் பொறுப்பு பெற்றோருக்கும் இருக்கிறது - பாட நூல்கள் அல்லாதவற்றையும் குழந்தைகளுக்கு அறிமுகப்படுத்துவதோடு அவர்களோடு சேர்ந்து படித்து, அதை ஒரு சுவையான அனுபவமாக அவர்களுக்கு ஆக்கித் தரலாம்.

'Reading is Living' என்று குறிப்பிட்டார் Dean Acheson. புத்தகம் படிப்பதை இவ்வளவு தீவிரமான மனத்துக்குகந்த ஈடுபாடாகக் கருதுபவர்கள் இன்னமும் இருக்கிறார்கள்.

"Give me a book - any day, any time" என்று கூறும் ராஜா தமது உணர்ச்சிகளை அலாதியான முறையில் விவரிக்கிறார் : ''புத்தகம் படிக்கும் போது இரு மனங்கள் ஒன்றுகின்றன. இரண்டு அறிவுகள் சங்கமிக்கின்றன. இந்த அற்புதமான அனுபவத்துக்காகவே படிக்கிறேன். ஒரு நல்ல புத்தகத்தைப் படித்து முடித்தால் ஒரு நல்ல வாழ்க்கையை வாழ்ந்த திருப்தி எனக்கு...''

''நல்ல புத்தகம்'' என்று ராஜா குறிப்பிட்டதில்தான் விஷயமே உள்ளடங்கியிருக்கிறது. பொழுதுபோக்குக்காக இலேசான விஷயங்களையே நாடுவது இன்று சகஜமாகி வருகிறது. இவற்றைத் தர, புத்தகங்கள் மட்டுமின்றி, ஏராள சஞ்சிகைகளும், அரசியல் பத்திரிகைகளும், மாத நாவல்களும் உள்ளன.

''நல்ல புத்தகங்களை இனம் கண்டு படிக்க வேண்டும்'' என்பார் ராஜாஜி. ''ஒரு புத்தகம் நம் வாழ்க்கையின் விலைமதிக்க முடியாத, திரும்பப் பெற முடியாத சில மணி நேரங்களை எடுத்துக் கொண்டு விடுகிறது; அது பதிலுக்கு நமக்கு என்ன தருகிறது என்பதைக் கணிக்க வேண்டும். நம்மை - நமது உள்ளத்தை - இப்போதுள்ள நிலையிலிருந்து ஓரளவேனும் உயர்த்துவதாக அது அமைய வேண்டும். இல்லாவிட்டால் நஷ்டம் நமக்குத்தான்.''

எது நேரம்?

''எல்லாம் சரி, படிப்பதற்கு எங்கே நேரமிருக்கிறது? ஒரே பரபரப்பான வாழ்க்கை'' என்று கூறுவோர் உண்டு. இது நொண்டிச் சமாதானமே. ஒரு நாளைக்குத் தூக்கம் வருமுன்னர் அரை மணி நேரம் படித்தால் கூட ஐம்பது பக்கங்கள் படிக்கலாம். வருஷத்துக்கு எத்தனை பக்கம்! சராசரியில் எத்தனை நூல்கள்! கணக்குப் போடுங்கள்!

பேட்டி, கட்டுரை : சாருகேசி
வண்ண அட்டை : எஃப் ஸ்டாப்
புகைப்படங்கள் : ஆர். பாலாஜி

கொள்; அது வாழ்க்கையின் குறிக்கோள்.

சிரித்து மகிழ நேரத்தை எடுத்துக் கொள்; அது இன்பத்தின் இன்னிசை.

நன்றி : தமிழ்ப்பாவை, மதுரை.
தகவல் : தா. செல்வராசன்

T. S. S. NIDHI LTD

ESTD 1973

THIRUMYLAI SASWATHA SAHAYA NIDHI LIMITED

Regd. Office: 230, R. K. Mutt Road, Mylapore, Madras 600 004. Phone: 77503.

THIRUVANMIYUR BRANCH : 112, Thiruvalluvar Salai, Kamraj Nagar, Madras 600 041.

DEPOSIT SCHEMES

FIXED DEPOSIT SCHEME

(Minimum of Rs. 1000/- and in Multiples of Rs. 500/-)

Period (months)	Rate of interest P.A.	CASH INCENTIVE
6	15 %	not applicable
12	17 %	1/2 %
24	18 %	1 %
36	19 %	1 1/2 %
60	20 %	2 %

KARPAGA VIRUTCHAM DEPOSIT SCHEME
(Re-Investment Plan)

(Minimum of Rs. 1000/- and in Multiples of Rs. 500/-)

DEPOSIT AMOUNT RS.	PERIOD (Months)	MATURITY VALUE RS.	CASH INCENTIVE
1000	12	1180	1/2 %
1000	24	1425	1 %
1000	36	1760	1 %
1000	45	2025	1 1/2 %
1000	67	3025	2 %

HIGHLIGHTS:

* Recognised as a **NIDHI COMPANY** by Central Government of India.
* Company is in 20th year of Service.
* Monthly interest warrants for the financial year would be despatched in advance at the beginning of the year for fixed deposits.
* No tax deduction at source if the fixed deposit holders submits 15 H in case. For any financial year interest exceeds Rs. 2500/-.
* Loan facility upto 75 % on Fixed Deposit and 85 % on Recurring Deposit paid-up amount.
* Pre-mature repayment facility as per terms and conditions.
* Your Deposit amount is advanced against Gold Jewels and immovable properties of Madras city limits.
* Transaction with members only. (Rupees Two only for Membership.)

JEWEL LOAN

Jewel loans granted on Gold ornaments at Rs. 255/- per gram i.e. Rs. 2040/- per sovereign (8 gm).

Recurring Deposit not required.

SENIOR CITIZEN DEPOSIT SCHEME 19 % p.a.

(APPLICABLE FOR AGED PERSONS ABOVE 55 YEARS, PENSIONERS, HANDICAPPED, WIDOWS, EDUCATIONAL AND CHARITABLE ORGANISATIONS.)

Minimum Deposit Rs. 10000/- **Period - 12 months.**

RECURRING DEPOSIT SCHEME

(Minimum of Rs. 10/- and in Multiples of Rs. 10/-)

MONTHLY DEPOSIT	100	100	100	100	100	100
PERIOD (Months)	12	24	36	48	60	72
MATURITY VALUE	1310	2850	4650	6710	9050	11,580

SAVINGS DEPOSIT SCHEME 9%

	BUSINESS HOURS		WEEKLY HOLIDAY
	WEEK DAYS	SUNDAYS	
HEAD OFFICE Mylapore	9 am - 12.30pm 2.30 pm - 5 pm	9 am to 12.30pm -	FRIDAY
BRANCH OFFICE Thiruvanmiyur	9 am - 12.30pm 2.30 pm - 5 pm	9 am to 12.30pm -	TUESDAY

M. B. PANDURANGAM
President

P. S. SAMBASIVAM
Secretary



மங்களம் பெருக ஒரு மணிமண்டபம்!

'ஆயிரங்கால் மண்டபமானாலும் அதில் எட்டு தூண்களே முக்கியம் - அவை தாம் மண்டபத்தை உண்மையில் தாங்கி நிற்கின்றன' என்று சொல்வதுண்டு.

அதே போல் நமது நாட்டில் ஆன்மிகப் பெரியவர்கள் எத்தனையோ பேர் தோன்றி இறை பக்தி விதானத்தை விஸ்தரிக்க உதவினாலும் என்றென்றும் நினைவில் நிலைத்திருக்கக் கூடியவர்கள் ஒரு சிலரே....

அத்தகையவர்களுள் ஒருவர் காஞ்சி முனிவர். நூறாவது வயதை நெருங்கும் பரமாச்சார்யாளுக்கு லட்சோப லட்சம் பக்தர்களின் இதயங்களிலே மணிமண்டபங்கள் ஏற்கெனவே எழுந்துள்ளன. எனினும் சதாப்தி மணிமண்டபம் எழுப்பி, தங்கள் உள்ளத்தில் உணர்ந்த பக்தியை உலகறிய வெளிப்படுத்த முனைந்துள்ளார்கள் காஞ்சி மகா பெரியவரின் பக்தர்கள்.


காஞ்சிபுரத்துக்கருகே பாலாற்றங்கரையிலுள்ள ஒரிக்கை என்ற கிராமம்தான் சதாப்தி மணிமண்டபம் அமைப்பதற்காகத் தேர்ந்தெடுக்கப் படும் பாக்கியம் பெற்ற தலம். இங்கே ஏழு ஏக்கர் நிலம் ஏற்கெனவே வாங்கப் பட்டு விட்டது.

இந்த மணி மண்டபம் கட்டுவதற்கு மூன்று கோடி ரூபாய் செலவு ஆகும் என எதிர்பார்க்கப்படுகிறது. பிரும்மாண்டமான இப்பணியைச் செய்து முடிக்கின்ற பொறுப்பினை

நூறாவது வயதை நெருங்கும் பரமாச்சார்யாளுக்கு லட்சோப லட்சம் பக்தர்களின் இதயங்களிலே மணிமண்டபங்கள் ஏற்கெனவே எழுந்துள்ளன. எனினும் சதாப்தி மணி மணடபம் எழுப்பி தங்கள் உள்ளத்தில் உணர்ந்த பக்தியை உலகறிய வெளிப்படுத்த முனைந்துள்ளார்கள்.....



◆ மணிமண்டபம் கம்பீரமாக உருவாகப் போவது இங்கேதான்!



◆ பாதுகா மண்டபம் - வரைபடம்



◆ மணிமண்டபத்துக்கான ஆரம்ப

ஏற்றுள்ளவர் கணபதி ஸ்தபதி. இவரது சகோதரர்கள் முத்தையா ஸ்தபதியும் சட்டநாத ஸ்தபதியும் புதல்வன் சங்கரனும் இவருக்குத் தோள் கொடுக்கப் போகிறார்கள்.

மணிமண்டபம் கட்டப்படவுள்ள இடத்தை அடுத்து ஒரு சிற்பிகள் சேனையே தண்டிறங்கப் போகிறது. மாமல்லபுரம் உருவாக இரவு பகலாய்ச் சிற்பிகள் உழைத்தது போல் சதாப்தி மணிமண்டபம் உருவாகவும் சிற்றுளிகள் பகலிரவாய் ஒலிக்கும்.

இந்த மணிமண்டபத்தில் பல பகுதிகள் உண்டு. இவற்றில் முக்கியமானது தாமரை அல்லது பத்ம வடிவங்களை உள்ளடக்கிய பாதுகா மண்டபம். இதில் மகாபெரியவரின் பாதுகைகள் பிரதிஷ்டை செய்யப்படவுள்ளன. தவிர, யானைச் சிலைகள், பொன் ஸ்தூபி, ராஜ கோபுரம் சப்தஸ்வர தூண், பிராகார மண்டபம், பிரஜா மண்டபம், மகாமண்டபம் எனப் பலப்பல சிறப்பம்சங்கள் கொண்டு திகழப் போகிறது, மணிமண்டபம்.


பாதுகா மண்டபத்தை மட்டும் 1994 மே மாதத்துக்குள் (சதாப்திக்கு முன்னர்) முடித்து விடத் திட்டம். (ஏனைய பணிகள் முடிய ஐந்து ஆண்டுகளாவது ஆகும் என எதிர்பார்க்கப் படுகிறது).

பாதுகா மண்டபத்தின் விமானத்தில் பதிப்பதற்கென்றே 51,000 ருத்ராக்ஷ மணிகள் நேபாளத்திலிருந்து வரவழைக்கப்படவுள்ளன. பெரியவாளின் சந்தனப் பாதுகைகள் - ஒரு பக்தர் பிரசாதமாகப் பெற்றவை - இந்த மண்டபத்தில் பிரதிஷ்டை செய்யப்படவுள்ளன. இவற்றுக்குத் தங்கக் கவசம் அணிவிக்க நகைகளாகவும் சவரன்களாகவும் சிலர் ஏற்கெனவே காணிக்கை யளித்துள்ளனர்.

சோழ, பல்லவ, நாயகர் கால கட்டட சிற்பக் கலை நுணுக்கங்கள் இணைந்த பாணியில் சதாப்தி மணி மண்டபம் அமையும். பட்டிமலைக் குப்பம் என்ற இடத்திலிருந்து கருமை நிறக் கற்களும் பெங்களூரிலிருந்து வெண்கற்களும் கொண்டு வரப்படவுள்ளன. பரமாச்சார்யாளின் வாழ்க்கைப் பணிகள் மணிமண்டபத்தில் சிற்பக் காட்சியாகும்.

சென்னை, திருவல்லிக்கேணியில் உள்ள 74, பிள்ளையார் கோயில் தெரு - என்னும் முகவரியைப் பலர் பரவலாக அறிய, அறிய மகத்தான சதாப்தி மணி மண்டபப் பணி துரிதமாக நிறைவேறும். ஏனெனில் அப் பணியைச் சிரமேற்கொண்ட ஸ்ரீ மஹா லக்ஷ்மி மாத்ருபூதேஸ்வரர் டிரஸ்ட் இயங்குவது இந்த விலாசத்திலிருந்துதான். நன்கொடைகளுக்கு வருமானவரி விலக்கு உண்டு என்பதையும் சொல்லி வைக்கலாம்!

– எஸ். சந்திர மௌலி.



● சதாப்தி மணிமண்டபம் - வரை படம்

வட்டமேஜை

'எதிர்பாராததை எதிர்பாராதது உங்கள் தவறு!'

◆ பங்காரப்பாவின் அட்டைப்படம் படு அசத்தல். அவர் முகத்தில் பளிச்சிடும் பல உணர்ச்சிகளுக்குக் கட்டுரையைப் படித்ததும் அர்த்தம் புரிந்து போயிற்று...!

வேட்டூர் அணை - 2, ஆர். கருணாகரன்.

◆ 'பங்காரப்பா : மர்ம முடிச்சுகள்' பற்றி கவர் ஸ்டோரி எழுத ஆசை வந்த கல்கிக்கு நமது முதல்வர் 'ஜெ'யின் மர்ம முடிச்சுகள் பற்றி எழுத எண்ணம் வராமல் போனது ஏன்?

முத்துப்பேட்டை, மிஸ்டர் தஞ்சை.

◆ பங்காரப்பா - "மர்ம முடிச்சுகள்" கட்டுரை படித்தேன். இவ்வளவு சிக்கல்களைச் சுற்றி லும் வைத்துக் கொண்டு, இந்த மனுஷர் எப்படி 'ஹாயா'க பேட்மின்டன் விளையாடுகிறார்?!

திருச்சி, செல்வன்ஜி.

◆ பங்காரப்பா - மர்ம முடிச்சுகள் கட்டுரை மிக நன்றாக எழுதப்பட்டுள்ளது. இனி தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளபடி நரசிம்மராவ் தான் செயல்பட வேண்டும்....!!

திருச்சி - 14, ராஜிராதா.

◆ தூங்கிக் கொண்டிருக்கும் பிரதமரைத் தட்டி எழுப்பக் கூடிய தலையங்கம்! இவரின் நாற்காலியில் உட்கார பாரதீய ஜனதா சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருப்பதையும் பிரதமர் கவனத்தில் கொண்டு சுறுசுறுப்புடன் செயலாற்றினால் நல்லது.

திருவனந்தபுரம் - 5, வேட்டைக்கருவேல்

◆ 'தேவை : செயல்படும் பிரதமர்' என்ற உங்கள் தலையங்கம் 'சும்மா இருப்பதே சுகம்' என்று இருக்கும் நம் பிரதமரைத் தட்டி எழுப்பும் என்பது உறுதி! நீந்தித்தான் ஆற்றைக் கடக்க வேண்டும் என்ற சூழ்நிலையில் தண்ணீரில் இறங்கவே பயப்படும் நிலைதான் நம் பிரதமர் இன்றுள்ள நிலை! வேதனைக்குரியது!

மதுரை - 16, வி.. பரமசிவம்.

◆ எதிர்பாராத செலவுகளுக்கென்று இருக்கும் நிதியை ஸ்டேடியம் கட்டுவதற்குச் செலவிடும் எதிர்பாராத முடிவை ஜெயலலிதா எடுப்பார் என்று நீங்கள் எதிர்பாராதிருந்தால் தவறு! அடித்து நொறுக்கப்பட்ட பெரும்பான்மை வாக்குகளுடன், தட்டிக் கேட்க எதிர்க்கட்சி இல்லாமல், தாஜா செய்ய தோழமை கட்சியையும் டும் துணைக்கு அனுப்பிய மக்களின் சக்தியைப் பெற்றுள்ள முதல்வர் கேவலம் 35 கோடி ரூபாய் காண்ட்ராக்டுக்கு டெண்டர் விட்டால் அது மக்களின் நம்பிக்கையை அவமதித்த செயல் ஆகாதா?!

தஞ்சாவூர் - 7, வளர்மதி ஆசைத்தம்பி.

◆ பிடிவாதம் பிடிக்கும் 'வைலட்' - பங்காரப்பாவின் கார்டூன் சிம்ப்ளி சூப்பர் என்றால்... அதைவிட 'டான்சி ராணி'யாய் சாசி... 'டான்ஸர் ராணி'யாய் அவதாரம் எடுத்து ஆடும் 'ஜெ' கார்டூன் சூப்பரோ சூப்பர்!

முத்துப்பேட்டை, தஞ்சைத் தரணியன்.

◆ அக்னிவேஷ் என்கிற பெயரை அடிக்கடி நாளேடுகளில் படித்ததுண்டு. அந்த சமுதாயச் சீர்திருத்தச் செம்மலின், ஆர்ப்பாட்டமில்லாத அமைதியான சேவைகளைப் புரிந்து கொள்ள உதவிய கல்கிக்கு நன்றி!

கும்பகோணம், கே.என். பாலகிருஷ்ணன்.

◆ உதாதிபனின் "எதிர்பார்ப்பு" சிறுகதை மிகவும் யதார்த்தமாக அமைந்திருந்தது. முடிவு மிகவும் வித்தியாசம்.

கடலூர், சிந்துஜா.

◆ தொழிற்சாலையில் உற்பத்தியாகும் மானுட நேயம் எனும் வித்தியாசமான தலைப்பைப் பார்த்ததும் வியப்பு! படித்து முடித்த போது நெகிழ்வு.

கோவில்பட்டி, கா. ஜெயமேரி.

◆ அமைதிப் புயல் அக்னிவேஷ் பற்றிப் படித்தேன். நம் நாட்டிற்கு ஆன்மீகம் கலந்த அரசியல் தேவை என்று சொன்னார் காஞ்சிப் பெரியவர். அவர் எண்ணத்தைப் பிரதிபலிக்கும் விதத்தில் புதுதில்லி வீதியில் சுவாமி அக்னிவேஷ் நடந்து கொள்வது, பெரியவரின் ஆசீர்வாதத்தைப் பெறுவதோடு அவரால் நாட்டுக்கு நல்லது நடக்கும் என்பது உறுதி. வாழ்க அவரது தொண்டு! வளர்க அவரது பணி பல்லாண்டு!

இலால்குடி, ஆர். ஜெயலட்சுமி.

◆ தமிழகத்தில் மது விலக்கு முறைகளை, அறிய வந்த ஆந்திர அமைச்சர்களை நினைத்தால், சிரிப்புத்தான் வருகிறது! 'மதுவிலக்கு' - என்ற உயர்ந்த கொள்கையை, கேலிக்குரிய தாக்கி விட்ட ஜெயலலிதா அரசின் நிலைமையைக் கார்ட்டூன் கச்சிதமாய்ப் பிரதிபலித்தது!

வேலாயுதம்பாளையம், எம். சம்பத்.

◆ "உயர் நீதிமன்றக் கட்டடத்திற்கு வயது நூறு" என்ற தலைப்பிலான பேட்டிக் கட்டுரையில், "முன்சீப், சார்பு நீதிபதி பதவிகளுக்கு" என்பதற்குப் பதிலாக "இரண்டாம் வகுப்பு நடுவர்கள்" (II Class Magistrates) என்று இருக்க வேண்டும். அதே போல் "மரணதண்டனை வழங்கும் உயர் நீதிமன்றத் தீர்ப்புகளை உச்ச நீதிமன்றம் பரிசீலனை செய்து உறுதி செய்வது போல" என்பதற்குப் பதில் "மரண தண்டனை வழங்கும் மாவட்ட அமர்வு நீதிமன்ற (Sessions Court) த் தீர்ப்புகளை உயர் நீதி மன்றத்தில் இரண்டு நீதிபதிகள் உறுதி செய்வது போல"... என்று இருக்க வேண்டும்.

சென்னை - 31, எம். ரவீந்திரன்.


The master tilting wetgrinder
SHARAVANA
ONE YEAR GUARANTEE
Mfrs :
SHARAVANA ENGINEERING INDUSTRIES
DR. AMBEDKAR ROAD, VELANDIPALAYAM P.O
COIMBATORE - 641 025 PHONE : 45118, 45117
Branch : Dadar, Bombay Ph : 4111490, 4114778
V.G.P. Sion, Bombay Ph : 4091092, 4073804
Tamilnadu Stores, Karol Bagh, New Delhi Ph : 5722320
Aarifi Shop, Main Road Vizag Ph : 54361, 54524
Gupta Distributors, Pithapur Road Cuttack Ph : 20749
M S Pande & Sons Variety Square Nagpur Ph : 524097


உங்கள் ஜாதக பலனை கேட்டறியுங்கள்
ஜோதிட போன்
வார பலன்கள்
001 609 936 34 +
மேலே கொடுத்துள்ள பதினொரு எண்களையும் டயல் செய்வதுடன் உங்கள் சூரிய ராசிக்கு கொடுத்துள்ள இரண்டு எண்களையும் சேர்த்து டயல் செய்யவும்
51 மேஷம்
52 ரிஷபம்
53 மிதுனம்
54 கடகம்
55 சிம்மம்
56 கன்னி
57 துலாம்
58 விருச்சிகம்
59 தனுசு
60 மகரம்
61 கும்பம்
62 மீனம்
டாரட் பலன்கள்
ஒரு பண்டைய ஆருட முறை. உங்கள் குறிப்பிட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கிறது.
அழையுங்கள் :
0016099363450
பொருத்தம்
நீங்களும் உங்கள் துணையும் எவ்வாறு ஒத்துப்போக முடிகிறது?
அழையுங்கள் :
0016099363474
Anthem

பாப்கார்ன் கனவுகள்

5

வங்கியின் கேஷ் கவுண்டர். லக்ஷ்மிநாராயணன் தன்னைத் தானே வரைந்து கொண்ட, கண்ணாடி அணிந்த கார்ட்டூன் தலை வெளியே ஒட்டப்பட்டுச் சிரித்துக் கொண்டிருக்கிறது. பல நிறங்களில் எழுதப்பட்ட நகைச்சுவை வாசகங்கள் : ''ஒரு வேண்டுகோள். பணம் கொடுக்கல், வாங்கலின் போது இளம்பெண்கள் கேஷியரின் கண்களைச் சந்திக்க வேண்டாம் என்று கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.''

சதுரத்தில் டோக்கன் மறைந்து பணம் முளைக்கிறது. ஆள் நகராத உள்ளுணர்வில் லக்ஷ்மிநாராயணன் தலை நிமிர்கிறான். கவுண்ட்டர் சதுரத்தில் பிரபல திரைப்பட இயக்குனர் விஸ்வநாத ரெட்டி அவனைப் பார்த்துச் சிரித்துக் கொண்டிருக்கிறார்.

பிரும்மாண்டமான ஆங்கிலேயர் காலத்துக் கட்டடங்கள். எதிரே போக்குவரத்து விரைகிற கடற்கரைச் சாலை. நடைபாதை அம்மன் கோவிலில் ஆடித் திருவிழா. ரிக்ஷா ஸ்டாண்ட் பக்தன், முதுகில் கொக்கி மாட்டித் தொங்குகிறான். ரைட், ரைட் என்று லாரி பின்னால் வர, நையாண்டி மேளம் நகர்ந்து கொள்கிறது. தலையில் கேசம் புரளச் செய்கிற கடற்காற்று. அறிமுக வார்த்தைகள் முடிந்து விஸ்வநாத ரெட்டி தொடர்கிறார். அவர் வங்கிக்கு வருகிற போதெல்லாம் லக்ஷ்மி நாராயணனைக் கவனித்திருக்கிறார். ஒரு வித்தியாசமான இளைஞனாகவே அவன் தோற்றமளிக்கிறான். தற்சமயம் வளர்ந்து வருகிற அவருடைய படத்தில் நல்ல வேடம் ஒன்று இருக்கிறது. சினிமாவில் நடிப்பதற்கு அவனுக்கு ஆசை இருக்கிறதா? இது அவருடைய விலாசம். மாலை ஆறு மணிக்கு மேல் இது பற்றி அவன் அவரிடம் அங்கே பேசலாம்.

டைரக்டர் விஸ்வநாத ரெட்டியின் கார் புறப்பட்டு, போக்குவரத்தில் கலக்கிறது. கையில் விசிட்டிங் கார்டுடன் கண்கள் கலங்க லக்ஷ்மிநாராயணன் பார்த்துக் கொண்டு நிற்கிறான்.

விஷயத்தை யூகித்து அலுவலக நண்பர்கள் லக்ஷ்மிநாராயணன் உள்ளே நுழையும் போதே ஆரவாரித்து வரவேற்க, சற்றும் சளைக்காத உற்சாகத்தைப் பதிலுக்குக் காட்டி அனைவரின் கண்கள் முன்னேயும் விசிட்டிங் கார்டு ஆடுகிறது.

''பர்மிஷனா? வீட்டுக்குப் போய் வேற டிரஸ்ஸா?''

ஆவலுடன் நண்பர்கள் கிண்டுகிறார்கள்.

''ப்ச்!''


அசிரத்தையாய் லக்ஷ்மிநாராயணன் சூள் கொட்டுகிறான். வா ராஜா வா. வாழ்க்கையின் விசித்திரத்தைப் பார். விரும்பிப் போனால் விலகிப் போகும். எதுவும் விலகிப் போனால் தானாக விரும்பி வரும். அவன் வீட்டில் இப்போதுதான் பிரச்னைகள் ஓய்ந்திருக்கின்றன. நடிக்க வேண்டும் என்று அவன் எத்தனை ஆசைப்பட்டிருப்பான்? அப்பா சினிமா பேச்சை அவன் எடுக்கிற போதெல்லாம் ஸ்டூலில் ஏறி மின் விசிறியில் கருக்குக் கயிறு கட்டினார். சமையலறை அலமாரியில் கைக்கெட்டும் உயரத்தில் அவன் அம்மா பூச்சி மருந்து வைத்திருந்தாள். எல்லோரின் ஆசைக்காகவும் யோசிக்காமல் தலையை ஆட்டி திருமணமும் ஆகி விட்டது. இப்போது புதியதாய் டில்லியிலிருந்து ஒரு பிரச்னை சேர்ந்திருக்கிறது. அது என்ன சொல்லுமோ? பல்வேறு விஷயங்களையும் உத்தேசித்து அன்று மாலை டைரக்டர் விஸ்வநாத ரெட்டியைப் பார்க்கப் போவதில்லையென்று லக்ஷ்மி நாராயணன் முடிவு செய்கிறான்.

மூர் தெருவில் வாடகைக்கு எடுத்த யூனியன் அலுவலகம். வெறும் டீயும், சிகரெட்டுமாய் ஜருராய் வேலை நடக்கிறது. சுற்றறிக்கை ஒன்றை ஸ்டென்சில் அடித்து,

ம.வே.சிவகுமார்

ரோலியோவில் சைக்ளோஸ்டைல் செய்து சலிக்காமல் கவர்களில் விலாசம் எழுதி, சீக்கிரமே தமிழகம் பூராவும் தங்கள் கிளைகளில் தகவல் கிடைக்கச் செய்கிற ஆசையில் அன்றைய கடைசித் தபாலில் ஜிபிஓவில் சேர்த்து விட்டு, கடற்கரைச் சாலையில் ஆளரவம் அடங்குகிற நேரத்தில் நண்பர்களிடம் சொல்லிக் கொண்டு லக்ஷ்மிநாராயணன் சுரங்கப்பாதையில் இறங்குகிறான்.

புறநகரில் லக்ஷ்மிநாராயணன் வீடு. விளக்குகளை அணைத்துவிட்டு ஜன்னல் சதுரத்தில் வெளியே பார்த்தபடி விஜயலக்ஷ்மி நிழற்படமாய் நிற்கிறாள். நல்ல இருட்டு. தொலைவில் ட்யூப்லைட் வெளிச்சத்தில் யாரோ வருகிற மாதிரி இருக்கிறது. போதையில் தனக்குள் பேசிக் கொண்டு தள்ளாடியபடி தெருவில் கோணலாய் ஒருவன் நடந்து போகிறான். அருகில் தடக், தடக் என்று இரயில் கடக்கிற சப்தம். அப்புறம் அமைதியில் சுவர்க்கோழி கத்துகிறது. சமையலறையில் தடால் என்று கேட்ட சப்தத்தில் அதிர்ந்து பயத்தில் இருதயம் தடதடக்க விஜயலக்ஷ்மி மெல்ல உள்ளே எட்டிப் பார்க்கிறாள்.





காவியத் தலைவன்

ஆபாவாணன் தயாரிப்பு, முன்னாள் இயக்குனர் திலகம் கே. எஸ். கோபால கிருஷ்ணன் இயக்கம் என்று தைரிய மாய்ப் போனால் 'தப்புந்தான்யா நீ உள்ளே வந்தது' என்று மனுஷனை நோக அடிக்கிறார்கள்.

சிங்கப்பூர் சீமான் (நம்பியார்) பேத்தி கள் இருவர் (டபுள் ஆக்ஷன் பானு ப்ரியா). ஒருவர் தாத்தாவிடமும், இன் னொருவர் அம்மா மஞ்சுளாவிடமும் வளர்கிறார்கள். அம்மாவிடம் வளரும் பானுப்ரியா (சாரதா) சாந்த சொரூபி, தாத்தாவிடம் வளரும் பெண் (ப்ரியா) அடங்காப்பிடாரி.

விஜய்காந்த் தாத்தா கண்ணில்பட, பேத்தி யின் கொட்டம் அடக்க மாப்பிள்ளை யாக்குகிறார்.

ஒவ்வொரு சந்தர்ப் பத்திலும், ப்ரியா கண வனை அவமானப் படுத்த, பொறுமை யாய் விஜய்காந்த்.

தாயாகும் பாக்கி யத்தை ஒரு விபத்தில் ப்ரியா இழக்க, விஜய் காந்த் அவள் மனசு நோகக் கூடாது என்ப தற்காகத் தன் மீது பழியைப் போட்டுக் கொண்டு தான் தந்தை யாகத் தகுதியில்லா தவன் என்கிறார்.

கணவன், தாத்தா வைப் பிரிந்து ப்ரியா சிங்கப்பூர் போக, சாரதாவும், ப்ரியாவும் இடம் மாற... சாரதா விஜய்காந்தின் குழந்தைக்குத் தாயாக...

யாருக்கும் ஏதும் தெரியாது என்று நாம் நினைத்துக் கொண்டிருக்க, எல் லோருக்கும் எல்லாமும் தெரியும் என்று கடைசியில் நமக்குத் தெரிகிறது!

வாய் வலிக்க வலிக்க (நம் காதும் வலிக்கிறது) நீண்ட வசனம் பேசி சகோ தரியுடனேயே விஜய்காந்தைச் சேர்த்து வைத்து, ப்ரியா உயிரை விடுமுன் 'காவியத் தலைவன்', 'பொறுமையின் சிகரம்' என்று நாயகனுக்குப் பட்டம் சூட்டிப் போக, சுபம்.

ப்ரியாவின் ஆணவத்தை எடுத்துக் காட்ட ஏற்படுத்தப்பட்ட காட்சிகள் படு சாதாரணம்.

சாந்த சொரூபியாக, இடம் மாறி னாலும் சகோதரிக்குத் துரோகம் செய்து

''மியாவ்.''

ஜன்னலில் கண் இடுக்கி, பூனை இறங்கிப் போகிறது.

விடிந்ததும் கதவு திறந்து லக்ஷ்மிநாரா யணன் வெளியே வருகிறான். வாசலில் நியூஸ் பேப்பர் படித்துக் கொண்டிருந்த எதிர் வீட்டுக்காரர் அதை அப்படியே போட்டு விட்டு அவன் கூப்பிட கூப்பிட திரும்பிப் பார்க்காமல் தன் வீட்டிற்குள் மறைகிறார். லக்ஷ்மிநாராயணன் படிக் கட்டை ஒட்டிய திண்ணையில் அமர்ந்து பேப்பரைப் பிரிக்கிறான். புதிய நைலக்ஸ் புடைவையில் விஜயலக்ஷ்மி காப்பி கலந்து வருகிறாள்.

''கம கம கமன்னு எங்கம்மா போடற காப்பி மாதிரியே இருக்கு.''

தொட்டை விட்டு லக்ஷ்மிநாராயணன் இரசித்துக் குடிக்கிறதில் விஜயலக்ஷ்மியின் குனிந்த முகத்தில் சிரிப்பு தெளிகிறது.

''உட்காரு.''

லக்ஷ்மிநாராயணன் படிகளுக்கு நகர்ந்து கொள்ள, விஜயலக்ஷ்மி திண்ணையில் உட் கார்ந்து கொள்கிறாள்.

விடக் கூடாது எனத் துடிக்கும் சாரதா, தற்கொலை செய்து கொள்ள ஓட, 'சாரதா' எனக் கூப்பிட்டு நிறுத்தி அதிரச் செய்கிறார் தாத்தா. படத்தின் மிகப் பெரிய ஆறுதல் தாத்தாவாக நடிக்கும் நம்பியாரின் சிறந்த நடிப்பு.

மற்றபடி படத்தை விமர்சிக்க வேண்டுமென்றால் : பொறுமையாய் உட்கார்ந்திருக்கும் ஒவ்வொரு பார்வையாளனும் காவியத் தலைவன்தான்!

- மாய கிருஷ்ணன்

செந்தமிழ்ப் பாட்டு

வில்லன் தன் தங்கைக்குப் பார்த்த மாப்பிள்ளை, பாடகி கலைவாணியை நேசிப்பதால் திருமணம் தடைப்படுகிறது. கோபத்தில் மாப்பிள்ளையை பஜாரில் குத்திக் கொல்லுகிறான் வில்லன்.

கலைவாணி வயிற்றில் குழந்தையுடன் கண்காணாத இடத்துக்கு ஓடி விடுகிறாள்.



அடைக்கலம் அளிப்பவர்கள் கல்லூரி முதல்வரும் அவர் மனைவியும்.

கலைவாணிக்குப் பையன் (பிரபு) பிறந்து வளர்ந்து தன் தந்தையின் உயிரைப் பறித்தவனின் பெண்ணையே காதலிப்பான் என்று நீங்கள் யூகித்திருந்தால் நீங்கள் தமிழ்ப் படத்துக்குக் கதை எழுதும் முதல் தகுதியைப் பெற்றவராவீர்கள்!

பேசும் போது மட்டும் திக்கித் திக்கிப் பேசும் பாலா (பிரபு) பாடும் போது அக்ஷரம் பிசகாமல் ஜோராய்ப் பாடி கலக்குகிறாரே என்ற கேள்வியே கேட்காமலிருந்தால் நீங்கள் தமிழ்ப் படத்துக்குக் கதையெழுதும் இரண்டாவது தகுதியையும் பெற்றவராவீர்கள்!

பிரபுவிடம் குழைந்து குழைந்து காதல் செய்ய முயன்று தோற்கும் பெண்ணாகக் கஸ்தூரி. கிராமத்துப் பெண்ணிடம் நகர வாடை...

காமெடி என்ற பெயரில் ஆபாச அபத்தங்கள் சில...

இவற்றையெல்லாம் கஷ்டப்பட்டுப் பொறுத்துக் கொண்டால், வெகுளித்தனமான சுகன்யா, விளையாட்டுத்தனமான கஸ்தூரி, இயல்பாய் நடிக்கும் பிரபு, இனிய இசை - இவற்றை ரசிக்கலாம். செந்தமிழ்ப் பாட்டு கேட்டு மகிழலாம்!

- சுப்ராஜா ஸ்ரீதரன்

''ராத்திரி லேட்டா வந்தேன்னு கோபமா?''

அப்படியெல்லாம் இல்லை என்பதாகக் குனிந்த தலை அசைகிறது.

''குட். அப்படித்தான் இருக்கணும். புருஷங்காரனை முந்தானையிலே முடிக்கப் போட்டு வைக்கணும்னு கஸ்தூரிபா காந்தி நெனைச்சிருந்தா ஒரு மகாத்மா காந்தி கெடைச்சிருப்பாரா? வீட்டுக்கு ஒருத்தனை நாட்டுக்காகக் கொடுத்துடணும். தோ பார். யூனியன், சினிமா இது ரெண்டும் என்னோட ரெண்டு கண்கள். வாழ்க்கையிலே குழப்பம் வேணாம்னு தனியா சினிமா போறதில்லைன்னு, முடிவு செஞ்சிருக்கேன். நீ டில்லியிலே வளர்ந்தவ. காக்ரே, பூக்ரேன்னு கண்ட படம் பார்த்திருப்பே. தமிழன் டப்பிங் படம் போனாலும் தமிழ்ப் படம்தான் போவான். பரவாயில்லையா?

''ஹிந்தி படம் பிடிக்கும். தமிழ்ப் படம் பரவாயில்லை.''

வாய்திறந்து விஜயலக்ஷ்மி முத்து உதிர்க்கிறாள்.

''போக்கடா, என் கண்ணே பட்டுடும் போல இருக்கு. ஆமா, சமையல் ரூம் மேடையிலே கறிகாய் நறுக்கி வைச்சிருக்கேனே பார்த்தியா? நம்ம டியூட்டி எதுவோ



"என்னய்யா பசங்க காப்பி அடிக்கிறதாகப் புகார் பண்ண வந்துட்டீங்களா? இதெல்லாம் இப்போ ரொம்ப சகஜம்தானேய்யா, அனுசரிக்கப் போறது..."

"காப்பி அடிச்சாக் கூடப் பொறுத்துக்கலாம் ஸார், ஜெராக்ஸ் எடுத்துத் தராங்களே!"

- எஸ். கோவிந்தன்.

அதெல்லாம் நேரத்துக்கு ஒழுங்கா செஞ்சிருவேன்'' என்று நெகிழ்ந்து லக்ஷ்மிநாராயணன் அந்தப் புற நகர் தந்த ஆளில்லா தைர்யத்தில் விஜயலக்ஷ்மியின் இடையை வளைக்க முயல, வெட்கத்துடன் அவன் கைகளை விலக்கி விட்டு அவள் வீட்டினுள் போகிறாள்.

குளியலறை. சோப்பு நுரையில் லக்ஷ்மிநாராயணன் குமிழ் செய்து விளையாடுகிறான். கண்ணாடி முன் நின்று பலவிதமான முக பாவங்களை முயற்சித்துப் பார்க்கிறான். உற்சாகம் கூடி உச்சஸ்தாயியில் அவன் பாடி நிறுத்தியதில் கடல் அலைகள், தென்னை மரம் என்று உலகமே ஸ்தம்பித்து நின்று விடுகிறது. மனத்திற்குள் கணக்கிட்டு லக்ஷ்மிநாராயணன் மீண்டும் பாடத் தொடங்குகிறான்.

''நான் அசைந்தால் அசையும் அகிலம் எல்லாமே....''

பாலக்காட்டு அக்கவுண்டண்ட் நிமிர்ந்து மணி பார்க்கிறார். லக்ஷ்மிநாராயணனும் அவன் நண்பர்களும் வழக்கம் போல் ஒரே மாதிரி உடையணிந்து சுமார் இருபது நிமிடங்கள் காலதாமதமாக அவர் மேஜையை நோக்கி வந்து கொண்டிருக்கிறார்கள்.

''குட் மார்னிங் சார். ஸாரி சார் பஸ் லேட்டு.''

வரிசையாய் அதையே சொல்லி நண்பர்கள் கையெழுத்துப் போட்டு வருகையைப் பதிவு செய்கிறார்கள். கடுப்பில் அங்கேயே நிற்கிற சேவிங்க்ஸ் கிளார்க்கிடம் பாலக்காட்டு அக்கவுண்டண்ட் வெடிக்கிறார்.

''உங்களுக்கென்ன?''

''பேனா என்னுது சார்.''

லக்ஷ்மிநாராயணன் சேவிங்க்ஸ் குமாஸ்தாவிடம் பேனாவைத் தந்து திரும்புகிறான்.

''லக்ஷ்மிநாராயணன்.''

''குட் மார்னிங் சார்.''

''இப்படி அடிக்கடி லேட்டா வர்றீங்களே, ஒரு பஸ் முன்னாலேயே புறப்பட்டு வர்றதுக்கென்ன?''

''டிரை பண்ணினோம் சார். ஏத்த மாட்டேன்னுட்டாங்க.''

''ஏன்?''

''அது லேடீஸ் ஸ்பெஷல் சார்.''

கேஷ் டிப்பார்ட்மெண்ட் கதவு திறந்து லக்ஷ்மிநாராயணன் போகிறதை, பாலக்காட்டு அக்கவுண்டண்ட் தன் இருக்கையில் செயலற்றுப் பார்த்துக் கொண்டிருக்கிறார்.

வில்லிவாக்கம் வீடு. இரவு நெடு நேரம் ஆகிறது. லக்ஷ்மிநாராயணன் இன்னும் வீடு திரும்பவில்லை. வீட்டுச் சொந்தக்கார நவகோடி அம்மாள் கையில் டார்ச் லைட்டுடன் துணை நிற்க, வாசலில் விளக்கணைத்து விஜயலக்ஷ்மி கணவனுக்குக் காத்திருக்கிறாள்.

''என்ன ஜூனியனோ போ!''

நவகோடி அம்மாள் அலுத்துக் கொள்கிறாள். அவளும் நான்கு மாதங்களாகப் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறாள். இப்படியா கல்யாணம் செய்து கொண்டு பாதி ராத்திரியில் வீடு திரும்புவார்கள். விஜயலக்ஷ்மி எதுவுமே கேட்காமல் இருக்கிறதால் தான் அவனும் இப்படிசெல்லாம் இருக்கிறான். அப்புறம் இந்த சிகரெட். அதுவும் எவ்வளவு? காசை விடு. உடம்பு என்னத்துக்காகும்? அடுத்த முறை ஒரு சிகரெட் முடிந்து அவன் இரண்டாவது சிகரெட் பற்ற வைக்கக் குனிந்தால் அவள் பிடுங்கி வெளியே எறிய வேண்டும். நான் இருக்கிறேன். கவலையே வேண்டாம். தவிரவும் பெண்மையின் ஆயுதங்கள் கூர்மையானவை. விஜயலக்ஷ்மி அவன் வருகிற நேரத்துக்கு அமர்க்களமாய் அலங்காரங்கள் செய்து கொள்ள வேண்டும். அதில் விழாத ஆண்கள் இன்னமும் பிறக்கவேயில்லை. அவன் சொல்லுகிறபடி மட்டும் விஜயலக்ஷ்மி கேட்கட்டும். அப்புறம் ஜூனியனை விட்டு விட்டு லக்ஷ்மிநாராயணன் அவளைத்தான் சுற்றிக் கொண்டிருப்பான்.

கேட்டருகில் சப்தம் கேட்டு, நவகோடி அம்மாள் டார்ச் அடித்துப் பார்க்கிறாள். விஜயலக்ஷ்மி ஒரு துள்ளலுடன் ஓடிப் போய் லக்ஷ்மிநாராயணன் கையிலிருந்த பையை வாங்கிக் கொள்கிறாள்.

''அப்பா லெட்டர் போட்டிருக்கார்.''

''உங்கப்பாவா? எங்கப்பாவா? கட்டைக் குரலில் லக்ஷ்மிநாராயணன் கேள்விக்கு, விஜயலக்ஷ்மி சிரித்துக் கொண்டே பதில் சொல்கிறாள்.

''நம்ப அப்பா.''

(தொடரும்)

சந்தடிகள் ஓய்ந்து போய், உறவினர்கள் எல்லோரும் கிளம்ப, வீடு பழைய இயல்புக்கு வந்தது. ராஜா அந்த சந்தர்ப்பத்துக்கு எதிர்நோக்கியிருந்தாற் போல் குமார் அருகில் நெருங்கினான்.

''அண்ணா மாடிக்கு வர்றியா... கொஞ்சம் பேசணும்.''

''என்ன விஷயம்? இங்கேயே சொல்லேன்... அம்மாவுக்குப் பாரேன். அறுபதாம் கல்யாணம் பண்ணிக்கிட்ட வெட்கம் இன்னும் போகலை. புதுப் பொண்ணாட்டம் மருமகள்கிட்டே மாட்டிக்கிட்டு முழிக்கிறாங்க.''

ராஜா அதையெல்லாம் ரசிக்கும் மனநிலையில் இல்லை.

சந்தோஷத்தோடு, சந்தோஷமாகச் சில காரியங்களை முடித்து விட வேண்டும். சில கடினமான விஷயங்களைச் சந்தோஷமான வேளையில் கலந்தால், அதன் வீரியம் இற்றுப் போய் இயல்பாகப் போய் விடுவதுண்டு. அந்தச் சந்தர்ப்பம் இப்பொழுது தான்; இதை நழுவ விடக் கூடாது.


''மாடிக்கு வா... விரிவாப் பேசணும்.''

குமார் அவனை ஆச்சரியமாகப் பார்த்தான். கண்களில் குழப்பம் தெரிய, சேரில் கிடந்த துண்டை எடுத்துத் தோளில் போர்த்திக் கொண்டு ராஜாவைத் தொடர்ந்தான்.

''என்ன ராஜா யோசனை...? செலவு பத்தியா...? எவ்வளவு ஆச்சுன்னு சொல்லு என் பங்கைக் கொடுத்துர்றேன்.''

''அதிருக்கட்டும். எனக்குத் திருவனந்தபுரத்துக்கு டிரான்ஸ்பர் ஆயிருக்கு. தெரியுமா...?''

சிகரெட் பற்றவைத்துக் கொண்டிருந்த



குமார், சட்டென்று நிமிர்ந்து பார்த்து, ''என்னடா சொல்ற...?'' என்றான் நம்பாமல்.

''ஆமா... ஏரியா சேல்ஸ் மேனேஜரா பிரமோஷன் ஆயிருக்கு.. அடுத்த மாசம் ஜாயின் பண்ணணும்.''

டி.ரவீந்திரன்

''ஆல் த பெஸ்ட்... அப்போ குடும்பத்தையும் அங்கேயே கொண்டு போகப் போறியா..?''

ராஜா அவன் கேள்விக்குப் பதில் சொல்லாமல் ''உனக்கு எப்போதான் தமிழ் நாட்டுக்கு டிரான்ஸ்பர் கிடைக்கும்?'' என்று மறு கேள்வி கேட்டான்.

''இன்னும் நாலு வருஷமாகலாம். மேலும் எனக்கும் இங்கே வர்றதிலே அவ்வளவு இஷ்டமில்லை ராஜா... டில்லில ஃப்ளாட் ஒண்ணு வாங்கி செட்டில் ஆயிடலாமா? வேண்டாமான்னு குழப்பத்திலே இருக்கேன்.''

''நீயும் டில்லிலே இருக்கே. நானும் கேரளாவுக்குப் போகப் போறேன். இந்த சமயத்துல படிப்பு கெட்டுடக் கூடாதுன்னுறதால வாணியையும் பசங்களையும் இங்கேயே விட்டுட்டு நான் மட்டும்தான் திருவனந்தபுரம் போறேன். மேலும்...''

ராஜா பிரச்னையின் ஆரம்பத்திற்கு வந்து மீண்டும் தயங்கினான். இந்த விஷயத்தைப் பின்னொரு சமயம் பேசலாம் என அவனுள் இருந்த 'கனிவு மிக்க ராஜா' அலற, சற்றுக் குழப்பத்துடன் குமாரை நோக்கியபடி இருந்தான்.

பனித்த மலர்கள்

''சொல்லு ராஜா... என்ன ப்ராப்ளம்? என்னால உனக்கு ஏதாவது ஆக வேண்டியிருக்கா...?''

''எனக்கு உதவி மட்டுமல்ல குமார். அது உன் கடமையும் கூட!''

குமார் அணைந்து போயிருந்த சிகரெட்டை வீசியெறிந்து விட்டு, இன்னொன்றை பற்றவைத்துக் கொண்டு, நிதானமாக ''சொல்லு என் கடமை என்னன்னு?'' என்றான்.

''அப்பா, அம்மாவை உன் கூட டில்லிக்கு அழைச்சிட்டுப் போயிடு.''

சொல்லி முடிப்பதற்குள் ராஜாவுக்கு வெந்நீர் குளத்தைத் தாண்டினது போல் வேர்த்துப் போய் உடல் நடுங்கியது. காய்ந்து போன உதட்டை ஈரப்படுத்திக் கொண்டு, குமாரைப் பார்த்தான். குமார் அவனை லட்சியம் செய்யாமல் குனிந்தபடி புகை விட்டுக் கொண்டிருந்தான்.

''என்ன யோசிக்கறே...?''

''ம், அதுக்கு இப்போ என்ன அவசியம் வந்துச்சு...?''

''என்னாலே முடியலை குமார். அம்மாவையும், அப்பாவையும் வைச்சுக் கிட்டு சிக்கனமா பண்ண முடியலை... பைனான்ஸ்ம் ரொம்ப டைட்டா இருக்கு- மேலும்...''

''உனக்கும் அப்பாவுக்கும் சண்டையா...?''

''அதெல்லாம் இல்லை. ஆனா இனிமே வந்திடும்னு தோணுது. இப்போ சின்ன, சின்ன விஷயத்துக்கெல்லாம் தப்பு கண்டுபிடிக்கிறார். காப்பி நேத்து மாதிரி யில்லை. சாதம் போடறப்போ ஏன் இப்படி பாறை, பாறையா பேர்த்து வைக்கறேன்னு வாணிகிட்டே கோபிச்சுக்கறார். என் இடம் அவருக்குப் புளிக்க ஆரம்பிச்சிட்டதுன்னு நினைக்கறேன்.''

குமார் அருகில் வந்து, தோழமையாகக் கைகளைத் தோளில் போட்டுக் கொண்டு தட்டிக் கொடுத்தான்.

''வயதானா அப்படித்தான் ராஜா. அட்ஜஸ்ட் பண்ணிக்கோ.''

தோளிலிருந்த கைகளைச் சட்டென்று குலுக்கலில் விடுவித்துக் கொண்டு, ''நீ புரியாம பேசறே குமார். இத்தனை வருஷம் உன்கிட்டே இதைப் பத்திப் பேசியிருக் கேனா...?''

''சரி... அப்பாவை நான் கூட்டிப் போறேன். ஆனால் அம்மாவை முடியாது...''

''இல்லை; அவங்களையும் அழைச்சிட்டுப் போயிடு.''

''அது முடியாது. அம்மாவுக்கும் ரேணுகாவுக்கும் அவ்வளவா ஒத்துப் போகாது ராஜா. இன்னொரு தடவை நல்லா யோசித்துப் பாரு. வயசானவங்ககிட்டே சின்ன, சின்னக் குறைங்க இருக்கத்தான் செய்யும். நா ஏன் இவ்வளவு சொல்றேன்னா டில்லி அப்பாவுக்கு பிடிக்காது. இங்க அவர் பழைய ஃப்ரெண்ட்ஸ், உறவு இவங்களை யெல்லாம் பார்த்துக்கிட்டிருக்கும் போதும், தெரிஞ்ச இடத்தைச் சுத்தி வந்திட்டிருக்கும் போதும் அவருக்குக் கோபம் வருதுன்னா அங்கே போய் லோன்லியா ஃபீல் பண்ண ஆரம்பிச்சார்ன்னா ரொம்ப கஷ்டமாயிடும்.''

''உனக்கு இஷ்டமில்லைன்னு சொல்லு. நீ ஜாலியா டில்லியைச் சுத்தணும். அந்த சுதந்திரம் எனக்கு வந்துடக் கூடாது. நீ யோசிக்கலை.. மன்னி என்ன சொல்வாளோன்னு பயப்படறே. வேண்டுமானா அவங்ககிட்டே நானே கேட்கறேன்.''

பற்றவைத்த எண்ணெயாய்க் கோபம் வந்தது குமாருக்கு.



''தேவையில்லை... நாளைக்கு அப்பாவுக்கும் சேர்த்து டிக்கெட் ரிசர்வ் பண்ணிடறேன். அவர்கிட்டே விஷயத்தைச் சொல்லி எங்க கூட அனுப்ப வேண்டியது உன் பொறுப்பு.''

''அம்மா...?''

''அவங்களை இங்கேயே வைச்சுக்கோ...''

- குமார் சொல்லிவிட்டு வேகமாகக் கீழிறங்கிப் போனான்.

ராஜாவுக்குக் களைப்பாக இருந்தது. காலை முதல் அலைந்த அலைச்சலில், லேசாகக் காய்ச்சல் அடிப்பது போலிருந்தது.

பேண்ட்டை அவிழ்த்துப் படுக்கையில் எறிந்து விட்டு, கைலிக்கு மாறினான். காலண்டரில் கிழிக்காமல் இருந்த தேதியைக் கிழித்து, கசக்கி எறிந்தான்.

டேபிளில் கிடந்த கவரை உடைத்தான். டில்லியிலிருந்து அப்பா எழுதியிருந்தார்.

டில்லி வாழ்க்கை மாறுதலாக இருப்பதாகக் குறிப்பிட்டிருந்தார். ராஜாவின் திருவனந்தபுர வாழ்க்கையைப் பற்றியும் கேட்டிருந்தார்.

திருவனந்தபுர வாழ்க்கை....?

இனம் புரியாத எரிச்சல் மனம் முழுவதும் வியாபித்தது. திருவனந்தபுரத்தில் கழிந்த இந்த ஒரு மாதமே ஒரு யுகம் போலிருந்தது. நேரம், காலம் தெரியாமல் பெய்து கொண்டிருக்கும் மழையும், சாலையில் எப்பொழுதும் காயாமல் இருக்கும் ஈரமும் ராஜாவுக்குச் சலிப்பைக் கொடுத்தன.

இந்த வாரத்திற்குள் வாணியிடம் மூன்று முறை பேசியாகி விட்டது. இன்றும் பேசலாமா...? என யோசித்தவன், வேண்டாம் என உடனே எண்ணத்தை மாற்றினான். பேச்சின் முடிவில் வாணியின் குரலில் அழுகை எட்டிப் பார்க்கும். இந்தப் பத்து வருட தாம்பத்யத்தில் ஒரு நாள் கூட அவளைப் பிரிந்து இருந்ததில்லை.

காலிங்பெல் இசைக்க, எழுந்து கதவைத் திறந்தான். ரூம் பாய் நின்றிருந்தான்.

''எந்தா சார் மீல்ஸ் கொண்டாரவா...?''

''வேண்டாம்.''

சிவப்பு, சிவப்பாய், கொட்டைப் பாக்கு உருவத்தில் சாதத்தைப் பார்க்கவே வெறுப்பாக இருந்தது.

வாணியின் கைப்பக்குவம் யாருக்குமே வராது. மல்லிகைப் பூவாய், ஆவி பறக்க அவள் பரிமாறும் சாதத்திற்கு எங்கும் இணையில்லை.

வாணியின் நினைவும், குழந்தைகளின் நினைப்பும், வேலையில் நாட்டமில்லாமல் செய்தது. அவர்களைப் பிரிந்து, இப்படி கஷ்டப்படுத்தும் இந்தப் பதவி உயர்வு தேவைதானா என்கிற எண்ணம் எழுந்தது.

வேலை முடிந்து வீட்டுக்கு வந்ததும், எத்தனை குதூகலமாக இருக்கும்! குழந்தைகளின் விளையாட்டும், சிரிப்பும், வாணியின் பராமரிப்பும் எத்தனை சுகமாக இருக்கும்.

ராஜா சட்டென்று தீர்மானித்தான். மேனேஜர் வீட்டுக்கு போன் செய்து தனக்கு உடல் நலமில்லாததால் ஊருக்குப் போவதாகச் சொன்னான். டிராவல்ஸ்"க்கு போன் செய்து சென்னைக்கு டிக்கெட் ஒன்று புக் செய்து விட்டு உடமைகளைத் தயார் செய்ய ஆரம்பித்தான்.

ராஜாவைப் பார்த்ததும் குழந்தைகள் இரண்டும் ஓடி வந்து கால்களைக் கட்டிக் கொள்ள, வாணி ஆச்சரியமாகப் பார்த்தாள்.

''என்னங்க... என்ன உடம்புக்கு...?'' பதறியபடி ஓடி வந்து சூட்கேஸைப் பெற்றுக் கொண்டு, நெற்றியில் கைவைத்துப் பார்த்தாள்.

''ஒண்ணுமில்லை... வாணி... உங்களையெல்லாம் பார்க்காம இருக்க முடியலை... அதான் கிளம்பி வந்துட்டேன்.''

''எங்களுக்கும் அப்படிதாங்க. ஒன்னு நீங்க இங்கேயே வந்திடப் பாருங்க. இல்லை நாம எல்லோரும் திருவனந்த புரத்துக்கே போயிடலாம்.''

''பார்க்கலாம் வாணி... ஆமாம் எங்கே அம்மாவைக் காணோம்?''

''உடம்பு சரியில்லை... ரூம்ல படுத் திருக்காங்க.''

ராஜா பக்கத்து அறைக்குள் நுழைந் தான். போர்வைக்குள் சுருண்டு படுத்திருந்த தாயின் அருகில் அமர்ந்து ''அம்மா'' என்றான்.

சலனமில்லாமல் இருக்கவே, கை வைத்து அசைத்தான். கண் திறந்து ராஜா வைப் பார்த்ததும் ''எப்பப்பா வந்தே?'' என்றாள்.

போர்வையை விலக்கி எழுந்து உட்கார்ந்தவளைப் பார்த்ததும் அதிர்ந்தான் ராஜா.

இது அம்மாதானா...? ஒரு மாதத்துக் குள் இத்தனை முதுமையா...?

கண்கள் குழிகளாகி... கன்னம் வற்றிப் போய், வறுமையில் உழன்றவளைப் போல தளர்ச்சியுடன்... அம்மாவா... இது...?

''என்னம்மா... என்னாச்சு... உங்க உடம்புக்கு...?''

''ஒன்னுமில்லைப்பா... வயசாயிடுச் சுல்லே...''

அம்மாவின் குரல் கமறலாக ஒலிக்க, கண்களில் மெலிதாக நீர்க் கோடு படர, தலை குனிந்து கொண்டாள்.

ராஜாவுக்குப் பளீரென்று உறைத்தது.

அம்மாவின் இந்த நிலைமைக்குக் காரணம் புரிந்தது. அப்பாவின் பிரிவு, இவளை நிலைகுலையச் செய்து விட்டது.

நாற்பதாண்டு இணைப்பைச் சட்டென்று பிரித்ததில் ஏற்பட்ட பாதிப்பு.

பத்தாண்டு குடும்ப வாழ்க்கையின் சிறு பிரிவே என்னைத் திணறடிக்கும் பொழுது, அம்மாவின் நிலைமை எப்படியிருக்கும்!

வாழ்வின் கடைசிக் காலத்தைச் சந் தோஷமாக, ஒருவருக்கு மற்றவர் துணை யாக, மகிழ்ச்சி பொங்க, பழைய நினைவு களை அசை போட்டுக் கொண்டு, இத்தனை நாட்கள் உழைத்த உழைப்புக்கு ஓய்வாக இருக்க வேண்டியவர்களை, சுயநலத்தில் பிரித்தது சரியா...?

வெளியே வந்தான். குழந்தைகள் இரண்டும் விளையாடிக் கொண்டிருக்க, வாணி அடுப்படியில் இவனுக்குப் பிடித் ததைத் தயாரித்துக் கொண்டிருந்தாள்.

''வாணி, நான் போஸ்டாபீசு வரைக் கும் போயிட்டு வந்துர்றேன்.''

''என்னங்க? என்ன விஷயம்?''

''குமாருக்குத் தந்தியடிச்சு அப்பாவை இங்கே திருப்பி அனுப்பச் சொல்லப் போறேன்.''

வாணி தலையசைத்துச் சிரித்தாள். அதில் இவனைப் புரிந்து கொண்ட அர்த்த மிருந்தது.

திரும்பிப் பார்க்கும் வாசகர்கள்!

◆ ஸ்ரீதர் சார்...! 'திரும்பிப் பார்க்கிறேன்' தொடர் மூலம் நீங்கள் மட்டும் திரும்பிப் பார்க்கவில்லை... நாங்களும் உங்கள் அனுபவத்தைத் திரும்பிப் பார்த்து ரசித்தோம்... அடடா... உங்கள் திரையுலக வாழ்வில்தான் எத்தனை நஷ்டங்கள், லாபங்கள், இன்ப அதிர்ச்சிகள்... குறிப் பாக, இரு இமயங்களை - சிவாஜிகணேசன், எம். ஜி. ஆர். ஆகியோருடன் தங்களுக்கு ஏற்பட்ட அனுப வத்தை எடுத்துக் கூறி எங்களை வியப்படையச் செய் ததை எப்படி மறக்க முடியும்...?

கும்பகோணம், கவிட் ரவி.

◆ புதிய, சுவையான பின்னணித் தகவல்களை நாங்கள் அறிந்திட ஸ்ரீதரின் கட்டுரைத் தொடர் உதவி யது. கடைசி அத்தியாயத்தில் எம். ஜி. ஆரின் பண்பைக் குறிப்பிட்டு எங்கள் கண்களைப் பனிக்கச் செய்து விட்டாரே!

அரசடி. நெல்லை வி. சிவா.

◆ படவுலகின் அன்றைய நிலை, நல்ல நண்பர்கள், ஏமாற்றம் தந்தவர்கள் என்று தமது பழைய நினைவு களைத் திரும்பிப் பார்த்த திரை உலக ஜாம்பவான் ஸ்ரீதரின் தொடர் தற்போதைய சினிமாச் செய்தி களைவிட விறுவிறுப்பாகவும் ரசமாகவும் இருந்தது.

திருச்சி - 21. கே. என். இராமகிருஷ்ணன்.

◆ திரைப்பட உலகில் தாம் எடுத்துக் கொண்ட கருத்து மாறாமல், மக்களின் ரசனைக்கேற்ப ஒரு திரைப் படத்தை உருவாக்குவது என்பது எத்தனை அரிய விஷ யம் என்பதனை, ''திரும்பிப் பார்க்கிறேன்'' கட்டுரை மூலம் நமக்கு மிகத் தெளிவாகக் கூறியுள்ளார் டைரக்டர் ஸ்ரீதர். இந்தத் தொடர் நம் நெஞ்சிருக்கும் வரை நினை விலிருந்து அழியாது!

சென்னை - 17. ஜெயந்தி மனோஜ்.

◆ கடந்த 58 வாரங்களாக டைரக்டர் ஸ்ரீதர் தந்த 'திரும்பிப் பார்க்கிறேன்' தொடர் கட்டுரை படித்ததில் பரமதிருப்தி. ஒவ்வொரு சம்பவமும் நேரில் காண்பது போலவே அமைந்திருந்தது.

ஈரோடு. ரஜினி தேவராஜ்.

◆ டைரக்டர் ஸ்ரீதர் 'திரும்பிப் பார்க்கிறேன்' தொடரை 58 வது வாரத்தோடு முடித்தது வருத்தத்தைத் தந்தது. 'முதல்வன் படத்தை முடித்துக் கொடுத்தார்' என்ற தலைப்பில் தன்னுடைய கட்டுரையையும் முடித்துக் கொண்டாரே!

தென்காசி. எஸ். ஜெகன்.

◆ ஒரு விறுவிறுப்பான தொடர்கதையைப் படித்த தைப்போன்ற உணர்வினை ஏற்படுத்தி விட்டார் ஸ்ரீதர். வாராவாரம் ஒரு சஸ்பென்ஸைப் புகுத்தி, அடுத்து என்ன என்ற ஆவலை ஏற்படுத்தி, அடுத்த வாரக் கல்கிக்கு ஏங்க வைக்கும் வண்ணம் அற்புதமாக எழுதி விட்டார்! இவரிடம் இவ்வளவு விஷயங்கள் புதைந்து கிடப் பதைக் கண்டுணர்ந்து அதை வெளிப்படுத்த வாய்ப் பளித்த கல்கி ஆசிரியருக்கு மனமார்ந்த பாராட்டுக்கள்!

சென்னை - 114. பாரதி சந்திரன்.

தீபாவளி பரிசாக சோனியாவின் 'ராஜீவ்'!

மஹாராஷ்டிர மாநிலத்து அரசியலில் ஒரு முக்கிய புள்ளியாக இருப்பவர் காங்கிரஸ் எம்.பி.யான முரளி டியோரா. இவர் தீபாவளி பரிசாக சோனியா காந்தி எழுதிய 'ராஜீவ்' புத்தகத்தை, கட்சி மற்றும் பத்திரிகைத் துறை நண்பர்களுக்கு அனுப்பினார். ஒவ்வொன்றும் ரூ 1500/- பெறுமானமுள்ள இந்தப் புத்தகங்களை அனுப்பியதன் மூலம் தமது ராஜீவ் - சோனியா விசுவாசத்தை நிரூபித்தோடு, கட்சியிலும், பத்திரிகைக்காரர்களிடையிலும் தமது மதிப்பையும் தக்க வைத்துக் கொண்டுள்ளார்!

குண்டா எம். எல். ஏ.

பம்பாயில் சில நாட்களாகக் குறைந்திருந்த Gang wars எனப்படும் ரௌடிக் கும்பல்களின் சண்டைகள் மறுபடி தலைதூக்க ஆரம்பித்து விட்டன. இதில் ஒரு கும்பலின் முக்கிய ஆளாகக் கருதப்படும் காங்கிரஸ் -ஐ எம்.எல்.ஏ. பாய் தாக்கூரைத் தடா சட்டத்தின் கீழ் கைது செய்ய உத்தரவானதை அடுத்து, அவர் தலைமறைவாகி விட்டார். சென்ற வருடத்திலேயே மூன்று எம்.எல். ஏக்கள் கொலையுண்டதைத் தொடர்ந்து அனேகமாக எல்லா எம்.எல்.ஏக்களும் ரிவால்வர் லைசென்ஸுக்கு மனுச் செய்துள்ளனர். இதற்கிடையே மந்திரி ஒருவர் அடிக்கடி துபாயில் இருக்கும் தாவூத் இப்ராஹீம் என்னும் குண்டர் தலைவருக்கு டெலிபோன் செய்வதாகத் தகவல் வந்துள்ளது!

காஸ்ட்லி பாம்பே!

மேற்கு பம்பாயின் ஜோகேஷ்வரியில் 30 ஏக்கர் நிலத்தில் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது 'Fantasy Land' என்ற கேளிக்கைப் பூங்கா. இந்தியாவிலேயே தனித்தன்மை வாய்ந்த 'உல்ட்டா ஃபுல்ட்டா' (தலைகீழ்) எக்ஸ்பிரஸ் உள்ள ஒரே இடம் இதுதான்! இங்குள்ள ராட்டினங்களில் சவாரி செய்ய ஒருநாள் போதாது! ஒரே சமயத்தில் 10,000 பேர்கள் அனுபவிக்கக்கூடிய இந்த சொர்க்க பூமிக்கு நுழைவுக் கட்டணம் - பெரியவர்களுக்கு ரூ 99, சிறியவர்களுக்கு ரூ 55! மற்றொரு கேளிக்கைப் பூங்காவான எஸ்ஸெல் வோர்ல்ட்டுக்கு : ரூ 119-ம், ரூ 69-ம்!

– அம்ருதா பார்த்தசாரதி



✱ உல்டா ஃபுல்டா

சிவகாமியின் சபதம்

நாற்பதாம் அத்தியாயம்
கொந்தளிப்பு

பல்லவ சேனா வீரர்கள் வாதாபிக் கோட்டையைச் சூழ்ந்து கொண்ட நாளிலிருந்து சிவகாமியின் உள்ளம் எரிமலையின் கர்ப்பப் பிரதேசத்தைப் போல் கொந்தளித்துக் கொண்டிருந்தது.

கோட்டைச் சுவருக்கு அப்பால் வெகு சமீபத்தில் மாமல்லரும் ஆயனரும் இருந்த போதிலும் அவர்களைத் தான் பார்க்க முடியவில்லையே என்ற ஆத்திரமும், யுத்தத்தின் விளைவாக என்ன ஏற்படுமோ என்ற கவலையும், எல்லாம் நன்றாக முடிந்து மாமல்லரைத் தான் சந்திக்கும் போது அவரிடம் என்ன பேசுவது, எப்படி நடந்து கொள்ளுவது என்ற சிந்தனையும் அவளை வாட்டிக் கொண்டிருந்தன.

வாதாபிக்கு வடதிசையில் நடந்த பெரும் போரில் பல்லவ சைனியம் வெற்றியடைந்து புலிகேசி மாண்ட செய்தி சிவகாமியின் காதுக்கு எட்டிய போது, அவளுடைய இதயம் பெருமையினால் வெடித்துப் போய் விடும் போலிருந்தது. அதோடு அந்த வெற்றியின் காரணமாகத் தன்னுடைய நிலைமையில் என்ன மாறுதல் ஏற்படுமோ என்ற கவலையும் உண்டாயிற்று.

கோட்டைத் தளபதி பீமசேனன் அவளிடம் வந்து மாமல்லருக்கு ஓலை எழுதித் தரும்படி கேட்ட போது சிவகாமி தன்னுடைய வாழ்க்கையில் என்றும் அடையாத பெருமிதத்தை அடைந்தாள். அவ்விதமே சேனாதிபதிக்கு ஓலையும் எழுதித் தந்தாள். அதிலே தன்னுடைய அறிவினால் சிந்தித்து என்ன முடிவுகளுக்கு வந்திருந்தாளோ அந்த முடிவுகளையெல்லாம் எழுதியிருந்தாள். அவற்றையொட்டி வேண்டுகோளும் செய்திருந்தாள்.

ஆனால், அவளுடைய இதய அந்தரங்கத்தில் குடிகொண்டிருந்த உணர்ச்சியை அந்த ஓலை பிரதிபலித்ததாகச் சொல்ல முடியாது. தன்னையும் தன் கலையையும் அவமதித்து அவமானப்படுத்திய அந்த நகரத்து மக்கள் மீது பழிக்குப் பழி வாங்க வேண்டும் என்னும் ஆசை அவளுடைய உள்ளத்தின் அடிவாரத்தில் இன்னும் இருக்கத்தான் செய்தது. எனவே, ஓலை எழுதி அனுப்பிய பிறகு சிவகாமி ஒவ்வொரு சமயம், 'ஏன் அந்த ஓலையை எழுதி அனுப்பினோம்? அவ்வாறு எழுதி அனுப்ப நமக்கு என்ன உரிமை? இவ்வளவு பெரும் பிரயத்தனங்களுடனே படையெடுத்து வந்திருக்கும் மாமல்லரும் சேனாதிபதியும் அதைக் குறித்து என்ன எண்ணுவார்களோ? பெண் புத்தியின் பேதைமையைக் குறித்துப் பரிகசித்து இகழ்வார்களோ? ஒருவேளை அதை ஒப்புக் கொண்டு காரியம் நடத்திய பிறகு என்னை ஏசிக் காட்டுவார்களோ?' என்றெல்லாம் எண்ணமிட்டாள்.

அவ்விதம் தான் ஓலை எழுதி அனுப்பியது குறித்து அவளைப் பச்சாத்தாபம் கொள்ளச் செய்த சம்பவங்கள் சிலவும் பிற்பாடு ஏற்பட்டன. கோட்டைத் தளபதி சிவகாமியின் மாளிகைக்கு வந்து விட்டுப் போனதிலிருந்து அவளுடைய மாளிகை வாசலில் அடிக்கடி கூட்டம் சேர ஆரம்பித்தது. அநேகமாகச் சிவகாமியை மறந்து விட்டிருந்த வாதாபி மக்கள் அப்போது

அமரர் **கல்கி**

தங்களுக்கு நேர்ந்திருக்கும் பெரும் விபத்துக்குக் காரணம் சிவகாமிதான் என்பதை நினைவுகூர்ந்து அவள் வசித்த வீதியில் கூட்டம் போடவும், அவளைப் பற்றி இகழ்ந்து பேசவும் ஏசவும் ஆரம்பித்தார்கள். கூட்டத்தின் இரைச்சலைக் கேட்டுச் சிவகாமி அதன் காரணத்தை அறிந்து கொள்ளுவதற்காகப் பலகணியின் வழியாக எட்டிப் பார்த்த போது அந்த ஜனங்கள் 'ஓஹோ' என்று சப்தமிட்டும் சிரித்தும் கோரணி காட்டியும் ஏளனம் செய்தார்கள்.

விஷயம் இன்னதென்பதை ஏற்கெனவே அறிந்திருந்த சிவகாமியின் தோழிப் பெண் அவளைப் பலகணியின் பக்கத்திலிருந்து பலாத்காரமாக இழுத்துச் சென்றாள். அப்போது மறுபடியும் அந்த ஜனக் கூட்டம் விகாரமாகக் கூச்சலிட்டுக் கேலிச் சிரிப்பு சிரித்த சப்தம் சிவகாமியின் காதில் விழுந்தது. அவளுடைய இருதயத்தில் வெகு காலத்துக்கு முன்பு எரிந்து அடங்கி மேலே சாம்பல் பூத்துக் கிடந்த குரோதத் தீயானது அந்த நிமிஷத்தில் மறுபடியும் கொழுந்து விட்டு எரியத் தொடங்கியது. 'மாமல்லர் மட்டும் உண்மையான வீரமுள்ள ஆண் மகனாயிருந்தால் நான் பேதைமையினால் எழுதிய ஓலையைக் கிழித்து எறிந்து விட்டு இந்த நகரத்துக்குள்ளே படையுடன் பிரவேசிப்பார்; என்னுடைய பழைய சபதத்தை நிறைவேற்றுவார்; இந்த நகரத்தை நரகமாக்கி நாகரிகம் சிறிதுமற்ற மிருகப் பிராயமான இந்த மக்கள் ஓலமிட்டு அலறி ஓடும்படிச் செய்வார். அந்தக் காட்சியைப் பார்த்தால்தான் என் உள்ளம் குளிரும்!'' என்று எண்ணிக் கொண்டாள். அந்தக் காட்சியைத் தன் மானசிக திருஷ்டியில் பார்த்து மகிழவும் தொடங்கினாள்.

நேரமாக ஆகத் தெருவில் கூட்டமும் கூச்சலும் அதிகமாகிக் கொண்டு வந்தன. கூட்டத்திலே இருந்த சில உற்சாக புருஷர்கள் வீட்டின் கூரை மீதும் வாசற்கதவின் மீதும் கல்லை விட்டு எறிந்தார்கள். கல், கதவின் மேல் விழுந்து படார் சப்தம் உண்டாக்கிய போது கூட்டத்தில் கேலிச் சிரிப்பு பீறிட்டு எழுந்தது.

அன்று மாலை திடீரென்று அப்பெருங் கூட்டத்தில் ஒருகணம் நிசப்தம் ஏற்பட்டது. அந்த நிசப்தத்தைக் கலைத்துக் கொண்டு பறைகொட்டும் சப்தம் கேட்டது. பறைச் சப்தம் நின்றதும் இடி முழக்கம் போன்ற ஒரு குரல், ''சக்கரவர்த்தி கோட்டைக்குள் வந்து விட்டார்! பல்லவர் படையைத் துவம்சம் செய்து வெற்றிக் கொடி நாட்டப் போகிறார். எல்லாரும் அவரவர்கள் வீட்டுக்குப் போங்கள். ஆயுதம் எடுக்கத் தெரிந்த ஆண் பிள்ளைகள் அனைவரும் அரண்மனை வாசலுக்கு வந்து சேருங்கள்!'' என்று முழங்கிற்று.

உடனே அந்த ஜனக் கூட்டத்தில், ''வாதாபிச் சக்கரவர்த்தி வாழ்க! பல்லவ மாமல்லன் நாசமடைக!'' என்று குதூகல கோஷம் எழுந்தது. கொம்மாளமாக இரைச்சல் போட்டுக் கொண்டு ஜனங்கள் கலைய ஆரம்பித்தார்கள். ஏதோ இந்திரஜாலத்தினால் நடந்தது போல் கண்மூடித் திறக்கும் நேரத்தில் சிவகாமியின் மாளிகை வாசலில் ஒருவரும் இல்லாமற்போயினர். அவ்விதம் வெறுமையான இடத்தில் சிறிது நேரத்துக்கெல்லாம் சளுக்க வீரர்கள் இருபது பேர் வந்து நின்றார்கள். சிவகாமியின் மாளிகை வாசலையும் வீதியின் இருபுறங்களையும் அவர்கள் காவல் புரியத் தொடங்கினார்கள்.

சிவகாமி தன்னுடைய தோழிப் பெண்ணின் மூலம் மேற்கூறிய சம்பவங்களுக்குக் காரணங்களை அறிந்த போது அவளுடைய மனம் ஒருவாறு நிம்மதியடைந்தது. புலிகேசி உயிர் பிழைத்துக் கோட்டைக்குள் வந்து விட்டபடியால், இனி யுத்தந்தான்; சந்தேகமில்லை. தன்னுடைய சபதம் நிறைவேறும் காட்சியைக் கண்ணால் பார்த்தால் போதும்; மற்றபடி எது எப்படியானாலும் ஆகிவிட்டுப் போகட்டும். மூர்க்க வாதாபி ஜனங்களாலோ ராட்சஸப் புலிகேசியினாலோ தனக்கு ஏதாவது அபாயம் நேரக் கூடும். நேர்ந்தால் நேரட்டும். அதை எதிர்பார்த்துச் சிவகாமி கையில் கத்தி ஒன்றை ஆயத்தமாக வைத்திருந்தாள். தன்னுடைய கற்புக்குப் பங்கம் வரும்படியான காரியம் ஏற்படுவதாயிருந்தால் பிராணத் தியாகம் செய்து கொள்வதென்று வெகு காலமாக அவள் உறுதிகொண்டிருந்தாள். கையிலே கத்தி இருக்கிறது; கொல்லைப்புறத்துக் கிணறு இருக்கவே இருக்கிறது!

பல்லவ சைனியம் வாதாபிக் கோட்டையைத் தாக்க ஆரம்பித்த அன்று சாயங்காலம், அந்த நகருக்குள்ளே சூறைக் காற்றும் பெருமழையும் சேர்ந்து அடிக்கும் போது நடுக்கடலில் என்னவிதமான பயங்கர ஓசை எழுமோ அம்மாதிரி ஓசை எழுந்தது. நூற்றுக்கணக்கான யுத்த பேரிகைகளின் முழக்கம், ஆயிரக்கணக்கான தாரை, தப்பட்டை, சங்கம் முதலியவைகளின் ஒலி, பதினாயிரக்கணக்கான வீரர்களின் ஜயகோஷம், இலட்சக்கணக்கான மக்களின் ஆரவார இரைச்சல்; இந்த ஓசைகளெல்லாம் கோட்டை மதில்களிலும் மண்டபங்கள் கோபுரங்களிலும் மோதும் போது எழுந்த பிரதித்வனி எல்லாம் சேர்ந்து இன்னதென்று விவரித்துச் சொல்ல முடியாத பேரொலியாகத் திரண்டு எழுந்து கேட்போ

ின் உடல் நரம்புகளையெல்லாம் முறுக்கி விட்டு உள்ளங்களை வெறிகொள்ளச் செய்தன.

அன்று சூரியாஸ்தமன நேரத்தில் அந்த மாநகரில் வாழ்ந்த பத்து லட்சம் ஜனங்களும் ஏறக்குறையப் பித்துப் பிடித்தவர்கள் போலாகித் தாம் செய்யும் காரியம் இன்னதென்று தெரியாமல் செய்கிறவர்களும், தாம் பேசுவது இன்னதென்று தெரியாமல் பேசுகிறவர்களும் ஆனார்கள்.

இத்தகைய வெறி சிவகாமியையும் மற்றவர்களைக் காட்டிலும் அதிகமாகவே ஆட்கொண்டது. ஒருகண நேரமாவது அவளால் ஓரிடத்தில் உட்கார்ந்திருக்க முடியவில்லை. ஆனால், வீட்டை விட்டு வெளியே போவதென்பது அவளுக்கு இயலாத காரியம். சிறிது நேரம் வீட்டுக்குள்ளேயே அங்குமிங்கும் நடந்தாள். பிறகு பலகணியின் வழியாக வாசலில் எட்டிப் பார்த்தாள். ஜனங்கள் தலைதெறிக்கக் கிழக்கேயிருந்து மேற்கேயும் மேற்கேயிருந்து கிழக்கேயும் ஓடிக் கொண்டிருந்தார்கள். வீட்டின் மேல் மச்சில் ஏறிப் பார்த்தாள். நகரின் அலங்கோலக் காட்சி இன்னும் கொஞ்சம் அதிகமாகத் தெரிந்தது. அவளுடைய மாளிகையின் பின்புறத்தில் கோட்டை மதில் வெகு சமீபத்தில் இருந்த படியால் அதன் மீது ஏறிப் போருக்கு ஆயத்தமாக நின்ற வீரர்களின் காட்சியை நன்றாகப் பார்க்க முடிந்தது. மற்றும் வீதிகளில் அணிவகுத்துச் சென்று கொண்டிருந்த போர் வீரர் படைகளையும் அங்குமிங்கும் ஓடிக் கொண்டிருந்த ஜனங்களின் காட்சியையும் பார்க்க முடிந்தது.

மறுபடியும் கீழிறங்கி அவளுடைய தோழிப் பெண்ணைத் தெரு வாசலில் போய் விவரம் அறிந்து கொண்டு வரும்படி ஏவினாள். அவ்விதமே தோழி வெளியே போய் விட்டு வந்து அன்றிரவு பல்லவர் படை கோட்டையைத் தாக்கப் போவதாகச் செய்தி கொண்டு வந்தாள். அது மட்டுமல்ல; தான் அன்றிரவு சிவகாமிக்குத் துணையாக இருக்க முடியாதென்றும், யுத்த நிலைமை என்ன ஆகுமோ என்ற பீதி ஏற்பட்டிருப்பதால் தன்னுடைய சொந்த வீட்டுக்குப் போய் உறவினரோடு இருக்க விரும்புவதாகவும் கூறினாள். சிவகாமி அவளை எவ்வளவு கேட்டுக் கொண்டும் பயனில்லை. மற்றொரு வேலைக்காரியையும் அழைத்துக் கொண்டு அவள் போய் விட்டாள். அவ்விருவரும் போகும் போது மாளிகையின் கதவு திறந்த சமயம், வாசலில் காவல் புரிந்த வீரர்கள் பொறுமை இழந்து தாங்கள் மட்டும் எதற்காக அங்கு நின்று அந்த வீட்டைக் காவல் புரிய வேண்டும் என்று பேசிக் கொண்டிருந்தது சிவகாமியின் காதிலே விழுந்தது. 'கதவைக் கெட்டியாகச்

அருள்வாக்கு

மௌனம் என்றால் எந்தவிதத்திலும் அபிப்பிராயம் தெரிவிக்காமல் இருக்க வேண்டும். வாயை மட்டும் மூடிக் கொண்டு ஏதாவது ஜாடை காட்டித் தெரிவித்துக் கொண்டிருந்தால் பிரயோஜனமில்லை. அவசியமானதற்கு மட்டும் எழுதி வேண்டுமானால் காட்டலாம். ''காஷ்ட மௌனம்'' என்று மரக்கட்டை மாதிரி இருப்பதாக ஸங்கல்பித்துக் கொண்ட ஸமயங்களில் நிச்சயமாக ஜாடை காட்டுவது எழுதிக் காட்டுவது எதுவுமே கூடாது.



ஆரம்பத்தில் எல்லாக் காரியத்தையும், எண்ண ஓட்டத்தையும் விட்டு மௌனமாயிருப்பதென்றால் முடியாது தான். என்ன ஜாடை காட்டினாலும், எழுதினாலும் பேசுகிற அளவுக்கு வளவளப்பும் வ்ருதாவும் இருக்காதல்லவா? ஸதா அரித்துக் கொண்டிருக்கிற நாக்கை எப்படியும் அன்றைக்குக் கட்டிப் போடுகிறோமல்லவா? அந்த மட்டுக்கும் நல்லதுதான். இப்படி ஆரம்பித்து, அப்புறம் கொஞ்சம் கொஞ்சமாகச் சித்த ஆட்டங்களை விட்டு விட்டு, மௌனம் என்றால் மனஸுக்குப் பரம சாந்தி என்று ஆக்கிக் கொண்டு, அப்படியே அலையில்லாத சமுத்திரம் மாதிரி ஆகி விட வேண்டும். குறைபாட்டுடனாவது ஏதோ ஒரு இடத்தில் ஆரம்பித்து விட வேண்டும். அப்யாஸத்தினால் குறைகள் குறைந்து கொண்டே போய் பூர்ண நிலை வரும்; நிஜ மௌனம் ஸித்திக்கும்.

இப்போது ஆரம்பிக்கிற மௌனம் ஈச்வர ஆராதனைக்கு ஒரு ஸாதனம். பிற்பாடு பூர்த்தி ஸ்தானத்தில் அந்த மௌனமே 'ஈச்வரன் வேறேயாக இல்லை, அவனுக்குத் தனியாக ஆராதனை என்று பண்ண வேண்டியதில்லை'' என்ற ஸாத்ய லக்ஷ்யமாக நிஜ ரூபத்தில் பிரகாசிக்கும். வாய் பேசவில்லை என்பது மட்டுமின்றி, கண் பார்க்கவில்லை, காது கேட்கவில்லை, எல்லாவற்றுக்கும் மேலே, மனஸில் ஒரு எண்ணங் கூட எழும்பவில்லை என்று ஆகி விடுவதுதான் நிஜ மௌனம்.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்

சாத்தித் தாழ்கள் எல்லாவற்றையும் போட்டாள். அந்த மாளிகையின் வாசற் கதவுகள், கோபுர வாசல் கதவுகளைப் போன்ற பெரிய கதவுகள். ஒரு கதவில் திட்டி வாசல் ஒன்று இருந்தது. அதாவது ஒரு பெரிய மனிதர் உள்ளே நுழையக் கூடிய அளவு துவாரமும் அதற்கு ஒரு தனிக் கதவும் தாழ்ப்பாளும் இருந்தன. தோழியும் வேலைக்காரியும் அந்தத் திட்டி வாசல் வழியாகத்தான் வெளியே சென்றார்கள்.

சிவகாமி வாதாபியில் வசித்த காலத்தில் சாதாரணமாகவே சொற்ப நேரந்தான் தூங்குவது வழக்கம். அன்றிரவு அவள் கண்ணை மூடவில்லை; 'வெளியே என்ன நடந்து கொண்டிருக்கிறது? என்ன நடக்கப் போகிறது?' என்று அறிந்து கொள்ள அவளுடைய உள்ளமும் உடம்பின் நரம்புகளும் துடித்துக் கொண்டிருந்தன. அடிக்கடி பெருமூச்சு எழுந்தது. நெஞ்சு 'தடக் தடக்' என்று அடித்துக் கொண்டது. அடி வயிற்றை என்னவோ செய்தது.

நடுநிசி ஆன போது, நகரின் பல இடங்களில் வீடுகள் தீப்பற்றி எரிய ஆரம்பித்ததைச் சிவகாமி தன் மாளிகையின் மேல் மாடியிலிருந்து பார்த்தாள். ஒன்பது வருஷத்துக்கு முன்னால் தான் செய்த சபதம் நிறைவேற ஆரம்பித்து விட்டது என்பதைத் தெரிந்து கொண்டாள். அவளுடைய வாழ்க்கையில் அதுவரையில் அவள் அநுபவித்திராத திருப்தி அவள் மனத்தில் அப்போது ஏற்பட்டது. அதே சமயத்தில் காரணம் தெரியாத ஒருவித மனவேதனையும் உண்டாயிற்று.

நகரிலே நாற்புறமும் தீ பரவி வந்தது. அன்று சாயங்காலம் அந் நகரில் ஏற்பட்டிருந்த மகத்தான ஆரவாரம் இப்போது வேறு ஸ்வரூபத்தை அடைந்தது. குதூகலமான ஜயகோஷங்கள் அலறலும் ஓலமுமாக மாறின. மக்களின் பெருமித வீர நடையானது பயப்பிராந்தி கொண்ட ஓட்டமாக மாறியது. வர வர ஸ்திரீகள், குழந்தைகளின் ஓலமும் ஓட்டமும் அதிகமாகி வந்தன. இதையெல்லாம் பார்க்கச் சிவகாமியின் மனத்தில் திருப்தி மறைந்து வேதனை அதிகமாயிற்று. கடைசியில் அந்தக் கோரக் காட்சிகளைப் பார்க்கச் சகியாமல் மேல் மாடியிலிருந்து கீழே இறங்கினாள். 'ஆகா! இது என்ன நம்மால் விளைந்த விபரீதம்? இதன் முடிவுதான் என்ன? இந்தப் பெரிய நகரம் முழுவதும் உண்மையாகவே எரிந்து அழிந்து விடப் போகிறதா? இதிலே வசிக்கும் இத்தனை இலட்சக்கணக்கான மக்களும் பெண்களும் குழந்தைகளும் செத்து மடியப் போகிறார்களா? ஐயோ! இது என்ன? என்னுடைய கதி என்ன ஆகப் போகிறது?' என்று அவள் உள்ளத்தில் ஆயிரக்கணக்கான சிந்தனை அலைகள் கொந்தளித்து எழுந்து உடனே மறைந்தன.

அப்புறம் மேல் மாடிக்கே போக மனமில்லாமல் வீட்டுக் கூடத்தில் அங்குமிங்கும் நடந்து கொண்டிருந்தாள். அலைந்து அலைந்து கால்கள் களைத்து வலி எடுத்துப் போயின. வெறுந்தரையில் குப்புறப் படுத்துக் கொண்டாள். அழுகை வந்து கண்ணீர் பெருகினால் தேவலையென்று தோன்றியது. ஆனால், அழுகையும் வரவில்லை. கண்ணீர் சுரக்கும் இடத்தில் ஏதோ அடைத்துக் கொண்டு கண்ணீர் வரவொட்டாமல் செய்து விட்டது. பொழுது விடியும் சமயம் ஆயிற்று. முற்றத்தில் உதய நேரத்துக்குரிய மங்கலான வெளிச்சம் காணப்பட்டது. அச் சமயம் அந்த வீட்டு வாசலில் ஒரு பெரும் ஆரவாரம் கேட்டது.

சட்டென்று சிவகாமியின் மனத்தில் ஓர் எண்ணம் உதித்தது. ஒருவேளை மாமல்லர்தான் வருகிறாரோ? தன் சபதத்தை



நிறைவேற்றித் தன்னை அழைத்துக் கொண்டு போவதற்காக வருகிறாரோ? அப்படியானால் ரொம்ப நல்லது. இந்த மாநகரின் படுநாசத்தை இப்போதாவது தடுக்கலாம். அவர் காலில் விழுந்து, ''பிரபு! போதும்! நிறுத்துங்கள்!'' என்று கெஞ்சலாம்.

இப்படி எண்ணியவளாய்ச் சிவகாமி பரபரவென்று எழுந்து ஓடினாள். கதவண்டை சென்றதும் மனம் தயங்கிற்று. எல்லாவற்றிற்கும் திட்டி வாசற் கதவைத் திறந்து பார்க்கலாம் என்று திறந்தாள். அங்கே தோன்றிய காட்சி அவளைத் திகைத்துப் பீதியடையச் செய்தது. மாமல்லரையோ பல்லவ வீரர்களையோ அங்கே காணவில்லை. கோபங்கொண்ட வாதாபி ஜனக் கூட்டந்தான் காணப்பட்டது. அந்தக் கூட்டத்தாரில் சிலர் வீட்டைக் காவல் புரிந்த சளுக்க வீரர்களுடன் ஏதோ வாதாடிக் கொண்டிருந்தார்கள்.

சிவகாமியின் முகம் திட்டி வாசலின் மூலம் தெரிந்ததும் அந்த ஜனக் கூட்டத்தில் பலநூறு சிறுத்தைப் புலிகளின் உறுமல் சப்தம் போன்ற ரோமம் சிலிர்க்கச் செய்யும் சப்தம் உண்டாயிற்று. கூட்டத்திலே பலர் காவல் புரிந்த வீரர்களைத் தள்ளிக் கொண்டு வீட்டு வாசற்படியை நோக்கிப் பாய்ந்து வந்தார்கள்.

சிவகாமிக்கு நிலைமை ஒருவாறு புலப்பட்டது. சட்டென்று திட்டி வாசலை மூடினாள். அவசரத்தினாலும் பயத்தினாலும் அதைத் தாழிட மறந்து போனாள். உடனே அங்கிருந்து மாளிகையின் பின் கட்டை நோக்கி விரைந்து சென்றாள். திட்டமான யோசனையுடன் செல்லவில்லை. அந்தச் சமயம் அந்த மூர்க்கங்கொண்ட ஜனங்களிடமிருந்து தப்ப வேண்டுமென்று இயற்கையாகத் தோன்றிய எண்ணம் அவளுடைய கால்களுக்குப் பலத்தை அளித்து வீட்டின் பின்கட்டை நோக்கி விரைந்து ஓடச் செய்தது.

வீட்டுப் பின்கட்டின் வாசற்படியைத் தாண்டித் தாழ்வாரத்தை அடைந்ததும், உதய நேரத்தின் மங்கிய வெளிச்சத்தில் அங்கு ஓர் உருவம் - கபாலங்களையும் எலும்புகளையும் மாலையாகப் பூண்ட கோரமான ஸ்திரீ உருவம் - நிற்பதைச் சிவகாமி பார்த்தாள். அவளுடைய உடம்பில் இரத்த ஓட்டம் ஒரு நிமிஷம் நின்று விட்டது. தேகமாத்தியந்தம் ரோமங்கள் குத்திட்டு நின்றன. சிவகாமியைப் பார்த்ததும் அந்தப் பெண் பேய் கலகலவென்று சிரித்தது. பிறகு, 'அடி அழகி சிவகாமி! கலைவாணி சிவகாமி! மாமல்லனையும் நாகநந்தியையும் மோக வலைக்கு உள்ளாக்கிய நீலி! உன் அழகெல்லாம் இப்போது என்ன செய்யும்? உன் கண் மயக்கும், முகமினுக்கும் உன்னை இப்போது காப்பாற்றுமா?''



என்று அந்தப் பெண் பேய் கேட்டு விட்டு மறுபடியும் சிரித்தது.

''அடி சிவகாமி! நானும் உன்னைப் போல் ஒரு சமயம் கண்டவர் மயங்கும் மோகினியாகத்தான் இருந்தேன். உன்னாலே இந்தக் கதிக்கு ஆளானேன். அதற்குப் பழிவாங்கும் சமயத்திற்காக இத்தனை காலம் காத்திருந்தேனடி!'' என்று பல்லைக் கடித்துக் கொண்டு கூறியவண்ணம் காபாலிகை தன் மடியில் செருகியிருந்த கத்தியைச் சட்டென்று எடுத்து ஓங்கினாள்.

சிவகாமிக்கு அப்போது சிந்தனை செய்யும் சக்தியோ, தப்பித்துக் கொள்ள யுக்தி செய்யும் சக்தியோ, சிறிதும் இல்லை. அவள் உள்ளம் ஸ்தம்பித்துப் பிரமை கொண்டிருந்தது. எனினும், எத்தகைய ஆபத்திலிருந்தும் தன் உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்கு முயற்சி செய்யும் இயற்கைச் சுபாவத்தை ஒவ்வொரு ஜீவனுக்கும் இறைவன் அளித்திருக்கிறான் அல்லவா? அந்தச் சுபாவம் காரணமாகச் சிவகாமி ஓர் அடி பின்னால் நகர்ந்தாள்.

அந்தக் கணத்தில் காபாலிகைக்குப் பின்புறத்தில் அவள் அறியாமல் ஓர் உருவம் திடீரென்று தோன்றியது. பின்கட்டின் வாசற்படி வழியாக நுழைந்த அந்த உருவம் காபாலிகையின் கத்தி பிடித்த கையைச் சட்டென்று கெட்டியாகப் பிடித்துக் கொண்டது.

அந்தப் பிடியின் பலத்தினால் காபாலிகையின் கைவிரல்கள் விரிந்து கத்தி தரையில் விழுந்தது. அளவில்லாத குரோதத்துடன் காபாலிகை திரும்பிப் பார்த்தாள்.

''அட பாவி! நல்ல சமயத்தில் வந்து விட்டாயா?'' என்றாள்.

அப்படி அதிசயமாகத் திடீரென்று தோன்றித் தன் உயிரைக் காத்த உருவத்தைச் சிவகாமியும் அப்போது உற்றுப் பார்த்தாள்.

அந்த உருவம் வாதாபிச் சக்கரவர்த்தி புலிகேசிதான் என்று தெரிந்த போது சிவகாமிக்கு உண்டான வியப்பும் திகைப்பும் எல்லையற்றவையாயின. ஆகா! சக்கரவர்த்தி செத்துப் போனதாகச் சொன்னார்களே! ஒருவேளை அவருடைய ஆவி, வடிவமா? அல்லது, அல்லது... முன்னொரு சமயம் செய்ததைப் போல் ஒருவேளை பிக்ஷுதான் சக்கரவர்த்தி வேஷம் பூண்டு வந்திருக்கிறாரோ?

(தொடரும்)

!! மூன்று மிலியன் செல்கள், ஒரு கஜ நீளத்துக்கு ரத்த நாளங்கள், நான்கு கஜ நீள நரம்புகள், நூறு வியர்வைச் சுரப்பிகள், பதினைந்து எண்ணெய்ச் சுரப்பிகள், இவ்வளவும்.... ஒரு தபால்தலை அளவு மனிதத் தோலில் அடக்கம்!

!! கடந்த நூற்றாண்டைக் காட்டிலும் இப்போது எவரஸ்ட் சிகரம் ஓர் அடி உயர்ந்திருக்கிறது - இன்னமும் வளர்ந்து கொண்டேயிருக்கிறது.

!! கலிலியோ தமது வாழ்வின் இறுதிக் கட்டத்தில் கண் பார்வையை முற்றிலும் இழந்து விட்டார். தொலைநோக்கி மூலமாகச் சூரியனை ஆராய்ந்து வந்ததால் ஏற்பட்ட இழப்பு இது எனக் கருதப்படுகிறது.

!! டைகோ ப்ராஹே என்ற டேனிஷ் நாட்டு வானிலை ஆராய்ச்சியாளர் (1546-1601) தமது 24 வது வயதில் கத்திச் சண்டை போடும் போது அவர் மூக்கின் பெரும்பகுதி



அறுபட்டது. தங்கம், வெள்ளி, மெழுகு கலவையில் செயற்கை மூக்கு செய்வித்துப் பொருத்திக் கொண்டார். இயற்கை மூக்கு போலவே தோன்றும்படி வர்ணம் தீட்டப்பட்ட இந்த மூக்குடன் 30 ஆண்டுகள் வாழ்ந்தார்.

!! கிருஸ்துமஸ் வாழ்த்து அட்டையை முதன் முதலில் வடிவமைத்தவர் ஃப்.வி. ஹார்ஸ்லி - 1843 இல். தபால் துறை ஆரம்பிக்கப்பட்டு முழு மூச்சுடன் இயங்கத் தொடங்கியதும் வாழ்த்து அட்டைகள் அனுப்பும் வழக்கமும் பிரபலமாகியது.

!! Idiot என்பது வசைமொழி என அறிவோம். கிரேக்கச் சொல்லிலிருந்து பிறந்த இந்த வார்த்தை அம் மொழியில் அரசுப் பணியில் இடம்பெறாத நபரைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டது!

!! பதினெட்டாம் நூற்றாண்டிலேயே இங்கிலாந்தில் காஃபி ஹவுஸ்கள் பிரபலமாக இருந்தன. எழுத்தாளர்களும் இலக்கிய கர்த்தாக்களும் சந்திக்கும் 'மடங்'களாக இவை திகழ்ந்தன. இங்கே பணியாற்றிய ஊழியர்கள் 'To Insure Promptness' (துரித சேவைக்கு உத்தரவாதம் பெற) என்ற வாசகத்துடன் கூடிய ஒரு உண்டியலை வாடிக்கையாளர்கள் கண்ணில் படும்படி வைத்திருந்தார்கள். இந்த ஆங்கில வாசகத்தின் மூன்று சொற்களின் முதல் எழுத்துக்களின்

எவரஸ்டை விட உயரமான எவரஸ்ட்!



இணைப்பே 'Tip'

!! மேஜை விரிப்புகள், விருந்தினர்கள் உணவருந்தி முடித்தபின் கை, வாய், முகங்களைத் துடைத்துக் கொள்வதற்கென்றே முதன் முதலில் பயன்படுத்தப்பட்டன.

!! கற்கால மனிதனின் சராசரி உயரம் 5 அடி 9 அங்குலம். தற்போதைய சராசரி மனித உயரம் இதைவிட ஓர் அங்குலம் குறைவே.

!! கி. பி. 440 ஆம் ஆண்டு வரை டிசம்பர் 25 ஆம் தேதி ஏக கிறிஸ்துவின் பிறந்த தினமாகக் கொண்டாடப்படவில்லை.

தொகுப்பு : உதய்லால்

புளியை நனைத்துக், கரைத்து, வடிகட்டும் தொல்லையிலிருந்து விடுதலை!



அன்றாடம் எழுந்ததுமே இன்றைக்கு என்ன சமையல் என யோசித்து, முதற்காரியமாக பெண்கள் செய்வது புளியை நனைக்கும் வேலையைத்தான். புளியை முன் கூட்டியே ஊற வைத்து, கசக்கி சாறெடுத்து, கோது, விதை முதலியவை நீங்குவதற்காக வடிகட்ட வேண்டும். அவசரச் சமையல் என்றால் கேட்கவே வேண்டாம். இந்தப் பிரச்சனைகளுக் கெல்லாம் முற்றுப் புள்ளியாக வந்திருப்பதுதான் டாமரிண்ட் ப்யூரி.



வற்றல் குழம்பு

டாமரிண்ட் ப்யூரி என்பது புத்தம்புது புளியிலிருந்து எடுக்கப்பட்ட கெட்டியான சாறு. பாதுகாக்கும் பொருட்களோ, செயற்கை நிறங்களோ சேர்க்கப்படாத இது அசல் புளியின் சுவையுடனும், நிறத்துடனும், மணத்துடனும் உபயோகிக்கத் தயார் நிலையிலே வருகிறது. குறிப்பாக, வேலைக்குச் செல்லும் பெண்களுக்கு இது ஒரு வரப்பிரசாதம் என்றே கூறலாம்.

வற்றல் குழம்பு, மிளகு குழம்பு, புளிக் காய்ச்சல், புளிப் பச்சடி, புளி மிளகாய் போன்ற புளியை பிரதானமாகக் கொண்டவற்றை, நினைத்ததும் சுலபமாக இதைக் கொண்டு தயாரிக்கலாம். இதர பொருட்களைத் தாளித்துக் கொண்டு, சிறிது நீர் விட்டு, டாமரிண்ட் ப்யூரியை தேவையான அளவு போட்டு இரண்டு கொதி வந்ததும் இறக்கி விடலாம்.



புளியோதரை

டாமரிண்ட் ப்யூரி அதி நவீன, அழகிய டெட்ரா பேக்கிலே பேக் செய்து வருகிறது. பேக்கைத் திறந்த பின் 6 நாட்களுக்கு இதை ஃப்ரிட்ஜில் வைத்திருக்கலாம்.

பாதுகாக்கும் பொருட்களோ, செயற்கை நிறங்களோ சேர்க்கப்படவில்லை.
அதனால் பேக்கைத் திறந்தபின் இதை ஃப்ரிட்ஜில் வைத்து 6 நாட்களுக்குள் உபயோகிக்கவும்.

Godrej* FOODS

டாமரிண்ட் ப்யூரி.

புளியின் அசலான சுவை,
தொல்லையிலிருந்து விடுதலை.

தமிழ்நாட்டில் மட்டும் கிடைக்கிறது.

Enterprise/GFL/480 Tm

24/08/91

அன்புள்ள ஆசிரியர் அவர்களுக்கு,

வணக்கம்.

கிட்டத்தட்ட இரண்டு வருடங்களாக நானும் விடாமுயற்சியுடன் தங்கள் பத்திரிகைக்குக் கதை, கவிதை, கட்டுரை, துணுக்குகள், அறிஞர் கூறிய பழமொழிகள் என்று தொடர்ந்து அனுப்பிக் கொண்டிருக்கிறேன். அவற்றில் ஒன்றைக் கூட தாங்கள் தேர்ந்தெடுக்கவில்லை. அவ்வளவு ஏன்? தங்கள் இதழில் போன வாரம் வெளியான 'அவனுக்கு ஏன் தினம் தினம் பசிக்கிறது' என்கிற கதையைப் பாராட்டி - 'கற்கண்டு பொடியில் தேன் தடவி வாழைப் பழத்திற்குள் திணித்துத் தின்ற மாதிரி இருந்தது'- என்று நான் எழுதிய வாசகர் கடிதத்தைக் கூட தாங்கள் பிரசுரிக்கவில்லை என்கிறபோது தான் எனக்கு வாழ்க்கையே வெறுத்துப் போனது.

ஆனாலும் விடுவதாக இல்லை. தங்கள் மோதிர விரலால் குட்டுப் பட்டே தீருவது என்று முடிவு செய்துவிட்டேன். இத்துடன் பகீரதப் பிரயத்தனத்துடன் யான் எழுதிய வளையலும் வனிதையும் என்கிற சிறு கதையை இணைத்திருக்கிறேன்.

இது என் எழுத்துலக சரித்திரத்தில் ஒரு திருப்பு முனையாக அமையும் என்கிற நம்பிக்கையுடன்-

அன்பு -
'விக்கல் பிரியன்'

22/07/92

அன்புள்ளம் கொண்ட 'விக்கல் பிரியன்' அவர்களுக்கு,

வணக்கம்.

தாங்கள் அனுப்பியிருந்த 'வளையலும் வனிதையும்' என்கிற சிறுகதை பிரசுரத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம். பரிசீலனையின் முடிவை அறிவிக்க ஏற்பட்ட தாமதத்துக்காக வருந்துகிறோம்.

அன்புடன்,
ஆசிரியர்.

25.07.92

அன்புள்ள ஆசிரியர் அவர்களுக்கு,

வணக்கம்.

தங்கள் 28.7.92 தேதியிட்ட இதழ் கண்டு மிக்க அதிர்ச்சி அடைந்தேன்.

அதில் 'விக்கல் பிரியன்' எழுதி வெளியாகியுள்ள 'ஒரு வனிதை வளையல் அணிகிறாள்' என்கிற சிறுகதை ஏற்கெனவே என்னால் எழுதப்பட்டு 'கரப்பான் பூச்சி' வார இதழில் (10/10/72) வெளியாகியிருக்கிறது. 'வனிதையும் வளையலும்' என்கிற தலைப்பிலான அந்தக் கதையின் பிரதியை இத்துடன் இணைத்திருக்கிறேன்.

கிட்டத்தட்ட இருபது வருடங்கள் கடந்து விட்டதால் யாரும் கவனிக்க மாட்டார்கள் என்கிற எண்ணத்துடன் 'விக்கல் பிரியன்' தில்லுமுல்லு செய்திருக்கிறார். மேற்கண்ட இந்தக் கதை நான் எழுதிப் பிரசுரத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரே கதை என்பதால்தான், நான் நன்றாக ஞாபகம் வைத்துக் கொண்டு, இந்தத் தவறைத் தங்களுக்குத் தெரிவிக்க முடிந்தது.

இதற்குத் தக்க நடவடிக்கை மேற்கொள்வதோடு, இந்தக் கடிதத்தையும் தங்கள் இதழில் வெளியிட்டு, இருபது வருடங்கள் கழித்துப் பத்திரிகையில் என் பெயர் பார்க்கும் ஓர் அரிய சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுக்கும்படி வேண்டிக் கொள்ளும் -

'சந்திர சூரிய நட்சத்திரன்'

26.7.92

திரு விக்கல் பிரியன் அவர்களுக்கு,

வணக்கம் சொல்லும் நிலையில் நான் இல்லை.

தாங்கள் அனுப்பி எங்கள் இதழில் வெளியான சிறுகதை ஏற்கெனவே திரு 'சந்திர சூரிய நட்சத்திரன்' அவர்களால் எழுதப்பட்டு 'கரப்பான் பூச்சி' வார இதழில் வெளியாகியிருப்பதை அறிகிறோம்.

பகீரதப் பிரயத்தனத்துடன்



தாங்கள் இப்படி ஒரு மோசடி செய்வீர்கள் என்று நாங்கள் நினைக்கவில்லை. தங்கள் இழிவான நடவடிக்கையால் எங்கள் பத்திரிகைக்கு ஏற்பட்டிருக்கும் அவப்பெயருக்காக, தங்கள் மீது ஏன் வழக்கு தொடுக்கக் கூடாது என்பதைத் தெரிவிக்கவும்.

மோதிர விரலால் நிஜமாகவே
குட்டும் வெறியுடன் -
ஆசிரியர்.

29/7/92

அன்புள்ள ஆசிரியர் அவர்களுக்கு,

வணக்கம்.

வளையலும் வனிதையும் பயங்கர திருப்புமுனைதான்! அது பகீரதப் பிரயத்தனத்துடன் நான் எழுதிய கதை என்று தங்களுக்கு முன்னமேயே தெரிவித்திருந்தேன். மிக துன்பப்பட்டு, பரணில் எங்கள் தாத்தா கட்டிப் போட்டிருந்த புத்தகக் கட்டை தூசு தட்டி, 1958 ஆம் வருடத்துப் பத்திரிகை ஒன்றில் வந்திருந்த கதையைத்தான் நான் எழுதி அனுப்பினேன். அந்தக் கதையை எழுதியது சாட்சாத் என் தாத்தா - மு. செ. முத்துக்குமார வரதப்ப ஸ்வாமி!

மேற்கண்ட இதே பத்திரிகையைக் காப்பி அடித்துத்தான் அந்த 'சூரிய சந்திர நட்சத்திரன்' கூட எழுதியிருக்க வேண்டும் என்று நினைக்கிறேன்.

தயை புரிந்து, திரு சந்திர சூரிய நட்சத்திரன் அவர்களின் முகவரியை எனக்குத் தெரிவிக்கவும். அவர் மீது வழக்குத் தொடுக்க ஏற்பாடுகள் செய்யப் போகிறேன்.

நன்றி.

தங்கள்,
'விக்கல் பிரியன்'

ஒரு கதை!

சுபமுகா

17

அந்தி மயங்கி வருகிறது. மயங்கி மயங்கி இருட்டின் மடியில் சரிகிறது. தாடகை இருட்டு அரவமில்லாமல் கைகளை விரித்து, அந்தியையும், அந்தியின் மோகன அழகுகளையும் ஒருசேரச் சுருட்டி மறைத்துக் கொண்டது, வலையில் சிக்கிய பறவைகளைச் சாக்குக்குள் போட்டுக் கொள்கிற வேடனைப் போல.

ராசாத்தி, செங்கம்மா, ராமலட்சுமி மூவரும் பிரிந்து தத்தம் தெருவில் நடக்க... சொர்ணம் மட்டும் வீட்டுக்கு வந்தாள். மனசெல்லாம் மாமாவின் சொற்கள். நேற்று ராத்திரியே முள் முள்ளாய் உறுத்தியது. அச்சுறுத்தியது. முகமற்ற அச்சுறுத்தல்.

அந்தச் சொற்களின் அர்த்தம் எதுவாக இருக்கும்?

மனசு அயர்ந்து விட்டது. விதம் விதமாக யோசித்து ஓய்ந்துவிட்டது. வீட்டிற்குள் நுழைந்தாள். தூக்கு வாளியை அம்மாவிடம் ஒப்படைத்தாள். டப்பாவையும் சிட்டையும் பலகையில் வைத்தாள். ஒரு செம்பு நிறைய தண்ணீரை முகர்ந்து, 'மடக், மடக்' கென்று குடித்தாள். வயிறு முட்டி விட்டது.

கால் கையைக் கூட கழுவிக் கொள்ள ஆவல் இல்லை. குளிப்புக்கும் அவசரமில்லை. மனசின் பரபரப்பு.

நேற்றைய ரகசியத்தைத் தொட்டு விட வேண்டும் என்கிற குறுகுறுப்பு. இயல்புகளையெல்லாம் சுருட்டி உள்ளடக்கிக் கொண்டு, கர்வமில்லாமல்... ஒரு சிறுமியைப் போல ஆர்வமாய் நெருக்க நெருக்கமாய் வந்து உட்கார்கிற மகளை வியப்போடு பார்த்தாள், வேலாயி.

''என்னடியிது...? அதிசயமாயிருக்கு. கால்லே தண்ணியைக் கூட ஊத்தாம, இப்படி வந்து குழையுறே?''

''சும்மாத்தான்.''

''ம்...''

''எம்மா... ம்மா...''

''என்ன?''

''எம்மா.... மாமா எதுக்காக வந்துருந்தாரு?''

அக்கறையற்ற பாவனையில் கேட்டாலும், மகளுக்குள் ஒளிந்து கிடந்த சூட்சுமத்தை அந்தத் தாய் மனம் உணரத் தவறவில்லை. மகளைத் தழுவுகிற கண்களில் திகைப்பு, சின்ன அதிர்வு.

''எதுக்குக் கேக்கறே?''

பிடிபட்டுக் கொண்ட பறவையின் பயத்தோடு கள்ளப் பார்வை பார்க்கிற அம்மா. ஏதோ ஒரு பெரிய விஷயம் புதைந்து கிடப்பதை சொர்ணத்தால் யூகிக்க முடிகிறது.

''எதுக்கு இப்படிப் பதறிப் போறே? நான் சும்மாத்தான் கேக்குறேன்.''

''நா எதுக்குப் பதறணும்? அவரு... சும்மாத்தான் வந்துட்டுப் போறாரு.''

''ஒண்ணும் ஜோலியில்லாமலா?''

''இங்க அவருக்கு என்ன ஜோலியிருக்கு?''

''சோழியன் குடுமி சும்மா ஆடாதும்பாக. ஒரு ஜோலியுமில்லாம... ரெண்டும் ரெண்டும் நாலு மைல் தூரம் சைக்கிள் மிதிக்க மாமா எதுக்கு இங்க வரணும்?''

''அது கிடக்கட்டும். நீ எதுக்கு இப்புடிக் கொடைஞ்சு கொடைஞ்சு கேக்கே?''

''நீ எதுக்கு எங்கிட்டே மறைக்கணும்?''

''நா என்னத்தை மறைச்சிக்கிட்டேன்? எல்லாத்தையும் ஒங்கிட்ட சொல்லிர முடியுமா? சொல்லக் கூடியதைத்தான் சொல்லுவாக.''

அந்நியமானவளைப் போல அம்மா ஏன் ஒட்டாமல் பேசுகிறாள்? அடைக் கோழியைப் போல ஏன் 'வெடுக்' 'வெடுக்' கென்று இப்படிக் கொத்த வேண்டும்? கொத்திக் கொத்தி என்னைத் துரத்தி விட்டு, எந்த ரகசிய முட்டைகளைப் பொத்திப் பொத்தி மறைக்கப் போகிறாள்?

சுருட்டி வைத்த இயல்பு எப்போதோ விரிந்து வெளிப்பட்டு விட்டது. கர்வமும், அதிகாரமும் குரலின் தொனியாகி விட்டது. அம்மாவை அலட்சியமாகப் பார்த்தாள். உள்ளுக்குள் 'கள்'ளென்று வருகிற கோபம். குரலில் ஓர் அதட்டல்.

''என்னைப் பத்தி மாமா என்னமோ சொன்ன மாதிரியிருந்துச்சே?''

''ஒறக்கம் வர்ற வரைக்கும் என்னென்னத்தையோ பத்தியெல்லாம் பேசு

மேலாண்மை பொன்னுச்சாமி

வோம். ஒன்னைப் பத்தியும் பேச்சு வந்துச்சு.''

''அதான்... கேக்கேன், என்ன பேசுனீக?''

''ஆயிரம் பேசியிருப்போம். அதெல்லாம் நெனைச்சுக்கிட்டா இருக்க முடியும்?''

''மறைக்க முடிஞ்சா மறைக்கணும். முடியாதவளுக்கு இதெல்லாம் என்ன பாசாங்கு? மடியை இழுத்து இழுத்து மூடிக்கிட்டு, 'ஒன்னுமில்லே, ஒன்னுமில்லே'ன்னா... என்ன அர்த்தம்? நா என்ன சின்னப் பப்பாவா?''

''நீ கன்னிப் பொண்ணா இருக்கியேன்னு சொன்னாரு.''

''இது அவரு சொல்லித் தெரியுற விஷயமா? கல்யாணம் முடிக்கணும்னாரா?''

''ஆமா.''

அம்மா விசனத்தோடு அந்தப் பக்கமாய் முகத்தைத் திருப்பிக் கொண்டாள். சொர்ணம் கழுத்தைச் சாய்த்துக் கொண்டு அம்மாவைப் பார்த்தாள். மனசு மெல்லக் குழைகிறது.

அம்மாவின் முகத் திருப்பலில் கோபம் தெரியவில்லை. முட்டிக் கொண்டு முகம் காட்ட வருகிற அழுகையை மறைக்கிற அவசரம்தான் இருக்கிறது.

சொர்ணத்தின் உள் உணர்வு அதிர்கிறது.

எதுக்கு அழுகை? என்ன சோகம்? மகளிடம் கூட மறைக்க வேண்டிய அந்தரங்கச் சோகமா?

கல்யாணம் என்பது பிரச்னையான பிரச்னைதான். ஆனால், அழுகைக்குரிய விஷயமா? கண்ணீர் சிந்திக் கலங்கக்கூடிய சோகமா?

சொர்ணத்திற்குள் மெல்லிய குழப்பம். உள்ளுக்குள் ஒரு பயம். மனசைக் கவ்வி இழுக்கிற திகில். கிலி. அம்மா பீதியடையக்கூடிய சோகம் என்றால்... அது என்ன?

முகம் காட்ட மறுக்கிற உள் ஆழங்கள், இவளைப் பயமுறுத்தின. திகைப்போடு அம்மாவைப் பார்த்தாள். பரிதாபமான பார்வை. மனசில் பொங்குகிற ஒரு பச்சாதாபம். ஒரு பரிவு.

'பாவப்பட்ட அம்மா. காலம் பூராவும் துன்பத்திலே அழுந்துன அம்மா. மகாராணியா வாழ்றப்பவும் அய்யாவோட அலட்சியத்தாலே... தொழு மாட்டுக்



காலடிக் கூளமா இழிவுபட்ட அம்மா. வயித்துக் கஞ்சிக்குத் திண்டாடுற இப்பவும் ஆடி மாசச் சருகாக சூறாவளியிலே பிறந்து சீரழியுற அம்மா. ஆயுள் பூராவும் துன்பத்தையே தின்று, நொம்பலப்பட்ட அம்மா...'

உள்ளுக்குள் உடைந்து, ஏதோ சரிகிறது...

''ம்மா...'' என்று அரற்றிக் கொண்டு, அம்மாவின் கழுத்தைக் கட்டிக் கொண்டு கதற வேண்டும் போல ஒரு பிறிடல். மனசை அழுத்திப் பிசைகிற உள்தூண்டுதல். உந்தித் தள்ளுகிற ஓர் உணர்வு.

''அம்மா...'' என்றாள். விறைப்பில்லாத குரல். கனிவு. உடைந்திருந்த குரலில் பரிவுணர்ச்சியின் ததும்பல். தழுதழுத்த குழைவு.

மகள் குரலிலிருந்த பரிவும் கலக்கமும் அந்தத் தாய் மனசை வெலவெலக்கச் செய்து விட்டது. விதிர் விதிர்த்துப் போய்த் திரும்பி மகள் முகத்தைப் பார்த்தாள்.

மகளின் கண்களில் நீர்த் ததும்பல். சின்னஞ்சிறு அடி உதட்டில் அழுகையின் மெல்லிய துடிப்பு. விடைத்து விடைத்து அடங்குகிற நாசி நுனி. சிவந்த கன்னங்களில் ஓடிய நுண்ணிய அதிர்வலைகள், பெற்ற தாயின் குலையைப் பிடுங்கியது. அடிவயிற்றில் ஏதோ புரள்கிற சங்கடம். மனசின் இறுக்கமெல்லாம் உடைந்து போய்... கதறி விட்டாள்.

அம்மாவின் கரகரப்பான குரலில் நீட்டி முழக்கிய கதறல், சொர்ணத்தின் மனசைப் பிசைந்தது.

''ஏம்மா... என்னாச்சு? சொல்லும்மா. சொன்னாலாச்சும் மனப்பாரம் கொறையுமே.''

''இது... சொல்லிக் கொறையுற பாரமாகத் தெரியலியேடி... கட்டை வேகுற வரைக்கும் தீராப் பாரமா தெரியுதடி...''

''என்னதான்னு... சொல்லேன்.''

''ஏண்டி சொர்ணம், ஒம் மாமனைப் பத்தி என்னடி நெனைக்கே?''

''ஏம்மா...? அவருக்கென்னம்மா? அக்கா புருஷன். எனக்கு அய்யாவைப் போல. பாசமாயிருக்கிறவரு. நல்லவரு தானே?''

''அந்த நல்ல மனுசனைத்தான் இப்ப பேய் பிடிக்க ஆட்டுதடி. அந்தப் பேய், நம்ம மேலே வந்து குதிக்க கூத்தாடுதடி.''

''..............''

''ஆமாடி. அந்தக் கொடுமையை இந்த வாயாலே எப்படிச் சொல்வேண்டி? அந்த மனுசனைக் கண்ணுமண்ணுதெரியாம பேய் பிடிக்க ஆட்டுதடி. அறிவு கெட்டுப் போயி, அவரும் ஆடுதாரடி. ஒன்னையும் சேத்துக் கல்யாணம் கட்டிக்கனும்னு ஒத்தைக் கால்லே வந்து நிக்குறாரடி... நா என்ன செய்ய? ஊர் நாட்டாமைகிட்டேயும் சொல் விட்டுப் போயிருக்காரடி...''

கல்லடிபட்ட சிட்டுக் குருவியாக சொர்ணம் உள்ளுக்குள் எங்கோ விழுந்தாள். மனசு மரத்துப் போய் விட்ட மாதிரியிருந்தது. சப்த நாடிகளும் அடங்கிப் போக... உயிர் மட்டும் நூலிழையில் துடிக்கிறது. இதயத்தின் சகல நரம்புகளும் கொத்தாக அறுபட்டுப் போன மாதிரி... ஒரு ஸ்தம்பிப்பு. உணர்வற்ற நிலை.

மூச்சு வெளிவர பல வினாடிகள். மெள்ள மெள்ள உயிர் பெறுகிற மனசு. கல்லடியின் முழு வேதனையையும் உணர முயல்கிற மனசு. துடிக்கக் கூட முடியாமல் திகைத்துக் கிடக்கிற உணர்வுகள்.

காதில் விழுந்த செய்தியை வார்த்தை வார்த்தையாகப் பிரித்து, பிரித்துப் பார்த்தாலும் புரிய மறுக்கிறது.

''...காடு கரைகளும் தரிசா கிடக்கக் கூடாது. கன்னிப் பொண்ணையும் வீட்லே வைச்சிக்கிட்டிருக்கக் கூடாது...''

அவரின் அன்றைய கெக்கெகப்புச் சப்தம். அந்த மெல்லிய சப்தத்துக்குள், இத்தனை வெடி மருந்து கிட்டிப்பா? ஓர் இதயத்தையே பிளந்து, தூக்கியெறிந்து, தூள் தூளாக்கி, தூசிக் காடாக்குகிற அளவுக்கா... வெடிமருந்து?

அ வ ர ா ல்... இதை எ ப் ப டி யோசிக்க முடிந்தது?

மகள் வயசுப் பெண்ணை மணப் பெண்ணாக வரிக்கிற தைரியம், மனசில் எப்படி வ ந் த து? வாய்த்த மனைவியை - பெற்ற குழந்தைகளை - உருப்படியாக வாழ வைக்க வக்கில்லாத ஒரு மனிதருக்கு, இன்னொரு பெண்ணின் மீது ஆதிக்கம்



தொழுகைக்காகச் சென்ற முல்லா, உரத்த குரலில் பிரார்த்தனை செய்துவிட்டு வேகமாக வெளியே ஓடினார். ஒருவர், ''முல்லா, ஏன் இவ்வாறு ஓடுகிறீர்கள்?'' என்று கேட்டார்.

''நான் இன்று மிக உரத்த குரலில் பிரார்த்தனை செய்ததால், என் குரலை எவ்வளவு தொலைவிலிருந்து கேட்க முடிகிறது என்பதை அறிந்து கொள்வதற்காக ஓடுகிறேன்'' என்று பதில் சொல்லி விட்டு மேலும் வேகமாக ஓடினார் முல்லா!

'முல்லாவின் வேடிக்கைக் கதைகள்' என்ற நூலிலிருந்து

- நல்லாலம் காசிதாசன்



''ஒரு பத்திரிகை கூடப் பிரசுரிக்காத என் ஜோக்குகளை இந்தப் பத்திரிகையாவது பிரசுரிக்கிறதே என்ற என் சந்தோஷத்தில் மண் விழுந்து விட்டது!''

''ஏன்! அதுவும் இப்ப உன் ஜோக்கைப் போடுவதை நிறுத்தி விட்டதா?''

''இல்லை, பத்திரிகையே நின்றுவிட்டது!''

– வை. வெங்கடேசன்.

செலுத்தி, ஆக்கிரமிப்பு செய்ய நினைக்கிற அத்துமீறலான ஆசைக்கு... எது அடிப்படை?

எது செய்தாலும்... அகலிகைச் சிலையாக ஊமையாகக் கிடந்து, ரகசியமாகக் கண்ணீர் வடிக்கிற கோழையாக அக்கா இருப்பதாலா? வாய் திறந்து கேட்டவுடன், விளக்குமாறு எடுத்து விளாசாமல்... ஊமைக் குமுறலாய் அம்மா அழுது கொண்டிருப்பதாலா? எதிர்ப்பு இருக்கும் என்ற நிலை இல்லாததாலா? ஊர் நாட்டாமை, ஜனம் பூராவும் 'வழமை-வழக்கம்' என்ற வட்டத்துக்குள்ளேயே செக்கு மாடுகளாகச் சுற்றிக் கொண்டிருப்பதாலா?

ச்சே!

சொர்ணத்திற்குள் பொங்கித் திமிறுகிற ரௌத்ரம். இப்போதே ஊர் தேடிப் போய், அந்த மடையனை - குரூர மிருகத்தை - தலைமயிரைப் பற்றி வீதிப் புழுதியில் வீழ்த்தி விளக்குமாறு நார் நாராக உதிர்கிற வரை அடித்து, காலால் மிதித்து, துவைக்க வேண்டுமென்கிற ரௌத்ரம்!

அவள் தேகமெல்லாம் திகுதிகுவென எரிகிற உணர்வு. நரம்புகளெல்லாம் விடைத்து விறைப்பேறுகிற மாதிரியான நிலவு.

அவளுள் சட்டென்று தோன்றுகிற வைராக்ய மின்னல்.

'...எந்தக் காரணத்தை முன்னிட்டும் இந்த அக்கிரமத்துக்குப் பணிஞ்சிரவே கூடாது. என்ன ஆனாலும் சரி, எதுத்து நிக்கணும். தலைவணங்காம நிக்கணும். பொம்பளைன்னா... தாழ்வில்லே. வெறும் பூவு மில்லே. இருப்பி வைச்ச திசையிலே அப்படியே பார்க்கிற கற்சிலையில்லே. அவள் மனுஷி. உயிர்ப்பும் ரோஷமுமுள்ள மனுஷி. உயிர்களின் கர்த்தா. உலகின் சக்தி. சிலிர்த்து விட்டால்... உலகை ஜெயிக்கிற சக்தி.

இதை நிரூபிக்கக் காட்டிடணும். பணிஞ்சிரக் கூடாது. அம்மாவுக்காக - ஊருக்காக - உறவுகளுக்காக - யாருக்காகவும் தியாகம் பண்ணுற விஷயமில்லே, இது. பொம்பளைன்னாலே இழிவா - கால்தூசியா - நினைக்கிற மனுசப் பதர்களுக்குச் செவிட்டில் அறைஞ்சு, உண்மையைச் சொல்ற விஷயம். உரைக்கிற மாதிரி உணர்த்துகிற விஷயம். தன்மான விஷயம். உயிர் விஷயம்....'

''என்னடி பேச்சு மூச்சையே காணோம்?''

அம்மாதான். அரண்டு போய்க் கிடக்கிற அம்மா. இழுந்த இழப்புகளுக்கெல்லாம் வளைந்து வளைந்து, சுயத்தையே தொலைத்து விட்ட அம்மா. நனைந்த கோழிக் குஞ்சாக நடுங்கிக் கிடக்கிற அம்மா.

''பயப்படாதேம்மா... எச்சிலை வடிச்சிக்கிட்டு, நாக்கைத் தொங்கப் போட்டுக்கிட்டு மாமா அலையட்டும். அவரு நெனைக்குறது, நடக்கப் போறதில்லே.''

''எளங்கன்னு பயமறியாதும்பாக. நீயும் அப்படித்தாண்டி பேசுறே. ஊர் கூடி, சாதி ஜனமெல்லாம் சுத்தி நின்னுக்கிட்டு 'இப்படித்தான் செய்யணும்'னு சொன்னா... நாம எப்படி மீற முடியும்?''

''இந்த ஊர்லேயே இல்லாமப் போயிட்டா?''

''அதெப்படி? காடுகரைக கிடக்கே. அரமனை மாதிரி வீடு கிடக்கே. இத்தனையையும் மடக்கி கக்கத்துலே இடுக்கிக்கிட்டா... போக முடியும்?''

''ஏம்மா... நா ஒண்ணு கேக்கேன், அக்காளுக்கு இன்னொரு இளவட்டப் புருஷன் வேணும்னு கேட்டா... மாமா சம்மதிச்சிருவாரா?''

வேலாயி தீயை மிதித்தவள் போல துடித்துப் போய் மகளைப் பார்த்தாள். இந்தக் கேள்வியில் அப்படியே அரண்டு போய் விட்டாள். பருந்தைக் கண்ட பாம்பாக நடுங்கிப் போனாள், வேலாயி.

யாரும் இது வரை கேட்டிருக்க முடியாத கேள்வி. வேலாயி கேட்டதில்லை. அவளது அம்மாவும் கேட்டிருக்க மாட்டாள். பாட்டியும் கேட்டிருக்க மாட்டாள்.

மனித உதடுகள் இதுவரை உச்சரித்திருக்க முடியாத கேள்வி. உலகம் தலைகீழாகப் புரண்டு விட்டதா... என்ன?

மகளை விநோதமாகப் பார்த்தாள். பார்வையில் அளவிட முடியாத வெறுப்பு.

(தொடரும்)



அன்புள்ள (ஆஸ்ட்ரனாட்)...

உன் ஆசை நிறைவேற அத்தையின் ஆசிகள்! உனக்குத் தெரியுமோ? ஆஸ்ட்ரனாட்டாக இருக்கறதைப் போலவே சயன்டிஸ்டாக இருக்கறதும் ரொம்பப் பெருமையான விஷயம். விண்வெளி விஞ்ஞானிகள்தாம் ஆஸ்ட்ரனாட்கள் ஏறிப் போகிற ராக்கெட்களைக் கவனமாத் தயாரிச்சு, அவங்களை அதில் ஏற்றி அனுப்பி, பத்திரமாகத் திரும்பி வரச் செய்றாங்க. ஆனா ஆஸ்ட்ரனாட்டுகள் பிரபலம் அடையற அளவுக்கு விஞ்ஞானிகள் பற்றித் தெரியவரதில்லே!

அத்தை எழுதின லெட்டராலே உன் அப்பாவுக்கும் நிறைய வேலை வந்துட்டுது போலிருக்கே?! நீங்கள் எல்லாரும் கேட்ட கேள்விகளுக்குப் பதில் சொல்ற வேலைதான்... சந்தேகம் ஏற்பட்டால் கேள்வி கேட்கறது ரொம்ப அவசியம். அப்போதுதான் நாம் பல புது விஷயங்களைத் தெரிஞ்சுக்க முடியும்.

கேள்வி கேட்ட ஒரு யானைக் குட்டியின் கதையை கிப்ளிங் எழுதியிருக்கார். 'ஜங்கிள் புக்' சினிமா பார்த்தியே - அந்தக் கதையை எழுதின அதே ருட்யார்ட் கிப்ளிங்தான்...


ரொம்ப ரொம்ப வருஷத்துக்கு முன்னால் யானைகளுக்குத் தும்பிக்கையே கிடையாது. குட்டையாய், குண்டாய் மூக்கு மட்டுமே இருந்தது. ஒரு குட்டி யானை தன் மூக்கை மூக்கை உறிஞ்சி, "அம்மா, மரம் செடியெல்லாம் ஏன் பச்சையாயிருக்கு?", "அப்பா, உனக்கு மட்டும் ஏன் தந்தம் இருக்கு?" "காட்டெருமை மாமா, உனக்கு ஏன் கொம்பு நீளமா, வளைஞ்சு இருக்கு...?" அப்படின்னு கேள்வி கேட்டுக்கிட்டே இருக்குமாம்.

குட்டி யானைக்குப் பதில் சொல்ல யாருக்குமே பொறுமையில்லை. "ஷூ! ஷூ! பேசாமல் போய் விளையாடு"ன்னு துரத்தி விட்டுடுவாங்க. ஒரு நாள், "முதலை காலைல என்ன டிபன் சாப்பிடும்?"னு ஒரு சந்தேகம் வந்தது குட்டி யானைக்கு. அந்தக் கேள்வியை அப்பா யானை கிட்டே கேட்டப்போ, "போய் முதலையையே கேளு"ன்னு ரொம்ப கோபமா பதில் சொல்லிடுத்து.

குட்டி யானையும் சளைக்காம, முதலையைத் தேடிப் போச்சு. ஆற்றங்கரையிலே நடக்கறப்போ தவறுதலா ஒரு முதலையை மிதிச்சுடுத்து! தான் மிதிச்சதுதான் முதலை என்கிறது கூட தெரியாம, "முதலை காலையில என்ன டிபன் சாப்பிடும், உங்களுக்குத் தெரியுமா?" அப்படினு அதுகிட்டேயே கேட்டது!

முதலை உடனே, "அடே! இது தெரியாதா? குட்டி யானையைத் தான் டிபனா சாப்பிடும்" அப்படின்னு சொல்லி 'கபால்'னு யானைக் குட்டியோட மூக்கைப் பிடிச்சுக்கிட்டது!

யானைக் குட்டிக்கு ஒரே அதிர்ச்சி. வலி ஒரு பக்கம் தாங்கல்லை. "ஐய்யோ! ஐய்யோ!"னு கத்த ஆரம்பிச்சது.



... அருண் கண்மணி!

குட்டி யானை கத்தறதைக் கேட்ட ஒரு மலைப் பாம்பு வந்து, அதனோட வாலைச் சுற்றித் தன் உடம்பை வளைச்சு இழுத்தது. ஆனால் முதலை விடவேயில்லை. ரொம்ப நேரம் போராடின பிறகு மலைப் பாம்பு கடைசியா வேகமாக ஒரு இழு இழுத்தப்ப குட்டி யானை விடுதலையாயிடுத்து. ஆனால்....

முதலை இழுத்த இழுப்புல குட்டி யானையுடைய குண்டு மூக்கு, நீள ரப்பர் ஹோஸ் மாதிரி ஆயிடுத்து! ஒரே வலி வேறு அதை வாட்டியது.

வாழை இலையைத் தண்ணியில் முக்கி எடுத்து 'மூக்கை'ச் சுற்றிக் கட்டின பிறகு கொஞ்சம் வலி குறைந்தது. ஆனால் நீளமான மூக்கு மறுபடியும் சுருங்கவே இல்லை.

திடீர்னு குட்டி யானைக்கு யோசனை தோணி, அந்த நீள மூக்காலேயே உயரத்துல இருந்த பழங்களைப் பறிச்சுத் தின்றது; தண்ணீரை உறிஞ்சிக் குடித்தது; மண்ணை அள்ளித் தலையில் போட்டுக் கொண்டு விளையாடியது... வீட்டுக்குத் திரும்பப் போய்ச் சேர்றதுக்குள்ள, தும்பிக்கையா மாறிட்ட மூக்கு எத்தனை உபயோகமா இருக்குன்னு நல்லாத் தெரிஞ்சுக்கிட்டது.

குட்டி யானை செய்யறதையெல்லாம் பார்த்து, ஆச்சரியப்பட்டு, பெரிய யானைகளும் ஆற்றங்கரைக்குப் போய்த் தும்பிக்கையை உண்டாக்கிக் கொண்டன!

எப்படி இந்தக் கதை! பப்லுவுக்கு இதைக் கட்டாயம் படித்துக் காண்பி.

இதே மாதிரி மயிலுக்குத் தோகை எப்படி வந்திருக்கும்னு கற்பனை பண்ணி உன் அடுத்த லெட்டரில் எழுதேன்...

அன்பு,

அன்பு அம்மா

சக்கரவர்த்தித் திருமகன்

7. 'வசிஷ்டர் வாயால்'

கோபத்திலும் சாபத்திலும் தம் தபோபலம் செலவழிந்து போனதைக் கண்டு விசுவாமித்திரர் மறுபடியும் கோரமான தவஞ் செய்வதற்காக மேற்கே புஷ்கர தீர்த்தத்துக்குச் சென்றார்.

அவ்விடத்திலும், பல ஆண்டுகள் செய்த தவம் முற்றிப் பயன் தரும் சமயத்தில் ஒரு நிகழ்ச்சி நடந்து மறுபடியும் கோபத்தால் சமநிலை இழந்து தம் புத்திரர்களையே சபித்து விட்டார். அதன் பின், இனிக் கோபத்துக்கு இடம் தரக் கூடாது என்று சங்கற்பம் செய்து கொண்டு மறுபடியும் தவஞ் செய்ய ஆரம்பித்தார். பல்லாண்டுகளுக்குப் பின் பிரம்மனும் தேவர்களும் அவருக்குத் தரிசனம் தந்தார்கள்.

''கௌசிகரே! நீர் செய்த தவம் பலித்தது. நீர் இனி அரசர் கணக்கில் இல்லை. பூரண ரிஷியாகி விட்டீர்'' என்று சொல்லிக் கௌரவித்து விட்டு நான்முகன் திரும்பினான்.

அதனால் விசுவாமித்திரர் திருப்தியடையவில்லை. பரமசிவனிடம் பெற்றது அஸ்திரங்கள்; இப்போது பெற்றது ரிஷி பதவி. அவர் விரும்பியதோ வசிஷ்டருக்குச் சமமான சக்தி. ஆனபடியால் இன்னும் பல்லாண்டு கடுந்தவம் செய்ய நிச்சயித்தார்.

தேவர்களுக்கு இது பிடிக்கவில்லை. இதை எப்படியாவது தடுக்க வேண்டும் என்று புஷ்கர தீர்த்தத்துக்கு மேனகையை அனுப்பினார்கள். புஷ்கர தீர்த்தத்தில் அந்த அப்ஸர ஸ்திரீ ஸ்நானம் செய்ய வந்தாள். அவளுடைய அழகினால் விசுவாமித்திரர் வஞ்சிக்கப்பட்டார். தம் தவத்தை நிறுத்தி விட்டு, சுகமாகப் பத்து ஆண்டுகள் கழித்தார். பத்து ஆண்டுகளும் ஒரு பகல் ஒரு இரவு போல் கழிந்து விட்டன.

பிறகு விழித்துக் கொண்டார். ''ஐயோ, இப்படியாயிற்றே!'' என்று வருந்தி துக்கப்பட்டார்.

மேனகைக்கு நடுக்கம். சாபத்துக்குத் தயாராகக் கை கூப்பி நின்றாள். முனிவர் கோபத்தை அடக்கிக் கொண்டு, ''இது என்னுடைய மடமை; உன் குற்றமல்ல!'' என்று மதுரமாகப் பேசி அனுப்பி விட்டு, இமாலயம் சென்றார். மறுபடி ஆயிரம் வருஷங்கள் இந்திரியங்களை அடக்கி உக்கிர தபசு செய்தார்.

தேவர்கள் சூழ நான்முகன் பிரசன்னமாகி, ''விசுவாமித்திரரே! நீர் மேனகையைச் சபிக்காமல் பொறுத்து மறுபடியும் கடுந்தவம் ஆரம்பித்து முடித்தீர். நீர் மகரிஷி பதவியை அடைந்து விட்டீர்'' என்று ஆசீர்வதித்தான்.

விசுவாமித்திரருடைய எண்ணம் அப்போதும் நிறைவேறவில்லை. மறுபடி அற்புதமானதும் அதுவரை யாருமே செய்யாததுமான தவம் ஆரம்பித்தார். ஆயிரம் வருஷம் செய்தார்.

தேவர்கள் பயந்து போனார்கள். மறுபடி ஓர் அப்ஸர ஸ்திரீயை அனுப்பி வைத்தார்கள்.

''ரம்பையே! உன்னுடைய தயவு வேண்டும். நீ எப்படியாவது விசுவாமித்திர ரிஷியை ஏமாற்றி அவருடைய தவத்தை நிறுத்த வேண்டும்'' என்று இந்திரன் கேட்டுக் கொண்டான். அவள் பயப்பட்டாள். ஆயினும் இந்திரனுடைய ஏவலை ஒப்புக் கொண்டு போய் விசுவாமித்திரருடைய மனத்தைக் கலைத்

தான். கிளம்பிய காமத்தை அடக்கிக் கொண்டாராயினும் இப்படி மோசம் செய்ய வந்தாளே என்று கோபங் கொண்டு, ''நீ கல்லாகப் போவாய்' என்று சாபமிட்டார். ரிஷிகளுடைய சாபம் அவர்கள் மனத்தில் எழும் கோபமே. எண்ணிய எண்ணம் தபோ பலத்தால் உடனே சாபமாகி நிறைவேறி விடுகிறது. தவம் நஷ்டமாகி விடுகிறது.

மறுபடி உறுதியான தீர்மானம் செய்து கொண்டு அன்னபானம், பேச்சு மூச்சு எல்லாம் அடக்கி விட்டு அது வரையில் ஒருவரும் செய்யாத மகா தபஸை ஆரம்பித்து முடித்தார்.

இதுவும் ஆயிரம் வருடங்கள் நடந்தது. தேவர்கள் பலவித இடையூறுகள் செய்து பார்த்தார்கள்; தவத்தைக் கலைக்க முடியவில்லை. விசுவாமித்திரருடைய உடல் ஒரு மரக்கட்டைபோல் ஆயிற்று. இந்திரியச் செயல்கள் எல்லாம் நின்று போய் உயிர் மட்டும் இருந்தது.

தேவர்கள் அனைவரும் விசுவாமித்திரர் செய்த தவத்தின் உக்கிரத்தால் தவித்தார்கள். அந்த வேதனை தாங்க முடியாமல் அவர்கள் பிரம்மனிடம் சென்று கைகூப்பி, ''நாதனே! எங்களால் கௌசிக மகரிஷியினுடைய தவத்தை இனிப் பொறுக்க முடியாது. இடையூறு செய்ய நாம் எடுத்துக் கொண்ட முயற்சிகள் ஒன்றும் பயன் படவில்லை. நாம் அழிந்து போவோம் போலிருக்கிறது. அவர் விரும்பிய வரத்தைத் தந்துவிட வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டார்கள்.

அப்படியே தேவர்கள் சூழ நான் முகன் விசுவாமித்திரரிடம் சென்று தரிசனம் தந்து, ''நீர் பிரம்ம ரிஷியாகி விட்டீர். உமக்கு எல்லா மங்களமும் ஆகுக'' என்று ஆசீர்வதித்தான். விசுவாமித்திரர் மகிழ்ந்தார். ஆயினும்,

''இந்தப் பதவி வசிஷ்டர் வாயால் வந்தால் அல்லவோ நான் பூரண திருப்தி யடையலாம்?'' என்று மிக வினயமாகச் சொன்னார்.

வசிஷ்டரும் பழைய சண்டையை நினைத்துப் புன்னகை செய்து, ''நீர் செய்த கடுந் தவங்களின் பயனை நீர் அடைந்தீர். நீர் பிரம்மரிஷி என்பதைப் பற்றி ஒரு சந்தேகமுமில்லை'' என்றார். எல்லோரும் மகிழ்ந்தார்கள்.

இவ்வாறு அற்புத தவங்கள் அற்புத முறையில் விடா முயற்சியுடன் செய்து வெற்றி பெற்ற மாமுனிவர், தசரதன் சபைக்கு எதிர்பாராமல் திடீர் என்று வந்ததைக் கம்பர் இவ்வாறு பாடினார் :

மடக்கல்போல் மொய்ம்பினோன்
  முன்னர் மன்னுயிர்
அடங்கலும் உலகம்வேறு
  அமைந்துத் தேவரோடு
இடங்கொள் நான்முகனையும்
  படைப்பான் எண்(டு)ணைத்
தொடங்கிய கோசிக
  முனிவன் தோன்றினான்.

இந்திரனுடைய சபைக்கு நான் முகன் வந்தால் தேவராஜன் எவ்வாறு வரவேற்பானோ அதுபோல தசரதன் எழுந்து முனிவரை வரவேற்று, முனிவருடைய பாதங்களைத் தொழுது, ''இன்றே என் வினைத் தொடர்பு தீர்ந்து விட்டது. இது என் முன்னோர் செய்த தவப் பயனே. இரவு தீர்ந்து சூரியோதயமானது போல் தங்களுடைய திருமுகம் கண்டேன். இனி எனக்கென்ன குறை? அரசனாக ராஜ்யத்தை ஆண்டு தவத்தினால் பிரம்மரிஷியான தாங்கள் என்னைத் தேடி வந்தீர்களே! என்னால் என்ன காரியம் ஆக வேண்டும்? சொல்லி அருள வேண்டும்! அதைச் செய்யக் கடமைப் பட்டவன் நான்'' என்றான்.

தசரதன் சொன்ன சொல்லைக் கேட்டு விசுவாமித்திரர் மிக மகிழ்ந்தார். அவருடைய தேஜசு இன்னும் அதிகமாகப் பிரகாசித்தது.

''அரசனே! உம்முடைய பொன் மொழிகள் உமக்கே தகும். உம்மைத் தவிர வேறு யார் இப்படிப் பேசுவார்கள்? நீர் பிறந்த குலம் இக்ஷ்வாகு குலம். நீர் அடைந்திருக்கும் குருவோ வசிஷ்ட முனிவர். வேறு எவ்வாறு நீர் பேசுவீர்?

ராஜாஜி

நான் கேளாமலேயே நீர் வாக்குத் தந்து விட்டீர். அது என் இதயத்தைத் திருப்தி செய்து விட்டது. நான் வந்த காரியத்தைப் பூர்த்தி செய்து தருவீராக'' என்று கூறித் தாம் வந்த காரியத்தை உடனே சொல்ல ஆரம்பித்தார்.

8. ''ராமனைத் தருவீர்''

''நான் நியமம் பூண்டு ஒரு வேள்வி நடத்துகிறேன். ஆரம்பித்து முடியும் தறுவாயில் மாரீசன், சுபாஹு என்ற இரண்டு அரக்கர்கள் அதைக் கெடுத்து வருகிறார்கள். அவர்கள் தேக பலமும் வீரியமும் யுத்தப் பயிற்சியும் பெற்ற அரக்கர்கள்.. சாபமிட்டு அவர்களை நானும் மற்ற ரிஷிகளும் அடக்க முடியும். ஆனால் நியமமும் தவமும் கெடாமல் நடந்து கொள்ள வேண்டியதாக இருக்கிறது. இந்தச் சங்கடத்தில் நானும் மற்ற ரிஷிகளும் கஷ்டப்படுகி



றோம். மாமிசமும் ரத்தமும் யாக வேதி கை பேரில் எறிந்து வேள்வி நடை பெறாமல் செய்து வருகிறார்கள். உம்மு டைய வீர குமாரர்களில் மூத்தவனான ராமனை என்னுடன் அனுப்பினீரானால் எங்களுடைய கஷ்டம் நீங்கும். என் பாதுகாப்பில் அவனுடைய வீரமும் திவ் விய பலமும் வளர்ந்து இந்த அரக்கர் களை எதிர்த்து வெற்றியோடு பெரும் புகழ் அடைவான். இது நிச்சயம். ராஜ குமாரனைச் சில நாட்களுக்கு என் னிடம் ஒப்புவிப்பீராக. நான் கேட்டதை மறுக்க வேண்டாம். நான் கேட்பதற்கு முன்பே நீர் அளித்த வாக்குறுதியை நிறைவேற்றுவீராக. குமாரனுடைய க்ஷேமத்தைப் பற்றிச் சந்தேகப்பட வேண்டாம். இந்தக் காரியத்தை நீர் செய்தால் மூவுலகத்திலும் என்றென் றைக்கும் புகழுடைவீர். வசிஷ்டரும் மந்திரிகளும் நான் சொல்வதை அங்கீ கரிப்பார்கள்'' என்றார் விசுவாமித்திரர்.

முனிவர் சபைக்கு வந்தபொழுது பெரு மகிழ்ச்சியடைந்த அரசன், இதைக் கேட்டதும் சொல்லொணாத பயமும் கவலையும் உண்டாகி நடுங்கி னான். எவ்வளவோ கஷ்டப்பட்டுப் பெற்ற அருமைப் புத்திரனை அரக்கர் களுக்குப் பலி கொடுக்க வேண்டிய தாயிற்றே, இல்லையெனில், விசுவா மித்திரருடைய பெரும் கோபத்துக்கு ஆளாக வேண்டுமே. இதற்கென்ன செய் வது என்று ஒன்றும் தோன்றாமல் திகைத்தான். கொஞ்ச நேரங் கழித்துத் திகைப்பிலிருந்து புத்தியைச் சுவாதீனப் படுத்திக் கொண்டு சொன்னான்.

''பதினாறு வயது பூர்த்தியாகாத ராமனுக்கு ராக்ஷசர்களோடு யுத்தம் செய் யும் தகுதியை நான் காணவில்லையே! அவனை அனுப்பச் சொல்லுகிறீரே, இது என்ன பயன் தரும்? யுத்தங்களி லுள்ள மோசடிகள் ஒன்றைப் பற்றியும் அவனுக்குத் தெரியாதே? ராக்ஷசர்கள் எப்போதும் மோச யுத்தம்தானே செய் வார்கள்? அந்த அரக்கர்களை எதிர்ப் பதற்குச் சின்னஞ்சிறுவனை அனுப்பு வது சரியான யோசனையல்ல. நான் இருக்கிறேன்; என்னுடைய சதுரங்க சேனை இருக்கிறது. அதையெல்லாம் விட்டு விட்டுக் குழந்தையைக் கேட்கி றீரே! இவனா அவர்களை எதிர்த்து உம் முடைய வேள்வியைக் காக்கப் போகி றான்? எனக்கு உம்முடைய எதிரி களைப் பற்றி எல்லா விஷயமும் சொல்லுவீர். நான் உம்முடன் என் சேனையைக் கூட்டிக் கொண்டு சென்று வேண்டியதையெல்லாம் செய்வேன். அது இருக்கட்டும். அந்த அரக்கர் களைப் பற்றியும் அவர்கள் பலத்தைப் பற்றியும் விவரமாகச் சொல்லவும்'' என்று பேச்சை மாற்றுவதற்காகக் கேட் டான்.

விசுவாமித்திரர் மாரீசனைப் பற்றி யும் சுபாஹுவைப் பற்றியும் அவர்களு டைய எஜமானன் ராவணனைப் பற்றி யும் விவரமாகச் சொல்லி ராமனை அனுப்ப வேண்டும் என்று மறுபடியும் வற்புறுத்தினார்.

''தவமிருந்து பெற்ற என் அருமை ராமனை விட்டுப் பிரிந்தால் என் உயிரே போய்விடும். வேண்டுமானால் நான் சேனையுடன் வருவேன். நீர் சொல் வதைப் பார்த்தால் என்னாலுங் கூட இந்த வேலையை முடிப்பது கடினமாக இருக்கும் போல் தோன்றுகிறது! அப் படியிருக்க என் மகனை அனுப்பவா வது, முடியாது!'' என்றான்.

திடீர் என்று ஏற்பட்ட திகைப் பினால் முன்னுக்கும் பின்னுக்கும் முர ணாகப் பலவிதமாகப் பேச ஆரம்பித் தான் தசரதன். அப்படி அவன் பேசி, ராமனை அனுப்ப மறுத்ததைக் கண்டு விசுவாமித்திரருக்குக் கோபம் நெய் விட்ட வேள்வித் தீ போல் பொங்கிற்று.

விசுவாமித்திரர் சொன்னார் : ''முதலில் கேட்டதையெல்லாம் தருகி றேன் என்று தாராளமாகச் சொல்லி விட்டு இப்போது அதைப் பொய்யாக் கினீர். இந்த நடவடிக்கை இக்ஷ்வாகு குலத்திற்குத் தகுந்ததல்ல. பிறந்த வம் சத்துக்குத் துரோகம் செய்கிறீர். இதுவே உம்முடைய முடிவாகின், நான் வந்த வழி திரும்புகிறேன். சத்தியம் தவறிப் பந்து மித்திரர்களுடன் சுகமாக இருப் பீராக.''

முனிவருடைய கோபத்தால் பூதேவி நடுங்கினாள். தேவர்களும் பயந்தார்கள். வசிஷ்டர் அரசனை நோக்கி மெதுவாகச் சொன்னார் :

''தருமமே மானிட உருவம் எடுத்

தது போல் இக்ஷ்வாகு வம்சத்தில் உதித்துப் புகழும் திருவும் பெற்ற நீர் சத்தியத்தினின்று பிறழ்தல் தகாது. உம்முடைய வாயினின்று 'செய்கிறேன்' என்று ஒரு தடவை வார்த்தை வெளியான பின் அதைப் பிறகு செய்யாமலிருந்தால் உம்முடைய தான தரும வேள்விகளையெல்லாம் ஒரேயடியாக அழிந்துவிடும். ராமனை முனிவருடன் அனுப்புவீராக. லக்ஷ்மணனையும் சேர்த்து அனுப்புவீராக. யுத்தப் பயிற்சியைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம். குசிக புத்திரருடைய பாதுகாப்பிலுள்ள உம் குமாரர்களை ராக்ஷசர்கள் நீண்ட முடியாது. அமிருதத்தை அக்னிச் சக்கரம் காப்பது போல் இவர் ராமனைக் காப்பார். இவருடைய பூரண மகிமை உமக்குத் தெரியவில்லை. தவமே உடல் கொண்டு நிற்கிறவர். வீரர்களுள் வீரர். அறிவுக்கும் தவத்துக்கும் எல்லையானவர். இவருக்குத் தெரியாத அஸ்திரமில்லை. அந்த விஷயத்தில் மூன்று உலகங்களிலும் இவருக்குச் சமானமானவன் ஒருவன் இருந்ததில்லை. இருக்கப் போவதுமில்லை. இவர் அரசனாக இருந்த காலத்தில் எல்லா அஸ்திர வித்தைகளையும் வரமாகப் பெற்றிருக்கிறார். இறந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் ஆகிய மூன்று காலங்களிலும் இவர் அறியாதது இந்த உலகத்தில் ஒன்றுமில்லை. இத்தகைய மகாவீரமும் தேஜசும் பொருந்திய விசுவாமித்திர முனிவருடன் உம் குமாரன் ராமனை அனுப்புவதைப் பற்றிச் சந்தேகமே வேண்டாம். முனிவருடைய காரியத்தை முனிவரே பார்த்துக் கொள்ளுவதற்கு வேண்டிய சக்தி அவருக்கு உண்டு. உம்முடைய குமாரனுடைய நன்மைக்காகவே அல்லவோ அவர் இங்கே வந்து உம்மைக் கேட்கிறார்! தயங்காமல் உம் குமாரனை அவர் கேட்கிறபடி அவருடன் அனுப்புவீராக.''

இவ்வாறு மகா ஞானி வசிஷ்டர் சொன்னதைக் கேட்டதும் அரசனுடைய புத்தி தெளிந்தது. ராம லக்ஷ்மணர்கள் இருவரையும் அனுப்புவதென்று நிச்சயம் செய்தான்.

ராம லக்ஷ்மணர்களை முனிவர் முன் அழைத்து வந்தார்கள். அரசனும் தாய்மார்களும் வசிஷ்டரும் மங்கள மந்திரம் சொல்லியானபின் உச்சி மோந்து ''முனிவருடன் செல்லுங்கள்'' என்று வழி அனுப்பி வைத்தார்கள்.

அச்சமயம் சுகமாகக் காற்று வீசிற்று. ஆகாயத்தினின்று பூமாரி பொழிந்தது. அசரீரி ஒலித்தது. கையில் வில் பிடித்து இரு யுவர்களும் முனிவருடன் கம்பீரமாகச் சென்றார்கள்.

ரிஷி யுலகத்துக்கே சிகரமாக விளங்கிய விசுவாமித்திரரும், அழகே தேகமெடுத்தாற் போன்ற ராஜகுமாரர்களும் தசரதனிடம் விடைபெற்றுக் கொண்டு போகும் மங்களக் காட்சியை வால்மீகியும் கம்பரும் மிகவும் அனுபவித்துப் பாடியிருக்கிறார்கள்.

தம்முடைய தவ வலிமையால் ஒரு புது உலகத்தையே சிருஷ்டிக்கும் சக்தி வாய்ந்த உபாத்தியாயர்; அரக்கர்களை ஒழித்துக் கட்டவே அவதரித்தவர்கள் மாணவர்கள் - இத்தகைய குரு சிஷ்யச் சேர்க்கையின் அழகை வால்மீகி முனிவர் கம்பீரநாதம் பொருந்திய எட்டுச் சுலோகங்களில் வர்ணிக்கிறார். வெற்றி வாள் இடுப்பில் தொங்க, குன்றைப் போன்ற தோள்களின் மேல் ஒரு பக்கம் வில்லும் ஒரு பக்கம் தூணியும், மத்தியில் கம்பீரமாக உயர்ந்து நிற்கும் தலையுமாக முத்தலை நாகங்கள் படமெடுத்துச் செல்வது போல் ராஜ குமாரர்கள் காட்சி தந்தார்கள்.

கம்பர் தமக்கே உரிய பாணியில் பாடுகிறார் :

வென்றி வாள்புடை
    விசித்து மெய்ம்மைபோல்
என்றும் தேய்வுறாத்
    தூணி யாத்திரு

குன்று போன்றுயர்
    தோளிற் கொற்றவில்
ஒன்று தாங்கினான்
    உலகந் தாங்கினான்.

அன்ன தம்பியும்
    தானும் ஐயனாம்
மன்னன் இன்னுயிர்
    வழிக்கொண் டாலெனச்

சொன்ன மாதவன்
    தொடர்ந்த சாயைபோல்
பொன்னின் மாநகர்ப்
    புரிசை நீங்கினார்.

(தொடரும்)

நறுமணம் கமழும் இரண்டு மல்லிகை மலர்களின் விலை
ஒரே ஒரு பைசாதான் என்று உங்களுக்கு தெரியுமா?



ஒவ்வொரு பைசாவின் மதிப்பைப்பற்றியும் ஏன் கணக்குப் பார்க்க வேண்டும் என்று நீங்கள் ஆச்சரியப்படலாம்.

துகர் இன்வெஸ்ட்மென்ட்ஸ், 11 ஆண்டுகளுக்கு முன்பு நிறுவப்பட்ட போதிலும், துகர் குடும்பத்தினர் 80 ஆண்டுகளாக நிதியுதவி வாணிபத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

துகர் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அதன் நிர்வாக இயக்குநர் திரு. என். தாராசந்த் துகர் மற்றும் சேர்மன் திரு. ஜி. அன்னா ராவ் (முன்னாள் சேர்மன், திருமலை திருப்பதி தேவஸ்தானம்) தலைமையில் இயங்கி வருகிறது. அவர்கள் அந்நாளைய பண்புகளில் ஊறியவர்கள். எனவே எங்கள் வியாபார தத்துவம், அந்நாளைய பண்புகளான சிக்கனம் மற்றும் நேர்மையை அடிப்படையாகக் கொண்டது.

எங்கள் பண்புகளில் எங்களுக்கு அசையாத நம்பிக்கை. எனவே, எங்கள் டெபாசிட்தாரர்களுக்கும் எங்களிடம் மிகுந்த நம்பிக்கை.

ஒவ்வொரு பைசாவின் அருமையையும் நாங்கள் உணர்ந்திருக்கிறோம்

இப்போது எங்களிடமுள்ள டெபாசிட்டுகள், என்றுமே இல்லாத அளவுக்கு ஏறக்குறைய 20 கோடி ரூபாயை எட்டி விட்டது. தொடர்ந்தாற் போல் 8 ஆண்டுகளாக நாங்கள் 25% லாபப் பங்கை (டிவிடெண்ட்) வழங்கி வருகிறோம். எங்கள் முதலீட்டாளர்களின் எண்ணிக்கை 20,000ஐத் தாண்டி விட்டது.

கணக்கற்ற டெபாசிட்தாரர்கள் பாடுபட்டு சம்பாதித்து எங்களிடம் ஒப்படைத்திருக்கும் பணத்தை நாங்கள் பொறுப்புடன் பாதுகாத்து வருகிறோம்.

இப்பணத்தை, நாங்கள் விவேகத்துடனும், முன் ஜாக்கிரதையுடனும், நாட்டின் பொருளாதார மேம்பாட்டிற்கும், வேலை வாய்ப்பிற்கும் வழிவகுக்கும் துறைகளிலே மட்டுமே முதலீடு செய்கிறோம். ஏனெனில், ஒவ்வொரு மல்லிகை மலருக்கும் மணம் இருப்பதுபோல, ஒவ்வொரு பைசாவுக்கும் மதிப்பு உண்டு. அதை நாங்கள் என்றும் மறப்பதில்லை!

DUGAR
INVESTMENTS LIMITED

• தவணைக் கொள்முதல் • லீசிங்
• ப்ராப்பர்ட்டி டிவலப்மென்ட் • பப்ளிக் டெபாசிட்

இப்பொழுது அணுகுங்கள். இது எங்கள்
விசேஷ சேவை காலம்

தேசிய மயமாக்கப்பட்ட முன்னணி வங்கிகளின் சுவிஸ் பங்கேற்பு

பதிவு அலுவலகம்: "துகர் டவர்ஸ்", 123 மார்ஷல்ஸ் ரோடு, சென்னை-600 008. போன்: 893533 Tx: 041-6670 DUGR IN Fax: 91-44-851122

கிளைகள்: சென்னை: மௌண்ட் ரோடு, போன்: 831888. தி.நகர் போன்: 441541, அடையார், பெங்களூர் போன்: 584422.
கோழிக்கோடு, போன்: 83344. கோயம்புத்தூர் போன்: 37867. எர்ணாகுளம்: போன்: 369515. கடூர் போன்: 830. மதுரை போன்: 33663.
நெல்லூர் போன்: 846006. விசாகப்பட்டினம் போன்: 46361.

* உலவும் தென்றல்





* முத்துக்குமார்

உலவும் தென்றல்: புயல்வேக விற்பனை

இளையராஜா இசை அமைக்கும் திரைப்படப் பாடல் காசெட்டுகள், ரிலீஸ் ஆகிற சில நாட்களிலேயே ஐம்பதாயிரம், அறுபதாயிரம் விற்பனையாவது இப்போதெல்லாம் சர்வ சகஜமாகி விட்டது. ஆனால் -

ஐம்பதுகளிலும் அறுபதுகளிலும் பிரபலமான பாட்டுக்களை, மறுபடி வேறு பாடகர்களை அழைத்துப் பாடச் செய்து, அவற்றை லட்சம் காசெட்டுகள் அளவுக்கு விற்க முடியும் என்று சொன்னால் நம்ப முடிகிறதா? இதை நடத்திக் காட்டியுள்ளவர் 'எச்.எம்.வி.' முத்துக்குமார்.

பழைய பாடல் காசெட்டுகளில் புதிய அம்சம் : இசைக் கருவிகள் அதிகம் உபயோகிக்கப்படாத அந்தப் பாடல்களுக்கு, கம்ப்யூட்டரால் இயங்கும் கீ போர்டு உதவியோடு, நவீன இசைக் கருவிகள் பலவற்றின் ஒலியைச் சேர்த்துக் கொடுத்திருக்கிறார். அதிலும் 'ரிதம்' கம்மா கும்கும் என்று தூக்குகிறது பின்னணியில். எல்லா வாத்தியங்களின் ஒலியையும், ஓசையையும் ஒரே ஒரு கம்ப்யூடரைஸ்டு கீ போர்டை வைத்துக் கொண்டே வழங்கி, சக்கைப் போடு போட்டிருக்கிறார் இளைஞர் செல்வகுமார். (செல்வகுமாரை ஒன் மேன் ஆர்க்கெஸ்ட்ரா என்று பாராட்டுகிறார் முத்துக்குமார்.)

''திருச்சி லோகநாதன் மகன் தீபன் சக்ரவர்த்தியைக் கூப்பிட்டு, அவர் அப்பா பாடிய வாராய் நீ வாராய், உலவும் தென்றல் காற்றினிலே; டி. ஆர். மகாலிங்கம் பாடிய ஆடை கட்டி வந்த நிலவோ எல்லாம் பாட வைக்க வேண்டும் என்று திட்டம் போட்டேன். அவரும் ஒப்புக் கொண்டார். ஆனால் பழைய பாட்டுக்களைக் கேட்டுப் பழகிய ரசிகர்கள் ஏற்றுக் கொள்ளுவார்களோ என்ற தயக்கம் இருந்தது. அதை வெற்றி கொள்ளவும் திட்டமிடல், பின்னணி இசையமைப்பு என்றும் இரண்டு வருடங்கள் ஓடி விட்டன. உலவும் தென்றல் : முதல் தொகுதி வெளியான சமயத்தில் மனத்தில் திக்திக் என்று தான் இருந்தது. ஆனால் கிடைத்தது என்னவோ எக்கச்சக்கமான வரவேற்பு.

''பி. சுசீலாவை அழைத்துப் பாட முடியுமா என்று கேட்ட போது, 'பாடுகிறேன்; ஆனால் எனக்குத் திருப்தியாய் இல்லை என்றால் வந்த வழியே திரும்பிப் போய் விடுவேன்!' என்று சொன்னார். வாய்ஸ் டிராக்கில் ஏற்கெனவே பதிவு செய்திருந்த, அவர் பாட வேண்டிய, பாட்டுக்களைக் கேட்டார். அவ்வளவுதான். மூன்று பாட்டுக்களுக்கு நான்கு பாட்டுக்களாகப் பாடி விட்டுப் போய் விட்டார், சுசீலா! 40 வருடங்களுக்குப் பிறகும் அதே குரலினிமை.'' (அலிபாபாவும் 40 திருடர்களும் படத்தில் பானுமதி பாடியிருந்த 'அழகான பொண்ணு நான்' பாட்டை இதில் பி. சுசீலா பாடியிருக்கிறார்!)

எம்.எல்.வி. பாடிய 'அய்யா சாமி, ஆவோஜி சாமி' (ஓர் இரவு) பாட்டை, திருச்சி லோகநாதன் மகள் மகாராணி 'டிராக்'கில் பாடியிருந்ததைக் கேட்டு விட்டு, ''இதை விட நான் ஒன்றும் நன்றாகப் பாடி விட முடியாது. இதையே வைத்துக் கொள்ளலாமே?'' என்றாராம் சுசீலா பெருந்தன்மையுடன்.

ஏ.எம்.ராஜாவின் குரலுக்கு இணையாக ஒரு ராஜசேகர். அப்பட்டமாக சந்திரபாபு மாதிரியே பாடி அமர்க்களப்படுத்த ஒரு சண்முககந்தரம். டி.எம்.எஸ். குரலுக்கு, இருக்கவே இருக்கிறார் டி.எம்.எஸ். பால்ராஜ். டி. ஆர். மகாலிங்கத்தின் குரலை

ஓரளவு ஈடுகட்டியிருப்பவர் க்ருஷ்ணராஜ். ஆனால் இவரே கே. ஆர். ராமசாமியின் பாட்டைப் பாடும் போது சபாஷ் போட வைத்திருக்கிறார். கண்டசாலா குரலுக்கு ஒரு ராமகிருஷ்ணாவும் கிடைத்திருக்கிறார். சுபா என்றொரு புதிய பெண் குரலையும் கண்டு எடுத்து அறிமுகப்படுத்தியிருக்கிறார் முத்துக்குமார். குருவின் 'கொஞ்சும் புறா' வைப் பாடியிருக்கிறார் சுதா ரகுநாதன்.

பி. லீலா, ஜிக்கி, ஜமுனா ராணி, எம்.எஸ். ராஜேசுவரி, பி.பி. சீனிவாஸ் என்று, இவர்கள் அன்றைக்குப் பாடிப் பிரபலமான பாடல்கள் சிலவற்றை மறுபடி அவர்களைக் கொண்டே பாடச் செய்துள்ளதை, இப்போது கேட்கும் போது ஒரு சின்ன த்ரில் இருக்கத்தான் செய்கிறது. கூடவே ரீதம் சேர்த்திருப்பது, ஒரு கிக் கிடைக்க வழிசெய்திருக்கிறது. காசெட்டு களின் அமோக விற்பனைக்கு இதுவே காரணமாக இருக்கக்கூடும்.

''இந்தச் சாதனைக்குக் காரணமான இத்தனை கலைஞர்களையும் தங்கத் தட்டு (கோல்டன் டிஸ்க்) வழங்கிக் கௌரவிக்கப் போகிறது எச்.எம்.வி. நிறுவனம்'' என்று சந்தோஷத்தோடு சொன்னார் முத்துக் குமார்.

''பழைய பாட்டுக்களை இப்படிப் புதிய முறையில் வழங்கும் இந்த ஐடியா எப்படி தோன்றியது?''


முத்துக்குமார் சொன்னார் :

''நந்து பிண்டே என்ற இந்திப் பாடகர், பிரபலமான பழைய இந்திப் படப் பாடல்களின் தொகுப்பை இதுபோல வெளி யிட்டார். ஆனால் அதில் எல்லா 'ஹிட்'டு களின் நான்கு நான்கு வரிகளே இருக்கும். அந்தத் தொகுப்புக்கு அசாத்திய வரவேற்பு இருந்தது. அப்படிச் செய்யாமல், என்றும் ரசிகர்களின் நினைவில் இருக்கும் பழைய பாட்டுக்களை முழுமையாகக் கொடுத்தால் என்ன என்று தோன்றியது எனக்கு. நவீன இசைக் கருவியும் சேர்ந்து கொள்ளவே, ஐடியா பிரமாத வெற்றி கண்டது. இப்போது உலவும் தென்றல் நான்காம் தொகுதி வெளி யாக இருக்கிறது என்றால் பார்த்துக் கொள்ளுங்கள்!''

உலவும் தென்றலைத் தொடர்ந்து, உலவும் இசை, உலவும் கீதம் எல்லாம் வெளியாகி வருகின்றன எச்.எம்.வி. நிறுவ னத்திலிருந்து. தோண்டத் தோண்ட, கரங் கம் மாதிரி வரும் போலிருக்கிறது. எச்.எம். வி.யைப் பொறுத்தவரை -

பழசுக்கும் இருக்கிறது மவுசு.

– எஸ். வி. என்.



அவன் ஒரு மாதிரி...

அந்த கிராமத்தின் எல்லைக்குள் சைக்கிளில் சீரான விரைவில் வந்து கொண்டிருந்த கிராம நிர்வாக அலுவலர் நடராஜ னுக்குத் 'திக்'கென்றிருந்தது. சடக்கென சைக்கிளை நிறுத்தி இறங்கி விட்டான்.

ரெவின்யூ புறம்போக்கு நிலத்தில் கிளைபரப்பித் தழைத்து நின்ற பல மரங்கள் வெட்டிச் சாய்க்கப்பட்டிருப்பதைக் கண்டால் எப்படி இருக்கும். பல நிமிடங்கள் அவன் அதிர்ச்சியிலிருந்து மீளவில்லை.

காற்றில் அசைந்து வரவேற்பு மரியாதை செலுத்துவதைப் போல்... பூரிப்பைக் காட்டுவது போல் பூத்துக் குலுங்கி நின்ற தேக்குமரங்களும், சரஞ்சரமாய் மஞ்சள் நிறப் பூக்களைச் சொரிந்து நின்ற கொன்றை மரங்கள் சிலவும் மண்ணில் சாய்க்கப்பட்டுக் கிடந்த கோரம் அவனைக் குலுக்கியது.

தினந்தோறும் அந்த இடத்தை நெருங்கும்போதே அவன் மனம் அனிச்சையாய் மகிழும். மாலையில் கிராமத்தை விட்டுத் திரும்பும் போதும் அந்த ஓங்கி உயர்ந்த மரங்களை அவன் விழிகள் ஆசை ஆசையாய்க் கண்டு ரசிக்கும். மரங்களை நிறைவாய் உயிருள்ள மனிதர்களைப் போல் பாவித்து குதூகலிப்பான்.

கிராமத்திலேயே குடியிருக்கும் வெட்டி தலையாரி... அதான் அவனுக்குக் கீழ் பணிபுரியும் முனியாண்டி - எங்கு போனான்? விடிந்து இத்தனை நேரமாகியும்... இம்மாதிரி ஒரு நிகழ்ச்சி பற்றி ஏதும் தனக்குத் தெரிவிக்காமல் இங்கே என்னதான் செய்கிறான்.

நடராஜன் நெஞ்சுக்குள் கேள்விகள் மோதின. என்றுமில்லா எரிச்சலை உணர்ந்தான்.

மனக்கொந்தளிப்புடன் சைக்கிளை ஒரு கையால் தள்ளியபடி மேலும் சில அடிகள் எடுத்து வைத்து அந்த மரங்களின் அருகே சென்றான்.

அப்போது...

ஊருக்குள்ளிருந்து வெட்டித்தலையாரி முனியாண்டி வேகவேகமாக நடந்து வந்து கொண்டிருந்தான்.

அவன் தலையைக் கண்டதுமே கறுகறுவென எரிச்சல் வந்தது நடராஜனுக்கு.

நடராஜனை நெருங்குவதற்கு முன்பே ஒரு கும்பிடு போட்டான் முனியாண்டி.

''என்யா முனியாண்டி! இங்க என்னய்யா பண்ணிக்கிட்டிருக்கே?''

''சார்...!'' என்ற முனியாண்டி தயங்கியபடியே தலையைச் சொறிந்தான்.

''ராத்திரி, இங்க பெரிய அநியாயமே நடந்திருக்கு. நீ இப்பதான் தூக்கக் கலக்கம் மாறாம வந்து நிக்கறே. ராத்திரில ரவுண்டு வந்தியாய்யா?'' பொறிந்து தள்ளினான் நடராஜன். கண்கள் சிவந்து விட்டன.

''ராத்திரி கொஞ்சம் அசந்திட்டேன் சார்....''

''நம்ம மானமே காத்துல பறக்கற மாதிரி... ஏழெட்டு மரங்களை வெட்டிப்



புட்டானுவளே! இப்ப என்ன பதில் சொல்றது? இது யார் செய்த வேலைன்னு வது தெரியுதா? இல்ல...''

''இதுல பெரிய கை பின்னால இருக்கிறதா தெரியுது சார்! நாமளும் கொஞ்சம் ஜாக்கிரதையா இதுல எறங்கணும் சார்!''

''என்னய்யா இது. பெரிய கை, சின்ன கைங்கிறே? அப்படி யார் அது பெரிய கை? சீக்கிரம் சொல்லித் தொலைய்யா! முன்னாடியே தாசில்தாருக்கு என்னைப் பிடிக்காது. இப்ப இது வேற சேர்ந்துக்கிட்டுது.''

''கருப்பன், கலியன், ராமன், ராவு காலம் இவனுங்கள்லாம் இதுல சம்பந்தப் பட்டிருப்பானுங்க போலருக்கு சார்!''

''அவனுங்க...?''

''ஒன்றியத்தோட கையாளுங்க சார்! அதனாலதான் கொஞ்சம் நீக்கு போக்கா எறங்கணும்.''

''இங்க பாருய்யா முனியாண்டி!

ராஜகுரு


யாரோட கையாளா இருந்தாத்தான் நமக்கென்னையா? அரசாங்கத்துக்குச் சொந்தமான பல ஆயிரம் பெறுமானமுள்ள மரங்களை வெட்டினவன் யாராயிருந்தாலும் சரிதான்...''

''சரிங்க சார்! இப்ப என்ன செய்யலாம்?''

''ம். ராத்திரி கோட்டை விட்டது மாதிரி ஒறங்கிடாம இங்கேயே நீ நில்லு. மரத்தையெல்லாம் கொண்டுகிட்டுப் போயிடப் போறானுவ. நான் போய் தாசில்தார்ட்ட ரிப்போர்ட் பண்ணி, ஆக வேண்டிய வேலையைப் பார்க்கறேன். என்ன, நான் அந்தண்டை நகர்ந்ததும், நீ இந்தண்டை எங்கயாச்சும் கௌம்பிடாதே.''

''ச்சேச்சே! இந்த எடத்தை விட்டு அசையவே மாட்டேன் சார்! நீங்க, போயிட்டு வாங்க.''

சைக்கிளை விருட்டென்று டவுனை நோக்கித் திருப்பி ஏறி, வேக வேகமாகப் பெடலை மிதித்தான் கிராம அதிகாரி நடராஜன்.



மனம், வெட்டப்பட்ட மரங்களைப் பற்றியும், மேலதிகாரியான தாசில்தாரைப் பற்றியும் தீவிரமாக அசைபோட்டது.

சில மாதங்களுக்கு முன் மழை வெள்ளத்தின் போது அரசாங்கம் நிவாரணமாக, வீடு இழந்தவர்களுக்கும், வீடு சேதமடைந்தவர்களுக்கும் உதவித் தொகை வழங்கிய நாட்கள் மனசுக்குள் வலம் வந்தன.



மழைவிழும் வெள்ளத்திலும் மெய்யாகவே சேதமடைந்த வீடுகளுக்கு மட்டுமே குழுவை முன்வின்று அழைத்துச் சென்று காட்டி, பரிந்துரை செய்தான் நடராஜன்.

அப்படி ஒரு நாளில்...

''நீங்க சொன்ன அப்ளிகேஷன்ஸ்செல்லாம் சாங்ஷன் பண்ணிட்டேன். அதையெல்லாம் இன்னிக்கே டிஸ்போஸ் பண்ணிடலாம், வந்து...'' என்றார் தாசில்தார். குரலைத் தாழ்த்திக் கொண்டு தொடர்ந்தார் :

''அதே மாதிரி ஒரு நூறு அப்ளிகேஷன்ஸ் உடனே தயார் பண்ணிக் கையோட எடுத்திட்டு வாங்க. என்ன புரியுதா? நெக்ஸ்ட் அலாட்மென்ட்டும் வந்திருக்கு'' என்றார்.

''எக்ஸ்க்யூஸ் மீ சார்! எனக்கு விருப்பமில்ல. இதெல்லாம் வெளியே நாளைக்குத் தெரிஞ்சா நாம ரோட்ல நடக்க முடியுமா சார்?'' என்றான், தெளிவாக... தீர்மானமாக.

''நீ சொல்றது ஒரு விஷயத்துல சரிதான்யா. ரோட்ல நடக்க மாட்டான். அவனவன் கான்டெசாவுல போவான். இல்லன்னா ஃபிளைட்ல பறப்பான். உன்னையெல்லாம் பெரிசா நினைச்சிப் பேசினேன் பாரு...''

அதன்பின் அவனிடம் ஏதும் பேசவில்லை.

அவனும் அங்கிருந்து வெளியேறினான்.

''இந்த ஆள் ஒரு மாதிரி...'' என்று அவனை நோக்கிக் கைகாட்டி இரண்டு சிப்பந்திகள் பேசிக் கொண்டது பனிச் சென்று கேட்டது.

அன்றிலிருந்து அவன் பணியில் ஏதாவது ஒரு குறை கண்டுபிடித்து, என்கொயரியும் எச்சரிக்கையும் விட்டவண்ணமிருந்தார் தாசில்தார். ஆனால், அவன் தன் கடமைகளில் கண்டிப்பாகவும், நேர்மையாகவும், கறுகறுப்பாகவும் இருந்தான்.

'கடமையை ஒழுங்காக நிறைவேற்ற நினைக்கிற தனக்கு எத்தனை தடைகள் இந்த தேசத்தில்' என்று எண்ணமிட்டவாறே தாலுகா அலுவலகத்தின் முன் சைக்கிளை நிறுத்தி, இறங்கினான் நடராஜன்.

பரபரவென்று புகாரை எழுத்து மூலம் தயாரித்து, தாசில்தாரிடம் கொடுத்தான்.

புகாரை வாங்கிப் படித்த தாசில்தாரின் கண்களில் சில விநாடிகள் கேலி மின்னி மறைந்தது. நிமிர்ந்து அவனைப் பார்த்த போது... அவனைக் கட்டெரிப்பதைப் போல... குற்றவாளியைப் பார்ப்பதைப் போல கடுங்கோபத்துடன் பார்ப்பதாக உணர்ந்தான்.

''என் மிஸ்டர்? பெரிய ஸ்ட்ரெயிட் ஃபார்வர்ட்ம்பீங்களே! இதுக்கு என்னய்யா அர்த்தம்? உங்க கண்ட்ரோல்ல இருக்கிற வில்லேஜ்ல இத்தினி பெரிய காரியம் நடந்திருக்கு. உங்களுக்குத் தெரியாமலா நடந்திருக்கும். என்னய்யா உத்தியோகம் பாத்துக் கிழிக்கிறீங்க? யாரைக் காது குத்தப் பாக்கறீங்க? ம். தெரியாமதான் கேக்கறேன்? மேல உள்ளவங்களையெல்லாம் மடையன்னு நெனைச்சிட்டியாய்யா நீயெல்லாம். வசமா வந்து மாட்டிக்கிட்ட.''

''சார்! நடு ராத்திரில செஞ்சிருக்காங்க சார்! ஒன்றியத்தோட சப்போர்ட்லதான் நடந்திருக்குன்னு நம்ம வெட்டி முனியாண்டி சொல்றான். அவனை ஸ்பாட்ல காவல் போட்டுட்டுத்தான் வந்திருக்கேன்.''

''உங்க காவல் லட்சணம்தான் தெரியுதே! ஒன்றியத்தையெல்லாம் ஏன்யா நீ இழுக்கறே? உன் மேல அவர் புகார் கொடுத்திருக்கார்னு, அவருக்கு எகெய்ன்ஸ்டா ரிப்போர்ட் பண்றியா? நான் ஏன் இப்படி நெனைக்கக் கூடாது... மரங்கள நீயே வெட்ட ஏற்பாடு பண்ணிட்டு மத்தவங்க மேல குற்றம் சுமத்தறேங்கிறேன். நீ என்ன சொல்றே?''

உள்ளுக்குள் திடுக்கிட்ட நடராஜன், ''நல்ல கற்பனை சார்!'' என்றான்.

தனக்கெதிராக வலுவான வலை பின்ன முயற்சி செய்கிறார் தாசில்தார் என்பதையும் புரிந்து கொண்டான்.

ஆனாலும் அவன் கலங்கவில்லை.

''சார்! அப்ப கிளம்புங்க சார்! போலீஸ் ஸ்டேஷனுக்குப் போய்ட்டு, ஸ்பாட்டுக்கு போகலாம்'' என்றான் அமைதியாக.

''யோவ், எனக்கு ஒண்ணும் நீ அட்மினிஸ்ட்ரேஷன் கத்துக் கொடுக்க வேணாம். நீ போ ஸ்பாட்டுக்கு. என்ன செய்யணும்னு எனக்குத் தெரியும்.''

தாசில்தார் அதட்டலும், குதர்க்கமுமாகப் பேசியதும், அவரிடம் விடை பெற்று, கிராமத்தை நோக்கிக் கிளம்பினான்.

பிற்பகல் ஒரு மணிக்கு வி.ஏ.ஓ. நடராஜனின் சைக்கிள் கிராமத்திற்குள் நுழைந்த போது...

வெட்டப்பட்டுக் கிடந்த தேக்கு மரங்களை ஒரு லாரியில் ஏற்றிக் கொண்டிருந்தனர் ஆட்கள். சற்றுத் தொலைவில் ஒன்றியத் தலைவரின் மோட்டார் பைக் நின்றிருந்தது. கிராமத்து முக்கிய புள்ளிகள் சிலர் ஒன்றியத் தலைவரைச் சூழ்ந்து நின்று உரையாடிக் கொண்டிருந்தனர்.

தலையாரி முனியாண்டியும் ஒரு பக்கமாகக் கைகளை மார்பின் மேல் கட்டிக் கொண்டு நின்றிருந்தான்.

தான் காண்பதெல்லாம் கனவா நிஜமா என்று நம்ப முடியாமல் திகைத்து நின்றான் நடராஜன்.

''பொழைக்க வந்த வெளியூர்க்காரனுக்குத் தெரியற வித்தையில கொஞ்சமாச்சும்... இங்க பொறந்து... இங்கயே வாழற நமக்குத் தெரியாதா? வி.ஏ. ஒன்னா... பெரிய ராஜான்னு நெனப்பா? இவன் ரிப்போர்ட் பண்ணா என் தலை போய்டுமா? இவன மாதிரி எத்தினி பசங்கள... அதிகாரிங்கள நான் பாத்திருப்பேன்?'' என்று ஒன்றியத் தலைவர் பேசிய சொற்கள் செவிகளில் விழுந்ததும், செய்வது என்ன என்பது புரியாமல் நின்றிருந்தான் நடராஜன்.

இங்கே குற்றவாளிகள் எல்லாம் அதிகாரிகள் போலவும், அதிகாரிகள் எல்லாம் குற்றவாளிகள் போலவும் தோற்றமளிப்பதாக அவன் மனம் நினைத்து வருந்தியது.

அப்போது...

தாசில்தாரின் ஜீப் புழுதியைக் கிளப்பிக் கொண்டு வந்து நின்றது. ஜீப்பிலிருந்து முதலில் குதித்திறங்கிய பியூன், வி.ஏ.ஓ. நடராஜனை நெருங்கி ஒரு கடித உறையைக் கொடுத்து விட்டு, ஒரு புத்தகத்தில் கையொப்பம் பெற்றுக் கொண்டான். அவன் முகத்தில் எந்த உணர்ச்சியும் இல்லை.

கடித உறையைக் கிழித்து, உள்ளேயிருந்து கடிதத்தை எடுத்துப் படித்தான் நடராஜன். ஒரு பொட்டல் காட்டு கிராமத்துக்கு அவன் மாற்றல் செய்யப்பட்டிருந்தான். பொதுநலன் கருதி உடனடியாக அவன் மாற்றப்படுவதாக ஆணையில் குறிப்பிடப்பட்டிருந்ததையெண்ணி சிரிக்கத் தோன்றியது.

இனி இந்தக் கிராமத்து மாணவர்களுக்குக் காசு கொடுக்காமல் சாதிச் சான்றும், வருமானச் சான்றும் கிடைக்குமா? என நினைத்து வருந்தினான்.

நியாயமும், கடமையுணர்ச்சியும், ஒழுக்கமும் அந்த மரங்களைப் போலவே அடாவடித்தனமாக வெட்டிச் சாய்க்கப்பட்டு அப்புறப்படுத்தப்படுவதை ஒரு கணம் எண்ணி மனம் வெந்தான்.

மெள்ள அங்கிருந்து நகர்ந்தான்.

அங்கிருந்த தாசில்தார், ஒன்றியத் தலைவர், தலையாரி மற்றும் பலரும் அவனை வென்று விட்டதாக எண்ணிப் பூரித்து... ஒருவருக்கொருவர் புன்னகைத்துக் கொண்டனர்.

அடுத்த சில நாட்களுக்குப் பின் ஒரு நாள்...

வி.ஏ.ஓ. நடராஜன் புதிதாக மாற்றப்பட்ட கிராமத்தின் தலைமையகமான தாலுக்கா அலுவலகத்தில் சிலர் பேசிக் கொண்டனர் :

''சார்! இங்க மாற்றல்ல வர்ற விஏஓ ஒரு மாதிரியான ஆளாம்.''

''அப்படியா?'' என்றவர்களின் முகங்கள் மாறின.



''நம்ம ராப்பிச்சை ரங்கசாமி பெரிய ஆளாயிருப்பான் போலிருக்கு.''

''எதை வச்சு சொல்றே?''

''அமெரிக்க அதிபராத் தேர்தல்ல ஜெயிச்சதுக்காக கிளின்டனுக்கு வாழ்த்துத் தந்தி அனுப்பியிருக்கான்!''

- காழி ரேவதி.

அரசியல்வாதி 1 : சுவாமி தரிசனம் பண்ணிட்டு வர்றேன்னு சொல்லவே பயமா இருக்கு!

அரசியல்வாதி 2 : ஏன்?

அரசியல்வாதி 1 : சுப்பிரமணிய சுவாமியைத்தான் பார்த்துட்டு வர்றேன்னு மேடம் தப்பா புரிஞ்சுக்கிடறாங்க, அதான்!

– எஸ். முகம்மது யூசுப்



●● கலை மன்றம் வார இதழில் 1955 ஜனவரியில் (ஆண்டு மலர்) நான் எழுதிய செந்தாமரை என்ற சிறுகதை இடம் பெற்றிருக்கது. அந்தப் பிரதி அனுப்பி வைத்தால் நன்றியுடையவனாய் இருப்பேன்.

- சி. இல. சுந்தரேசுவரன்,
22 A ''காமாட்சி இல்லம்''
மவுண்ட் பிளசண்ட்,
குன்னூர் - 643 102.

●● ஆப்செட் தொழில் தெரிந்த கறுகறுப்பான இளைஞர்கள் வேலை வாய்ப்புக்கு அணுகவும்.

- ரத்னா ஆப்செட் பிரிண்டர்ஸ்,
40, பீட்டர்ஸ் சாலை,
ராயப்பேட்டை,
சென்னை - 600 014.

பாலம்



●● புலவர் குழந்தை எழுதிய அ) யாப்பிலக்கணம் ஆ) யாப்பதிகாரம் ஆகிய நூல்கள் தேவை. பழையனவோ புதியனவோ விலை விவரம் தெரிவிக்க முகவரி :

- ஆலம்பாட்டு சோ. தமிழரசு,
NP/IX/545 - E. தமிழ் சோலை,
மங்காரத்தோப்பு, பாப்பனம்கோடு,
திருவனந்தபுரம் - 695 018.

●● நன்கு இயங்கும் நிலையில் உள்ள பழைய (டபுள் ரீடு) ஹார்மோனியம் விற்பனைக்கு இருந்தால் விலை விவரத்துடன் தெரிவிக்கவும்.

- எம். அருணாசலம்,
3/50, இலுப்பக்குடியார் தெரு,
சோளாப்பட்டு - 622 503.

●● Hazel Henderson எழுதிய Creating Alternative Futures என்னும் நூலைப் படிக்க விரும்புகிறேன். பதினைந்து நாட்களில் படித்து விட்டுத் தருகிறேன். கொடுத்து உதவக் கூடியவர்களுக்கு முகவரி :

- பேராசிரியர் நா. தர்மராஜன்,
41, முத்துசாமி நகர்,
சிவகங்கை - 623 560.

●● ஆயிரத்தெட்டு ஆஞ்சநேயர் திருத் தரிசனம் என்கிற ஆன்மீகப் புனிதப் பயணம் மேற் கொண்டிருக்கிறேன். தங்கள் ஊரில் உள்ள விசேஷ ஆஞ்சநேயர் கோயில் பற்றி முகவரியுடன் தெரிவிக்கவும்.

- தாரை ந. நாராயணராவ்,
புராண சொற்பொழிவாளர்,
110, அரசமரத் தெரு,
காவேரிப்பட்டணம் - 635 112
தர்மபுரி (மா.வ).

●● காளான் வளர்ப்பு தொழில் செய்ய விருப்பம். விவரங்கள் தெரிந்தவர் தயவு செய்து உதவவும். தக்க சன்மானம் தரப்படும்.

- ஈ. ஸ்ரீனிவாசன்,
43/1, திருப்பூர்குமரன் தெரு,
சென்னை - 39.

●● ''ஸயன்ஸ் டுடே'' இதழ்கள் சேகரித்து வருகிறேன். பழைய பிரதிகள் வைத்திருப்போர் தந்தால் உதவியாக இருக்கும். விலை குறிப்பிடவும். வேறு அறிவியல் நூல்கள் இருந்தாலும் தெரிவிக்கவும்.

- ஜி. ஸ்ரீராம்,
181, வன்னியர் தெரு,
பாடி, சென்னை - 600 050.

●● ரூ. 25,000 வரை முதலீடு செய்ய முடிந்தால் சின்ன தொழில் அல்லது வியாபாரத்தை லாபகரமாகச் செய்யலாமே என்று திட்டம் இருந்து முதலீடு இல்லாதவர்கள் தொடர்பு கொள்ளலாம்.


- ஜஅனியாத்,
மே/பா. கே.எம்.டி. இப்ராஹிம்,
தபால் நிலையம் சாலை,
சாலிகிராமம், சென்னை.

(பாலம் பகுதி மூலம் இணையும் வாசகர்களின் வெற்றி தோல்விகளுக்குக் கல்கி நிறுவனம் பொறுப்பேற்க இயலாது.)

நீங்கள் கேட்டவை – தராசு


'சு.சுவாமியின் வெங்காய வெடி' என்கிறாரே கே.ஏ.கே.?

• வாகனம் நொறுங்கியது!




• ''புரட்சி வெடிக்கும்!''





• வெங்காய வெடி?





• இவர் தோல்வி...

• ...இவர் வெற்றியா?

● ஜெயசுகந்தி, திருத்துறைப்பூண்டி.

? புஷ்ஷின் தோல்வியை இராக்கியர்கள் விழாவாகக் கொண்டாடியிருப்பது குறித்து...?

! வளைகுடா போரில் ஈராக் தோல்வியடைந்ததால் புஷ்ஷின் இன்றையத் தோல்வி அவர்களுக்கு ஒரு போலியான மகிழ்ச்சியை அளித்திருக்கிறது. வளைகுடா போர் விஷயத்தில் புஷ்ஷுக்கும் கிளிண்டனுக்கும் அப்படியொன்றும் பெரிய கருத்து மாறுபாடு இல்லை; மறுபடி தேவைப் பட்டால் கிளிண்டனும் புஷ் போலவே பாய்வார் என்பதை சதாம் உசேன் உணர்ந்துதான் இருக்கிறார். இந்த மகிழ்ச்சி வெளிப்பாடு ஒரு ஜாலம்தான்.

● எம். வேங்கடாசலம், சேலம்.

? 'வேலை வாய்ப்பு அலுவலகம் மூலமாக சீனியாரிடி படி நியமிக்கப்பட்ட இடை நிலை ஆசிரியர்களுக்கு A B C D கூடத் தெரியவில்லை. ஆகவே இந்த நியமன முறையைக் கைவிட்டு ஒரு குழு மூலம் ஆசிரியர் நியமனங்களைச் செய்ய ஆலோசிப்பதாக'' அரங்கநாயகம் கூறியுள்ளாரே?

! அவர் மிகைப்படுத்தித்தான் பேசியுள்ளார் என்றாலும், பொதுவாக ஆசிரியர்கள் தரம் போதாது என்பதால், கல்வித் தரமும் தாழ்ந்து வருகிறது என்பது உண்மையே. இதற்கு ஆசிரியர்களை மட்டும் நாம் குறை கூறிப் பயனில்லை. அவர்களும் இன்றைய கல்வி முறைப்படி படித்துப் பட்டம் பெற்றவர்களே. கல்வியில் - அதன் தரத்தில் மத்திய - மாநில அரசுகள் கடந்த 45 ஆண்டுகளில் போதிய கவனம் செலுத்தத் தவறியதின் ஒட்டுமொத்த விளைவே இதெல்லாம். இனியேனும் இங்கொன்றும் அங்கொன்றுமாகச் சில சீர்திருத்தங்களைச் செய்து கொண்டிராமல் ஒட்டுமொத்தமாக ஒரு சிறந்த கல்விக் கொள்கை வகுத்துத் திட்டங்கள் தீட்டி அமுல்படுத்துவது நலம்.

● அ. சுகுமார், காட்டுக்கானூர்.

? ''நான் ஊரில் இல்லாத போது குறைகளை என் மகனிடம் கூறுங்கள்'' என்று பஜன் லால் அறிவித்திருப்பது பற்றி...?

! பூ! இதைப் போய் ஏதோ பெரிய அதிகார துஷ்பிரயோகம் போல் கேள்வி எழுப்புகிறீரே! ''நான் ஊரில் இல்லாத போது என் மகன் ஃபைல்களைப் பார்த்துக் கையெழுத்துப் போடுவார்'' என்று கூறாமல் விட்டாரே! அதற்காக நன்றி செலுத்துங்கள்!

● லீலாராம், தக்கலை.

? 1992ன் இரும்பு மனிதர் பங்காரப்பா தானே?

! ஹர்ஷத் மேத்தாக்களையும் பங்காரப்பாக்களையும் 'இரும்பு மனிதர்கள்' என்று வர்ணித்து சர்தார் வல்லபபாய் பட்டேலின் நற்பெயருக்குக் களங்கம் ஏற்படுத்த நான் விரும்பவில்லை. மேலும் பங்காரப்பாவுக்குக் கல்தாவும் கொடுத்தாகி விட்டது.

❑ ரூ 25 பரிசு பெறுபவர் :
ஆர். கருணாகரன்,
7/101-A, பள்ளி வீதி,
தேங்கல் வாரை,
மேட்டூர் அணை – 636 402.

● கல்கி!







● 'மகன் இருக்கிறாரே!'

● 'யு.பி.சி.டி. தெரியாமல்...'

● ச. வாசுதேவன், பெங்களூர்.

? *ஒன்றுபட்ட சோவியத் யூனியன் உடைவதற்குக் காரணமான கோர்பசேவை ஆதரிக்கும் நீங்கள், தனித் தமிழ்நாடு கேட்கும் ராமதாஸைக் கண்டித்துள்ளீர்களே?*

! மொட்டைத்தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடுவதாய் இருக்கிறது உங்கள் கேள்வி. சோவியத் ரஷ்யாவில் நிலவிய ஆட்சி முறையே வேறு. அங்கே இருந்தது கம்யூனிஸ சர்வாதிகாரம். இங்கேயோ பூரண சுதந்திர ஜனநாயகம். வித்தியாசமில்லையா? பாரதம் என்ற மாபெரும் தேசமே நமதாயிருக்க, எதற்கு சார் தனித் தமிழ்நாடு?

● எஸ். ஹரிஹரன், சாத்தனூர்.

? *ஜார்ஜ் புஷ் தோற்றதன் காரணம் என்ன? அவருடைய பொருளாதாரக் கொள்கை ஏன் எடுபடவில்லை?*

! வளைகுடா போர் காரணமாக எக்கச்சக்கமாகச் செலவாயிற்று என்பது ஒருபுறம். அணு ஆயுதக் குறைப்பு காரணமாகப் பல யுத்த தளவாடங்களின் தயாரிப்பு பாதிக்கப்பட்டது மறுபுறம். இதன் உடன் விளைவாக, இந்த யுத்த தளவாடங்களைத் தயாரித்து வந்த ஏராள அமெரிக்க நிறுவனங்கள் பாதிக்கப்பட, தொழிலாளர் பலர் வேலை இழக்க... இவற்றையும் இன்னும் பல பொருளாதாரத் தேக்க நிலைகளையும் சமாளிக்கக் கூடிய நல்ல கொள்கைகளை உருவாக்கவோ அவற்றுக்கு மக்களின் ஆதரவைப் பெறவோ முடியாமல் போனதால் தான் புஷ் தோற்றார்.

● என். முருகேஷ், பெருஞ்சேரி.

? *பொது மக்களுக்கும் காவல் துறையினருக்கும் இடையே ஏற்படும் மோதல்களைத் தவிர்க்க ஒரு யோசனை?*

! திருச்சியில், பொது மக்கள் - காவல்துறையினரிடையே நல்லுறவை வளர்க்க ஓர் அமைப்பு உருவாகிச் செயல்பட ஆரம்பித்திருக்கிறது. அது பற்றி விரிவாக அடுத்த இதழில் படிக்கலாம்!

● எம். சம்பத், வேலாயுதம்பாளையம்.

? *''சுப்பிரமணிய சாமியின் வெங்காய வெடிகளுக்கு நாங்கள் பயப்பட மாட்டோம்'' என்று கே.ஏ.கே. கூறுகிறாரே?*

! பயப்படாததற்கா சு. சுவாமி பற்றிய செய்திகளை வெளியிடும் பத்திரிகைகளை மிரட்டுகிறது இந்த அரசு? தலைமைச் செயலரின் கேப் வெடிக்குப் பத்திரிகைகளும் பயப்படாது!

● மு. க. தி. க. பாலசுப்பிரமணியன், இலால்குடி.

? *தமிழகத்தில் காங்கிரஸ் ஆட்சிக்கு வர வாய்ப்பிருக்கிறது என்று நம்புகிறீர்களா?*

! குமரி அனந்தனின் பாத யாத்திரையை யொட்டி நடந்த கலவரங்கள், அவருடன் வந்த வாகனம் நொறுக்கப்பட்டது முதலிய சம்பவங்களைப் பார்த்தால் அ.தி.மு.க. கவலைப்படுவது புரிகிறது. இது, காங்கிரஸ் தனித்து நிற்க மக்களின் ஆதரவு பெருகி வருவதன் அறிகுறி. வாழப்பாடியார் சற்று சிந்தித்து முதுகு சவாரியை முடித்துக் கொண்டு நேசக் கரம் நீட்டினால் நிறையவே சாதிக்கலாம்.

● வீ. சோழன், செம்போடை.

? *''தமிழகத்தை ஆள்வோரால் நீதிபதிகள் கூட அச்சுறுத்தப்படும் அளவிற்கு நிலைமை மோசமாகி விட்டது. இந்த மிரட்டல்களுக்குப் பயந்து நீதிமன்றங்களில் மக்களுக்குச் சரியான நீதி கிடைக்காவிட்டால் தோட்டாவல் கொடுக்கப்படாத புரட்சி நாட்டில் வெடிக்கும்'' என்று கருணாநிதி எச்சரிக்கை விடுத்துள்ளாரே?*

! எப்போது இப்படிச் சொன்னார் என்று நீங்கள் குறிப்பிடவில்லை. தம் மீது ஊழல் புகார்களை விசாரிக்கும் சிவசுப்பிரமணிய கமிஷனை எதிர்த்து கருணாநிதி தாக்கல் செய்த மனு உயர்நீதிமன்றத்தில் தள்ளுபடி செய்யப்பட்ட பிறகு கூறியிருக்க மாட்டார் என்று நம்புவோம்!

● எம். செல்வம், செங்கல்பட்டு.

? *பழனி முருகன் சிலையை மாற்ற வேண்டும் என்று 'ஜெ' தலைமையில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பது குறித்து?*

! அரசியல்வாதிகளே முடிவெடுக்காமல் ஆன்மீகச் சான்றோர்களைக் கலந்தாலோசித்து ஒரு தீர்மானத்துக்கு வருவது நல்லது.

● ஆர். கருணாகரன், மேட்டூர் அணை. ❐

? *சென்னைவாசிக்குக் காதில் தேன் புகுந்து 1½ மணி நேரம் உயிருடன் இருந்திருக்கிறதே?*

! இதில் ஒன்றும் அதிசயமில்லை; ''செந்தமிழ் நாடென்னும் போதினிலே விஷத் தேன் வந்து பாயுது காதினிலே'' என்பது போல்தானே எங்கும் அரசியல் பொதுக் கூட்டங்கள் நடக்கின்றன!

ஐம்பது ஆண்டுகளுக்கு முன்...

கல்கி, 1942 நவம்பர் 20

பேசுவது யார்?



"காந்திஜியை ஐந்தாம் படைக்காரர் என்று சொல்வது மகா முட்டாள்தனம். அவர் ஒரு மகான். உலகின் சிலர்களில் அவர் ஒருவர். அவரை ஐந் தாம் படை ரகத்தில் சேர்ப்பது கொஞ்ச மும் தகாது. உயர்ந்த ஆத்மார்த்திகக் கொள் கைகளின்படி நடப்பவர் காந்திஜி" என்று லண்டனில் ஒருவர் பேசியிருப்பதைப் படித் துத் திடுக்கிடுகிறோம்.


"யார் இப்படிப் பேசுகிறது?" என்று நாம் உற்றுப் பார்க்கும் போது, அது தென் னாப்பிரிக்கப் பிரதம மந்திரி ஜெனரல் ஸ்மட்ஸின் குரல் என்று தெரிகிறது. ஜென ரல் ஸ்மட்ஸ் இங்கிலாந்தின் உயர் நண்பர். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் தூண்களில் ஒருவர். யுத்தத்தில் அவர் பிரிட்டனுக்குச் செய்து வரும் உதவி கொஞ்சமல்ல. இத் துடன் அவர் காந்தி மகானைத் தென்னாப் பிரிக்காவில் நன்றாக அறிந்தவரும் கூட.

ஜெனரல் ஸ்மட்ஸின் பிரசங்கத்தைப் படித்து விட்டு, பிரிட்டிஷ் பிரசாரகர்களின் நிலைமைக்காக வருத்தப்படுகிறோம். தங்கள் பிரசாரத்தை இம் மாதிரி கண்டிப் பவரை அலட்சியமும் செய்ய முடியாமல், அவரையும் சேர்த்து ஐந்தாம் படைக்காரர் என்று கூறவும் முடியாமல் மென்று விழுங்கிக் கொண்டு விழிக்க வேண்டி யிருப்பது எவ்வளவு பரிதாபம்!

- என்ன சேதி

டாக்டர் பட்டம்!

இந்தக் 'கல்கி' இதழைக் கையில் எடுக்கும் போதே ஒருவேளை அத்தர், புனுகு, ஜவ்வாதின் மணம் வீசினாலும் வீசலாம். வீசவில்லையென்றால் அது காயக சிகாமணி டாக்டர் முத்தையா பாகவதரின் தவறாகாது. போட்டோ எடுத்தவர்களின் சாமர்த்தியக் குறைவுதான் காரணமாகும். நறுமணத்திலும் நல்லுடையிலும் பற் றுடைய ஸ்ரீ முத்தையா பாகவதரைச் "சங்கீத ராஜா" என்றுதான் சொல்ல வேண்டும். தென்னாட்டில் சங்கீதக் கலையை அப்பிய சித்தவர்களுக்குள்ளே அவர் தலைசிறந் தவர். கர்நாடக சங்கீதம் என்கிற மகா சாகரத் தைக் கடந்தவர். சங்கீதக் கலையில் புகழ் பெற்றது போல் கதா காலட்சேபத்திலும் நிகரற்று விளங்கியவர். அவருடைய காலட் சேபங்களில் தமிழ்ச் சுவை பொங்கும் என் பது பிரசித்தமான விஷயம். தமிழ்நாட்டில் தமிழிசை இயக்கத் துக்கு அஸ்திவாரம் அமைத்தவர் அவர் தான். பிற்காலத்தில் மைசூர் சமஸ்தான மும் திருவாங்கூர் சமஸ்தானமும் போட்டி போட்டு அவரை அபகரித்துக் கொண்டன. இப் படிப்பட்ட சிறந்த கலைஞருக்குத் திரு வாங்கூர் சர்வ கலா சாலையார் 'டாக்டர்' பட்டம் அளித்துக் கெளரவித்திருப் பதை அறிந்து மிக வும் மகிழ்கிறோம்.




- அட்டைப்பட விளக்கம்

பெரிய இடத்து உதவி

லின்லித்கோ பிரபு ராஜாஜிக்கு மகாத் மாவைப் பார்ப்பதற்கு அநுமதி மறுத்துப் பெயரும் புகழும் அடைந்த கட்டமானது முடிவுற்றது.

ராஜாஜி எந்தக் கட்சிக்கும் பிரதிநிதி இல்லையாம்! யாருடைய சார்பாகவும் அவர் பேசுவதற்கில்லையாம்! அப்படியா னால், வைஸ்ராயும் அவருடைய நிர்வாக சபை அங்கத்தினரும் இந்த நாட்டில் யாருக் குப் பிரதிநிதிகளாம்?

காங்கிரஸ்-லீக் ஒற்றுமைக்காகவும், ஜனங்கள் - சர்க்கார் ஒற்றுமைக்காகவும் ராஜாஜி செய்து வரும் முயற்சி பிரசித்த மானவை. அவருடைய முயற்சிக்கு நாட்டில் ஏராளமான ஆதரவு இருக்கிறது என்பதும் தெரிந்த விஷயம். ஜனாப் ஜின்னா வுடன் அவர் சம்பாஷணை நடத்தி விட்டு மகாத்மா காந்தியைப் பார்க்க அநுமதி



கேட்கிறார். சமரசத்துக்கு இடமிருக்கிற தென்று அவர் நம்பாவிட்டால் மேற்படி அநுமதியைக் கேட்டிருக்கவே மாட்டார்; கேட்டுத் தம்மை நகைப்புக்காளாக்கிக் கொண்டிருக்க மாட்டார். கொஞ்சமாவது சிந்தனா சக்தியுள்ளவர்கள் இதையெல்லாம் நிச்சயமாய் உணர்ந்திருப்பார்கள்.

- தலையங்கத்தில் ஒரு பகுதி

புரிந்த லக்ஷணம்!

ஒரு ஆசிரியர், ஒரு பட்டிக்காட்டானிடம் எலக்ட்ரிக் விளக்கு எப்படி எரிகிறது, எப்படி அணைகிறது; கரண்ட் எப்படி வருகிறது முதலிய எல்லா விஷயங்களையும் விளக்கிச் சொல்லி விட்டு ''இன்னும் ஏதாவது தெரிந்து கொள்ள வேண்டியதாயிருந்தால் கேள் சொல்கிறேன்'' என்றார்.



பட்டிக்காட்டான் : அதெல்லாம் தெரிஞ்சுது சாமி. எதிலே சாமி எண்ணெய் ஊத்தறது?

கே. ஆர். சி. கோபால கிருஷ்ணன்
காலக்ஷேபம்

என் மனைவி!

ஸ்ரீ கே. சாரங்கபாணியின் ஹாஸ்ய நடிப்புத் திறமையில் எனக்கு ஏற்பட்ட மதிப்பு நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டு வந்தது.

ஆனால், இப்போது பாரகனில் ஓடும் ''என் மனைவி'' படத்தில் இவருடைய ஹாஸ்ய நடிப்புப் பிரகாசிப்பது போல் இதற்கு முன் எப்போதும் பிரகாசித்த தில்லையென்று சொல்லலாம். குற்றமற்ற ஹாஸ்ய நடிப்பின் சிகரத்தை இவர் இப் படத்தில் அடைந்திருக்கிறார். இந்த மூன்று மணி நேர முழு ஹாஸ்யப் படத்திற்கு முழுக்க முழுக்க ஸ்ரீ சாரங்கபாணிதான் உயிர்கொடுத்து அலுப்பில்லாமல் படத்தைப் பார்ப்பதைச் சாத்தியமாகச் செய்திருக்கிறார்.

வைத்தியர் வேம்புவய்யராக நடிக்கும் ஸ்ரீ கே. சாரங்கபாணி நெடுகிலுமே நன்றாய்த்தான் நடித்திருக்கிறார். ஆனாலும், நந்தவனத்தில் தனபால குப்தாவும் அவனுடைய சிநேகிதனும் உட்கார்ந்திருக்கும் போது, இவர் அங்கே போய், ''மாதரை நினையாதே!'' என்று பாடும் கட்டத்தைப் பிரமாதம் என்றுதான் சொல்ல வேண்டும். விரல் விட்டுத் தாளக் கணக்கு எண்ணிக் கொண்டு அவர் ஸ்வரம் பாடும் அழகு!... ஆஹா! அந்த ஸ்வாரஸ்யத்தைப் பார்த்துத்தான் அநுபவிக்க வேண்டும்.



- ஆடல்,பாடல், ''கர்நாடகம்''

அழியா இலக்கியம்

''கல்கி'' தீபாவளி மலரில் ''வீணை பவானி''யைப் படித்த பின்பு இக் கடிதமாவது எழுதி என்னுடைய ஆனந்தத்தைத் தெரிவிக்க வேண்டுமென்று தோன்றியது. நேரில் சொன்னால் முகஸ்துதியாய் இருக்குமாகையால் கடிதத்தைத் தவிர வேறு வழியில்லை. உண்மையிலேயே வீணை பவானி ஒரு அற்புதமான கதை. அது ஒரு நாவலாக வெளிவருமானால் என்றென்றும் நிலை பெற்று நிற்கக் கூடிய கதைகளில் ஒன்றாய் மிளிருமென்பதில் சந்தேகமில்லை. மனித சுபாவங்களும் உணர்ச்சிகளும் ரொம்ப அழகாய் அதில் சித்திரிக்கப்பட்டிருக்கின்றன. அதைப் படித்த போது அன்னா காரெனின்னா, தெய்ஸ் ஆகியவைகளின் நினைப்பே எனக்குத் தோன்றியது.

மூன்று தடவைகள் படித்துங்கூட இன்னமும் படிக்க வேண்டுமென்றே வீணை பவானி சொல்லுகிறாள். அற்புதமான கதை.

'ஆர்ட்' காகிதத்தில் தங்க எழுத்தில் அச்சிட்டால் கூடப் போதாது என்று தோன்றுகிறது. அழியாத கதை.

தங்கள்,
டி. எஸ். சொக்கலிங்கம்
(தினமணி ஆசிரியர்)
- வட்டமேஜை

இன்னும் ஒரு ரத யாத்திரை!



✱ ரதயாத்திரை



✱ கலை நிகழ்ச்சி

"ஐயோ, ரதயாத்திரையா!'' என்று பயப்பட வேண்டாம். இது முற்றிலும் மாறுபட்டது! தென்னாற்காடு மாவட்டத்தில் கிராமம் கிராமமாகப் போய் மக்களிடையே தொழுநோய் பற்றிய விழிப்புணர்ச்சி ஏற்படுத்துவதுதான் இதன் நோக்கம்.

இரவிலும் மின்விளக்கு அலங்காரத்தால் ஜகஜ்ஜோதியாகத் திகழ்கிறது ரதம். நான்கு பக்கங்களிலும் மக்களுக்குத் தொழு நோய் பற்றி அறிவூட்டும் விதமாகப் புகைப்படங்கள், புள்ளி விவரங்கள், தகவல் குறிப்புக்கள்... முன்புறம் பெரிய அளவில் கம்பீரமாக காந்தியடிகள் ஒரு தொழு நோயாளிக்குச் சிகிச்சை அளிக்கும் ஓவியம். கூட்டம் சேர்க்க ஒலி பெருக்கியில் சினிமா மற்றும் பிரசாரப் பாடல்கள். இதைத் தவிர சம்பத் குழுவினரின் கரகாட்ட நிகழ்ச்சியும் உண்டு.

நோக்கம், மக்களைக் கவர்ந்து விழிப்புணர்வு ஏற்படுத்துவது மட்டுமல்ல; கூடவே தொழு நோய் பரிசோதனை, தேவைப்பட்டால் சிகிச்சை - இவையும் உண்டு.

ரஜினி ரசிகர் சங்கம் உள்பட, சமூகநலன் கருதும் பல்வேறு சங்கங்கள் ஒத்துழைப்புத் தருகின்றன.

''தொழு நோய் தொற்று நோயல்ல; அவர்களை அன்புடன் நடத்துங்கள்'' என்ற கருத்தை மையமாகக் கொண்ட இந்தப் பிரசாரத் தேருக்காகப் பாராட்டுக்குரியவர்கள் பலர். முக்கியமாக : மாவட்ட சுகாதார இயக்குனர் டாக்டர் குணசேகரன், தொழுநோய் அலுவலர் டாக்டர் ராஜவேலு, டானிடா சுகாதாரக் கல்வி ஆலோசகர் டாக்டர். என். முருகேசன்.

மழை, வெயில் என்று பாராமல், கட்சி அரசியல் இல்லாமல் கடமையே கண்ணாகத் தொடரும் இதுபோன்ற ரத யாத்திரை, மத யாத்திரைதான் - அன்பு மதம்!

- ரமாமணி சுந்தர்

பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் வி. முரளி, பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர்: வி. வைத்தியநாதன். ஆசிரியர் : கி. ராஜேந்திரன். இணை ஆசிரியர் : சீதா ரவி.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, எக்காட்டுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி : ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; விளம்பரம் - சந்தா : 2345622; டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா - உள்நாடு : ரூ. 156/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 400/-; விமானத் தபால் : ரூ. 1050/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 78/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 200/-; விமானத் தபால் : ரூ. 525/-.

சில குழந்தைகள் மற்றவர்களை விடத் துறுதுறுவென இருப்பது ஏன்?

துறுதுறுவென இருப்பதற்குத் தேவையான சக்தியைப் பெறுவதற்கு, உங்கள் குழந்தைக்குச் 'சரியான' கலோரிகள் தேவை. புரோட்டீன்களும், கார்போஹைட்ரேட்ஸும், கொழுப்புச் சத்தும் சரியான சமச்சீர் விகிதத்தில் கலந்திருந்தால் தான் இந்தக் கலோரிகள் கிடைக்கும்.

இந்தச் 'சரியான' கலோரிகள் கிடைக்க வேண்டுமானால் அதற்குச் சிறந்த வழி ஊட்டச் சத்துக்கள் சமவிகிதத்தில் கலந்த உணவைக் கொடுக்க வேண்டும்.

உங்கள் டாக்டரிடம் கேளுங்கள் சொல்லுவார். உங்கள் குழந்தைக்கு 4 மாதங்கள் ஆனபிறகு பால் மட்டுமே போதாது. ஒவ்வொரு வேளையும், ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு வாரமும் ஊட்டச் சத்துக்கள் சம விகிதத்தில் கலந்த திட உணவை உங்கள் குழந்தைக்குத் தர வேண்டும்.

பெரும்பாலான தாய்மார்களுக்கு இது முடிவதில்லை. வழக்கமான உணவு வகைகள் சரிப்பட்டு வருவதில்லை.

பிறகு என்னதான் வழி?

செரிலாக். ஊட்டச் சத்துக்கள் சம விகிதத்தில் கலந்த, உங்கள் குழந்தைக்கு மிகவும் பழக்கமான பாலின் எல்லா நற்பயன்களும் அடங்கிய திட உணவு. வளரும் குழந்தைகளுக்குத் தேவைப்படும் மிகச் சிறந்த பால் புரோட்டீன்கள் இதில் உள்ளன. மேலும், கொழுப்புச் சத்துக்கள், கார்போஹைட்ரேட்ஸ், இரும்புச்சத்து, கால்ஷியம் ஆகிய சத்துக்கள் சரியான அளவில் கலந்த உணவு செரிலாக். வைட்டமின்கள் A, D, E, B- காம்ப்ளெக்ஸ், மற்றும் C இதற்குப் பலம் சேர்க்கின்றன.

இன்னுமொரு சிறப்பு, செரிலாக் இப்போது நெஸ்லேயின் புரட்சிகரமான புதிய Z-லேன் என்ஸைமேட்டிக் முறைப்படி தயாரிக்கப்படுகிறது. இதனால் தானியங்கள் எளிதில் ஜீரணமாவதற்காக முன்கூட்டியே பக்குவப்படுத்தப்படுகின்றன. செரிலாக் மிக எளிதில் ஜீரணமாகிவிடுகிறது, மிருதுவாகவும், சுவையாகவும் இருக்கிறது.

எனவே, உங்கள் குழந்தைக்கு 4 மாதங்கள் ஆனதும் செரிலாக் கொடுங்கள். ஏனென்றால், இதில் 'சரியான' அளவு கலோரிகள் உள்ளன. ஏனென்றால், இதில் பாலின் நற்பயன்கள் உள்ளன. ஏனென்றால், உங்கள் குழந்தை துறுதுறுவென இருப்பதற்குத் தேவைப்படும் ஊட்டச்சத்துக்கள் சமவிகிதத்தில் கலந்த திட உணவு செரிலாக்.





உங்கள் குழந்தைக்கு அளியுங்கள் செரிலாக் அனுகூலம்.

முக்கிய அறிவிப்பு: உங்கள் குழந்தைக்கு தாய்ப்பால் மிகவும் சிறந்தது. குழந்தைக்கு 4 மாதங்கள் ஆனதும் தாய்ப்பாலுடன் கூடவே தானிய உணவு வகைகளைக் கொடுங்கள்.

REGISTERED NO. M. 4392
Registered as Newspaper in Srilanka

